விலை ரூபா 20 | பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 | கதிர் 72 | வள்ளுவர் ஆண்டு 2047 | தை 23, சனிக்கிழமை 06.02.2016

30c - 23c
தெளிவான வானம்

## நாக விகாரையில் வழிபட்டார் விக்கி



யாழ். நாக விகாரைக்கு நேற்றுச்சென்றிருந்த, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வழிபாடுகளில் ஈடுபட்டார். பக். 22

### புதிய அரசமைப்புக்காக கருத்தறியும் குழுவிடம் கருத்துத் தெரிவிக்காமல்

# தமிழர்கள் அக்கறையற்றிருப்பது எதிர்காலத்துக்குப் பெரும் பாதிப்பு

### வவுனியா அமர்வில் 15 பேர் மட்டுமே பங்கேற்றனர்

வவுனியா, பெப்ரவரி 6

இலங்கையில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் தமது உள்ளீடுகளை வழங்குவதற்கு தமிழர்கள் அக்கறையற்று இருப்பது எதிர்காலத்தில் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

மக்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை அந்தக் குழுவின் முன்பாக உந்தித் தள்ள வேண்டிய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் அக்கறையற்று இருப்பதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

புதிய அரசமைப்பை உருவாக்கு பக். 22

## அதி உச்ச அதிகாரங்கள் வேண்டும்

### மக்கள் கருத்தறியும் குழுவிடம் வலியுறுத்து

வவுனியா, பெப்.6

புதிய அரசமைப்பின் கீழ் தமிழர்களுக்கு அதி உச்ச அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. புதிய அரசமைப்புக்காக மக்கள் கருத்தறியும் உத்தியோகபூர்வக் குழுவின் முன்பாக நேற்று வவுனியாவில் கருத் பக். 23

## அரசியல் நிலைமை குறித்து ரணிலுடன் பேசினார் சுஷ்மா

*திருமலையில் முதலீடு செய்ய அழைப்பு*



கொழும்பு, பெப்.6

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து பக். 23

## சுரேஷ் அணியில் இருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியில் சிவமோகன் எம்.பி

யாழ்ப்பாணம், பெப். 6

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் உறுப்பினரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் க.சிவமோகன், அந்தக் கட்சியிலிருந்து விலகி



இலங்கைத் தமிழரசுக் கட்சியில் நேற்று இணைந்து கொண்டார். இதற்கான விண்ணப்பத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற பக். 22

## புலிகள் மீது கண்காணிப்பை வலுப்படுத்தவேண்டும் அரசு

*வலியுறுத்துகின்றார் கோத்தா*

கொழும்பு, பெப். 6

விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை கண்காணிப்பதற்கான பொறிமுறையை இலங்கை அரசு வலுப்படுத்த வேண்டும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக பக். 23

## ஐங்கரநேசனுக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், பெப். 6

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீரில் கழிவு ஒயில் கலந்ததாகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்கில், வடக்கு மாகாண விவசாய அமை பக். 24

## வாழ்வாதார உதவி கிடைக்காது உயிரை மாய்த்தார் குடும்பஸ்தர்

### தமிழக அகதிமுகாமிலிருந்து திரும்பி மூன்று மாதங்கள் கடந்த நிலையில்

யாழ்ப்பாணம், பெப். 6

அகதியாக இந்தியாவில் வசித்துப் பின்னர் நாடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் வாழ்வதற்கான எந்தவொரு வழியும் ஏற்படுத்தித் தரவில்லை என்று கூறி அவதிப்பட்டு உயிரை மாய்த்துள்ளார் என்று வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

நல்லாட்சி அரசில், வடக்கு முதலமைச்சரின் வார்த்தையையும் நம்பி ஈழத்துக்குத் திரும்பியதாகவும், ஆனால் வாழ்வதற்கான எந்தவொரு வழியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும், அதனால் வறுமையின் பிடியில் சிக்கி அவர் உயிரிழந்துள்ளார் என்றும் இறப்பு விசாரணையில் பக். 22




அவருக்கும் அப்ப விருந்து தான் பாருங்கோ...

## தமிழ்மொழி தேசிய கீதம் இனவாதத்தைத் தூண்டும்

*கூறுகின்றார் மகிந்த*

கொழும்பு, பெப். 6

நாட்டின் மிக முக்கிய தேசிய நிகழ்வான சுதந்திர தின நிகழ்ச்சியில் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதற்கு மேற்கொண்ட முயற்சி, பக். 22

## கூட்டமைப்பை இன்று சந்திக்கின்றார் சுஷ்மா

கொழும்பு, பெப்.6

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இலங்கை வந்த இந்திய வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை இன்று கொழும்பில் சந்தித்து முக்கிய பேச்சில் ஈடுபடவுள்ளார்.

நண்பகல் 12 மணியளவில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெறும் இந்தச் பக். 22

# இன்று கொழும்புக்கு வருகிறார் ஹுசேன்

*நாளை வடக்குக்கு பயணம்*



கொழும்பு, பெப்.6

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் அல்ஹுசேன் இன்று சனிக்கிழமை அதிகாலை இல்ங்கை வருகின்றார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாக, இலங்கை வரும் சையிட் அல் ஹுசேன், ஜனாதி பக். 24

## ஹுசேனைச் சந்திக்கக் காத்திருக்கும் காணாமற்போனோரின் உறவினர்கள்

*அனுமதி பெற்றுத் தருமாறு கோரிக்கை*

யாழ்ப்பாணம், பெப். 6

ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனிடம் மனு கையளிக்க அனுமதி பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

யாழ். திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நேற்று வெள்ளிக் கிழமை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பக். 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசித ராஜபக்ச கைது குறித்து பாதுகாப்புச் சபையில் ஆராய்வு

முன்னாள் ஜனாதிபதியின் மகன் லெப். யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டமை தொடர்பாகத் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

யோசித ராஜபக்சவின் கைது பற்றிய தகவல்களைத் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

அதற்கு, ஒரு ஆண்டாக நடத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பின்னரே, யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டதாகவும், சி.எஸ்.என் தொலைக்காட்சியின் தலைவராக அவர் செயற்பட்டதை உறுதிப் படுத்தும், 12 ஆயிரம் மின்னஞ்சல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், உயர் மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் விளக்க மளித்துள்ளனர். அப்போது, அரசியல்வாதிகள் மற்றும் அவர் களின் குடும்பத்தினரைக் கைது செய்வதற்கு முன்னர், அவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகளின் உண்மைத் தன்மையைச் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதியும், பிரதமரும் வலியுறுத்தியுள்ளனர். (த-5)

## வடக்கு மாகாண சபையில் ஆசனம் கோருகிறது ரெலோ

வடக்கு மாகாண சபையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கான அடுத்த சந்தர்ப்பம் தமது கட்சி உறுப்பினருக்கு வழங்கப்படவேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவிடம் ரெலோவின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வசம் உள்ள ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் அதன் பங்காளிக் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆண்டு வழங்குவதென முடிவு எட்டப்பட்டது.

இவ்வாறு எட்டப்பட்ட முடிவின் பிரகாரம் முதல் ஆண்டுக்கான சந்தர்ப்பம் கூட்டணியின் சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட மேரி கமலா குணசீலனுக்கு வழங்கப்பட்டது.

எனவே குறித்த ஆசனத்துக்கான அடுத்த சந்தர்ப்பத்தை ரெலோவுக்குப் பெற்று வழங்குமாறு கோரியே மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் ரெலோவின் சார்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, குறித்த கோரிக்கை தொடர்பில் கூட்டமைப்பின் தலைமைக்கு தெரியப்படுத்தி அடுத்த சந்திப்பில் ஆராய்ந்து பதில் வழங்குவதாகத் தெரிவித்தார். (த-101)

## மதுரை- யாழ்ப்பாண தகவல் வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். வர்த்தக தொழில்துறை மன்றமும் தமிழ் நாட்டின் மதுரை வர்த்தக தொழில்துறை மன்றமும் இணைந்து தகவல் பரிமாற்று வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.



இந்தியத் துணைத் தூதுவர் ஏ. நடராஜனின் ஏற்பாட்டில் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் கடந்த வாரம் வர்த்தகக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலே குறித்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. இது ஒரு தகவல் பரிமாற்று ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் உள்ளூர் முதலீட்டாளர்கள் இந்தியாவுக்குச் சென்று முதலிடுவதன் மூலமும், இந்தியாவில் இருந்து வந்து இங்கு முதலிடுவதன் மூலமும் தொழில் வளத்தை விருத்தி செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் கே. விக்னேஸும், தமிழ் நாட்டின் மதுரை வர்த்தக தொழில்துறை மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் என். ஜெகதீசனும் இந்த உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

இந்த நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த சுமார் 55 வர்த்தகப் பிரதிநிதிகளும், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஏ. நடராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வியாபார வர்த்தக, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ் வரன், வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண வர்த்தக சங்கத் தலைவர்கள், வங்கியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-ஐ-ரி)

## ஆடு திருட்டு அம்பலமானதால் தாக்கப்பட்டுள்ளார் மாணவன்

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி நீதிமன்ற வழக்கு ஒன்றுடன் தொடர்புடைய மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் அந்த மாணவன் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில் தெற்கில் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான மிருசுவில் தெற்கைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த மாணவன் சைக்கிளில் சென்றுகோண்டிருந்தபோது அயல் ஊரில் உள்ள நபர் தாக்கிக் காயப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த ஆடு திருடப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்தச் செல்லப்பட்ட நபரே மாணவனைத் தாக்கியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மிருசுவில் பகுதியில் ஆடு திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததாகக் கூறி குறித்த மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கொடுக்கப்படும் தகவல்கள் இரகசியம் பேணப்படவேண்டும். ஆனால் குறித்த மாணவனின் விடயத்தில், அவன் வழங்கிய தகவல் பொலிஸாரினால் வெளியே தெரிவிக்கப்பட்டதாகக் கூறியே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4-9)

## கூட்டுறவுச் சங்கத்தில் மோசடி; விசாரிக்க கோரி ஆர்ப்பாட்டம்

வவுனியா.பெப்.6

கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி குறித்து விசாரணையை துரிதப்படுத்துமாறு கோரி நேற்றுக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "பறிக்காதே பறிக்காதே", "தொழிலாளர் உரிமையை ப்றிக்காதே", "ஊழி யர்களால் உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பீட்டுக்கு நிவாரணம் பெற்றுத்தாருங்கள்", "ஊழல் மோசடி செய்யும் நிர்வாக சபையை கலைத்து புதிய நியாயமான நிர்வாக சபையை உருவாக்குங்கள்", "விசாரணைகளைத் துரிதப்படுத்துங்கள் குற்றவாளிகளை தண்டியுங்கள்", "சட்ட ஒழுங்கை மிறீய பணியாளர்களுக்கு நடவடிக்கை எடுங்கள்" என்ற பதாகைகளைத் தாங்கியவாறு உதவி ஆணையாளர் அலுவலகம் சென்று ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.



குறித்த அங்கத்தவர்களுடைய ஆர்ப்பாட்டத்தை அடுத்து இன்று வடக்கு மாகாணக் கூட்டுறவுத் துறை அமைச்சருடன் இடம்பெறும் கலந்துரையாடலில் இந்த விடயம் பற்றிப் பேசவுள்ளதாகவும், அதன் பின்னர் முடிவுகள் எடுப்பதாகவும் பதில் ஆணையாளர் தெரிவித்தார்.

இதனை ஏற்காத அங்கத்தவர்கள் சரியான முடிவு கிடைக்கும் வரை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்து ஆணையாளர் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டனர். நிலைமையை அறிந்து கொண்ட வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு மிக விரைவில் பணிப்பாளர் சபை நியமிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும், ஒரு மாத காலத்துக்குள் விசாரணைகளை முடிப்பதாகவும் தெரிவித்ததை அடுத்து அங்கத்தவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். (த-ஐ-ரி3)



யாழில் சட்டத்தைக் காக்க வேண்டிய காவலர்களே சட்டத்தை மீறிச் செயற்படும் சூழலில் சாதாரண பொது மக்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும். சட்டத்தின் பிரகாரம் பயணி ஒருவர் மிதிபலகையில் நின்றவாறு பயணிக்க முடியாத நிலையில் பொலிஸார் ஒருவர் இவ்வாறு பயணிக்கின்றார். (த-ஐ-101)

## வெங்காய வெடியினால் பாதம் இழந்த இளைஞர்

கிளிநொச்சி, பெப் 6

பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் மாலையில் வயலுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் வெங்காய வெடியில் அகப்பட்டு வலது காலை பாதத்துடன் இழந்தார்.

குறித்த சம்பவத்தில் பரந்தனைச் சேர்ந்த அகிலன் (வயது-26) என்பவரே வலது காலில் படுகாயமடைந்த நிலையில் பாதத்துடன் இழந்தார்.

நேற்று முன்தினம் மாலை நேரம் வயலுக்குச் சென்ற குறித்த இளைஞன் பன்றி வேட்டைக்காக இனந்தெரியாதவர்களால் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் வெங்காய வெடியில் அகப்பட்டுத் தனது வலது காலை பாதத்துடன் இழந்தார்.

இவ்வாறு படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுக் கட்சி பிரச்சினை காரணமாகவே ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 6
கூட்டுக் கட்சிப் பிரச்சினை காரணமாகவே தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் குமாரு சர்வானந்தா, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கவிருந்தமையினாலேயே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் - ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான இ.அங்கஜன் அந்தக் கூட்டத்தைச் சுகவீனம் என்று சொல்லி நிறுத்தியதாக, அவரது முகநூலிலேயே மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 3 ஆம் திகதி நடைபெறவிருந்தது. இறுதி நேரத்தில் அந்தக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுள் ஒருவரான இ.அங்கஜன் சுகவீனம் காரணமாக பங்கெடுக்க முடியாது என்று தெரிவித்தமைக்கு அமைய, மற்றொரு இணைத் தலைவரான மாவை.சேனாதிராசாவின் சம்மதத்துடன் கூட்டம் நிறுத்தப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன் தனது முகநூலில், குமாரு சர்வானந்தாவை கடுமையாக விமர்சித்துள்ளார். அவரை ஒரு 'வைரஸ்' என்று விமர்சித்ததுடன், அது மக்களுக்குத் தொற்றி விடக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இன்று வரையில் ஆரோக்கியமாகத்தான் இருக்கின்றேன் என்றும், எந்த வைரஸாலும் உற்றுக் கூடப் பார்க்க முடியாது என்றும் அவரது முகநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகவீனம் காரணமாகவே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்று தெரியவந்திருந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினரின் முகநூலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## விபத்தில் காயமுற்றவர் சாவு

யாழ்ப்பாணம், பெப். 6
மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

இலுப்பைக் கடவை வெள்ளாங்குளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த முருகேசு தனபாலசிங்கம் (வயது-65) என்பவரே உயிரிழந்தார்.

கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு வீடு சென்றுகொண்டிருந்தபோது அவரைப் பின் தொடர்ந்து சென்ற மோட்டார் சைக்கிள் அவரை மோதியுள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணையை மேற்கொண்டார். (த-4)

## இ.தொ.கவையும் சந்திக்கும் சுஷ்மா

கொழும்பு, பெப்.6
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையில் இன்று கொழும்பில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான், தலைவர் முத்துசிவலிங்கம் உள்ளிட்ட இ.தொ.காவின் உயர்மட்ட பிரமுகர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கான இந்திய அரசின் உதவித்திட்டங்கள், புதிய அரசமைப்பு மறுசீரமைப்புப் பணி உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப் படவுள்ளன. (து-சி)

தேவை தொடர்புக்கு: 077 2626 944
சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

காணி விற்பனைக்கு
மல்லாவி-துணுக்காய் பிரதான வீதியில் (B232) மல்லாவி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள 32 பரப்பு மேட்டுக் காணி (வீடு மற்றும் கடை கட்ட உகந்த) பரம்பரை உறுதியுடன் விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.
நடேசபிள்ளை செல்வராஜசிங்கம்
077 078 1611 (68524)(10)

விற்பனைக்கு
ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 860 5098, 076 728 3848

தேவை தொடர்புக்கு: 077 007 8802
யாழ் நகரப்பகுதிக்கு அண்மையாக வைத்தியர் வீட்டில் சனி, ஞாயிறு தினங்களில் வேலைசெய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

வாடகைக்கு
அரச பணிபுரியும் பெண்கள் இருவர் தங்குவதற்கு ஏற்ற அறை, சமையலறை வசதியுடன் நல்லூரில் வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 007 8802

பணிப்பெண் தேவை
கைதடியில் தங்கி நின்று வீட்டு வேலையை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
T.P: 077 222 4913 (63645)(10)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 05.02.2016 | வெற்றி வாரம் 1938 | வர்ணம் சிவப்பு
கன்னி
வெற்றி இலக்கங்கள்
14 41 43 50
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,000,000/-

நியத்த ஜய
வெற்றி வாரம் 434
திகதி 05-02-2016
வர்ணம் நீலம்
05 23 47 48 O
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 10,794,920/-
Web: www.dlb.lk

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
மேற்படி ஆலயத்தில் மாலைநேரத்தில் நடை பெற்று வந்த துர்க்கை அம்மன் ரதோற்சவம் நாளை (07.02.2016) ஞாயிறு காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் ஆரம்பமாகி நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஆலய அர்ச்சகர்
சிவஸ்ரீ நா. ஹரிதர்ச ஐயர்
அலங்கார உற்சவ பிரதமகுரு
சிவஸ்ரீ நா. சிவதர்சக் குருக்கள்

British College of Higher Studies
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913, 0777222422, 0714299935

யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...
PEARSON
London South Bank University
UK Degree in
CIVIL Engineering
Leading to BEng (Hons)
- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.
RECOGNIZED UGC
www.bcas.lk
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131
16 YEARS
Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ரணிலின் கருத்துக்கு நிர்மலநாதன் எம்.பி. கண்டனம்

மன்னார்.பெ.6
தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள், யுவதிகள் தற்பொழுது உயிருடன் இல்லை என நாட்டின் பொறுப்புள்ள பிரதமரான ரணில் விக்கிரமசிங்க பொறுப்பற்ற விதத்தில் கூறுவதை வன்மையாக கண்டிக்கின்றேன்எனவன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

காணாமற்போன உறவுகளை எமது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் நேரடியாக இராணுவத்திடம் கையளித்திருக்கின்றார்கள் என்ற வகையில் நாட்டின் பொறுப்பு மிக்க பிரதமர் கூறும் கருத்தாக அது அமையவில்லை எனவும் அவர் அந்தக் கருத்தை மீளப் பெற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மன்னாரில்நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை சுதந்திர தினத்தை புறக்கணித்துமேற்கொள்ளப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்துத்தமிழ் மக்களும், அரசியல் கைதிகளினுடைய உறவுகள், மற்றும் காணாமற்போனோருடைய உறவுகள் சார்பாகவும் இன்றைய சுதந்திர தினத்தை முற்று முழுவதுமாகப் புறக்கணித்திருக்கின்றோம்.

கடந்த தைப்பொங்கல் அன்று யாழ்ப்பாணம் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணாமல் போனவர்கள் உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்ற கருத்தை தெரிவித்து தமிழ் மக்களின் உள்ளங்களில் ஆழமான வடுவைப் பதிக்கக்கூடியதாக தெரிவித்த கருத்தை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நாட்டின் பொறுப்பு மிக்க பிரதமர் கூறும் கருத்தாக இது அமையவில்லை. ஏன் என்றால் காணாமற்போன உறவுகளை எமது பெற்றோர்கள் மற்றும் உற வினர்கள் நேரடியாக இராணுவத்திடம் கையளித்திருக்கின்றனர்.

நேரடியாகக் கையளித்ததற்குரிய சகல ஆவணங்களும் கையில் இருக்கின்றது. அதே போன்று தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள், யுவதிகள் தற்பொழுது உயிருடன் இல்லை எனும் கருத்தை நாட்டினுடைய பொறுப்புள்ள பிரதமர், பொறுப்பற்ற விதத்தில் கூறுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், சிறையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை என்ற கருத்தை அவர் சொல்வாரேயானால் அவர்களை இராணுவம் கொன்றதா? அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது? மேலும் இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதைக் கூறி விட்டுத் தான் நாட்டினுடைய பிரதமர் இவ்வாறான கருத்தைக் கூற வேண்டும்.

அதை விடுத்து காணாமற்போனவர்கள் தற்பொழுது உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறி எமது தமிழ் மக் களை அலட்சியப்படுத்துகிற குறித்த வார்த்தையைப் பிரதமர் கூறிச் சென்ற கருத்தை ஒட்டு மொத்த தமிழ் சமூகமும் வன்மையாக கண்டிப்பதோடு அவர் இந்த கருத்தை மீளப்பெறவேண்டும்.

எனவே காணாமல் போனோருக்கும், ஒப்படைக்கப்பட்டு காணாமல் போனோருக்கும் என்ன நடந்தது? அவர்களை எந்த அடிப்படையில் தண்டித்தீர்கள்? என்பதை ஒரு நாட்டின் பிரதமர் என்றவகையில் அதனை தெளிவுபடுத்திக் கூறவேண்டும்.

அதேபோன்று அண்ணளவாக 200 அரசியல் கைதிகளே சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றனர். நாட்டில் இரு இனங்களுக்கிடையில் ஆயுத ரீதியான போர் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இந்த போர் காரணமாக கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளை அரசு நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும். ஆனால் அவர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் தடுத்து வைத்து அவர்களைதண்டித்துக்கொண்டு எமது கடைகளில், வீடுகளில், பொது அமைப்புகளிடம் சிங்கக் கொடியை ஏற்றுமாறு சொல்வது ஒரு முறையற்ற செயலாகும்.

எனவே எமது உறவுகள் தவிக்கும் போது அவர்களின் விடுதலைக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(த-ஐ-56,21)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீடம்

**இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் - 2013/ 2014**

கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுக்கான (2013/ 2014) விரிவுரைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

1. முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு - 08.02.2016.
2. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு - 10.02.2016.
3. நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு - 10.02.2016.
4. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கு - 29.02.2016.

எனவே மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்,
02.02.2016
(சி/29022)(11,19,20)






காரைநகர்
## கிழவன்காடு கலாமன்றம்

*நடாத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜர் சுவாமிகளின் 169ஆவது ஆராதனை விழா*

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 2016.02.07 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3.30 - 5.30 மணிவரை

நிகழ்ச்சி நிரல்

- மன்றக் கொடியேற்றல்
- தொடக்கவுரை
- மங்கல இசை: ஈழத்துப் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள்
- இசை அர்ச்சனை : ஈழத்து பிரபல இசைக்கலைஞர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து கலாமன்ற யாழ்கிளையில் இருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கிழவன்காடு கலாமன்றம் , காரைநகர்.
(68494) (14,19)



## பதவி வெற்றிடங்கள் கோரல் - தற்காலிக அடிப்படையிலான வேலை மேற்பார்வையாளர்கள் (குடிசார்) NELSIP திட்டம் - வடமாகாணம்

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் NELSIP திட்டத்தில் வேலை மேற்பார்வையாளர்கள் (குடிசார்) சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.**

சேவை நிபந்தனைகள்
1. இப்பதவி தற்காலிகமானதும் தங்களது திருப்பதிகரமான சேவையை பொறுத்து புதுப்பிக்கப்பட கூடியதுமாகும்.
2. NELSIP திட்ட காலம் ஆகக்கூடியது 9 மாதங்களாகும். எனவே நியமன மானது திட்டத்தின் முடிவுறு காலம் வரையுமே வழங்கப்படும்.

அடிப்படைத் தகைமைகள்
1. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் வடமாகாணத்தை வதிவிடமாகக்கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. நல்ல தேக ஆரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
4. 18.02.2016 ஆம் திகதி அன்று 20 வயதுக்கு மேற்பட்டவராகவும் 65 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும்.
5. விண்ணப்பதாரிகள் முழுநேர வெளிக்கள வேலைகளுக்கு தகுதி உடையவர்களாக இருத்தல்வேண்டும்.

கல்வித் தகைமைகள்
1. இலங்கை அரச தொழில் நுட்ப கல்லூரியிலிருந்து தேசிய தொழில் நுட்ப சான்றிதழ் கற்கை நெறியில் (குடிசார்) குறைந்தது 2 வருடங்களை பூர்த்தி செய்திருத்தல்வேண்டும்.

**அல்லது**

அரசசேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக திருப்திகரமான சேவையாற்றி ஓய்வுபெற்ற வர்கள்.

தெரிவு செய்யப்படும் முறை
1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.
2. தகுதி பெற்றவர்கள் வடமாகாண எல்லைக்குட்பட்டவேலைகள் நடைபெறும் இடங்களில் கடமையாற்றவேண்டும். (சாத்தியபடுமாயின் வதி விடத்திற்கு அண்மையிலுள்ள வேலைத்தளங்களை மேற்பார்வை செய்யும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்)

சம்பளம்
பொது மாகாண நிர்வாக சுற்றறிக்கைக்கமைவாக வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை
1. A4 அளவிலான (21cm X 29 cm) தாளில் பூரணப்படுத்தப்பட்ட சுயவிவரப் படிவத்துடன் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் கையொப்பத்துடன் **"திட்டப்பணிப்பாளர், உள்ளூராட்சி திணைக்களம், வடமாகாணம், முதியோர் இல்ல வளாகம், A9 வீதி, கைதடி,யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அலுவலகத்திற்கு நேரடியாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. தபாலுறையில் இடது பக்க மேலுறையில் **"வேலை மேற்பார்வையாளர் (குடிசார்) பதவி"** என குறிப்பிடப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுதிகதி:
18.02.2016 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

திட்டப்பணிப்பாளர்,
உள்ளூராட்சி திணைக்களம், வட மாகாணம், முதியோர் இல்ல வளாகம்,
A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
05.02.2016
(சி.29020) (13.19.20)


# கட்டாக்காலி நாய்களுக்கும் விலங்கு விசர் நாய் தடுப்பூசி

*போடவேண்டும் என ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை*

யாழ்ப்பாணம்,பெப்.6
விலங்கு விசர் நாய் தடுப்பூசி நடவடிக்கைத் திட்டத்தில் வளர்ப்பு நாய்களுக்கு மட்டும் தான் இதுவரை காலமும் தடுப்பூசி போடப்பட்டு வந்தன. இனி வருங்காலங்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களுக்கும் விலங்கு விசர் நாய் தடுப்பூசி போடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களால் இன்று பெருமளவிலான அசௌகரியங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர். இதனால் பெரிய அளவிலான சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களைப் பிடித்து அழிக்கக்கூடாது என கடந்த அரசால் ஒரு திட்டம் போடப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தால் இன்று நாய்களின் பெருக்கம் அதிகரித்து விபத்துக்களும் ஏற்படுகின்றன. இதனை அவசரமாகத் தீர்ப்பதற்கு சரியான ஒரு முடிவும் எடுக்க வேண்டும் என மாகாணசபை உறுப்பினர் ஆனல்ட் கேட்டுக் கொண்டார்.

மேலும், உணவுத் திட்டத்தின் மூலம் முன்பள்ளிகளுக்குத் தினம் ஒரு சத்துணவு கொடுப்பதற்கு உதவி செய்து தரவேண்டும் எனவும், கர்ப்பிணித் தாய்மார்கள் குருதிச் சோகை போன்ற நோயினால் இறப்புக்களைச் சந்திக்கின்றனர். இவை தடுக்கப்பட வேண்டும். மற்றும் அரியாலை ஜே / 89 மீள்குடியேற்றப் பகுதியில் 921 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டபோதும், இன்னமும் 145 வீடுகளுக்கு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இது அந்தப் பிரதேசத்தில் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துகிறது. இதனைக் கவனத்தில் எடுத்து இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு இணங்க தாம் ஒத்துழைப்புத் தருவதாகவும் எழுத்து மூலமாக ஒரு கடிதத்தை தமக்கும் உரிய பொறுப்பதிகாரிகளுக்கும் தரும்படியும் இணைப்புக் குழுவின் தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

(த-ஐ-ரி5)

# எரிபொருள்களின் விலை உயர்வை மக்கள் மீது சுமத்தாதிருக்க நிதியம்

கொழும்பு,பெப்.6
உலகச்சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயர்வடைந்து செல்லும் சந்தர்ப்பங்களின்போது, அந்தச் சுமையை மக்கள் மீது சுமத்தி விடாமல் இருக்க பிரத்தியேகமான நிதியமொன்றை நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

உலகச்சந்தையில்எரிபொருள்களின் விலை மட்டங்கள் கீழிறங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றிலிருந்து கிட்டும் இலாபத்தைப் பயன்படுத்தியே இந்த நிதியம் நிறுவப்படவுள்ளது.

எரிபொருள்களின் விலைகள் உயர்வடையும்போது, மக்கள்முகம்கொடுக்க வேண்டி நேரும் சிரமம் மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் நட்டத்தைக் தவிர்த்து விடுவதற்காக இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாக அரசின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

(த-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபராவதற்கு தகுதியுடையவன் நானே

## *கூறுகின்றார் சுகத கம்லத்*

கொழும்பு, பெப்.6

சட்டமா அதிபருக்கான வெற்றிடம் காலியாகியுள்ள நிலையில் அடுத்த சட்டமா அதிபருக்கான அனைத்து தகைமைகளையும் கொண்டிருப்பதாக சொலிஸிட்டர் ஜெனரல் சுகத கம்லத் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் மூப்பின் அடிப்படையில் சிரேஷ்டத்துவத்தை மட்டுமன்றி, அனைத்துவிதமான தகைமைகளையும் கொண்டிருக்கின்றேன்" என்று நேற்று 'உதயனு'க்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் கூறினார்.

சட்ட அதிபராகக் கடமையாற்றிய யுவன்ஜன வன சுந்தர விஜேதிலக்க கடந்த மாதம் ஒன்பதாம் திகதியுடன் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டார்.

19ஆவது திருத்தத்திற்கு அமைவாக சட்டமா அதிபருக்குப் பொருத்தமானவரின் பெயரை முன்மொழியவேண்டும். இதனை அரசியல்சாசன சபை அங்கீரிக்கவேண்டும்.

எனினும், 19ஆவது திருத்தத்திற்கு முரணான வகையிலான நடைமுறையின் மூலம் புதிய சட்டமா அதிபர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் சேவை மூப்பின் அடிப்படையிலான சிரேஷ்டத்துவத்திலும் ஏனைய தகைமைகளையும் கொண்டுள்ளவரான தற்போதைய சொலிஸிட்டர் ஜெனரல் சுகத கம்லத்தை ஓரங்கட்டிவிட்டுச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வெளியிலிருந்து இந்த நியமனத்தை அரசு மேற்கொள்ளவுள்ளதாகதகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்நிலைகுறித்து சொலிஸிடர் ஜெனரல் சுகத கம்லத்திடம் வினவியபோது, சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள சிரேஷ்ட நிலை அதிகாரியாக நானே இருக்கின்றேன். அத்தோடு, அனைத்து தகைமைகளையும் நான் கொண்டிருக்கின்றேன். எந்தவிதமான ஊழல் மோசடிகளில் எனது பெயர் ஒருபோதும் பேசப்பட்டதில்லை. வினைத்திறன்மிக்க அதிகாரி எனப் பாராட்டப்பட்டவன் நான். என்மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருப்பின் வதந்திகளைப் பரப்புவதை விடுத்து வெளிப்படைத்தன்மை மிக்க விசாரணை நடவடிக்கை மூலம் அதனை நிரூபிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துவெளியிடுகையில், நான் நீதி அமைச்சின் செயலாளராக எட்டாண்டுகள் பணியாற்றினேன். அரசியல் யாப்பின் 52ஆவது உறுப்புரைக்கு அமைவாக அரசாங்க திணைக்கள உத்தியோகத்தரொருவர் தேவையின் நிமித்தமாக வேறு அரசாங்க திணைக்களங்களில் சேவையாற்றினாலும் அந்தப் பதவிக்காலமானது எந்தவித கழிவுமின்றி ஒட்டுமொத்த சேவைக்காலத்துடன் இணைத்துக்கொள்ளப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நான் நீதியமைச்சில் வகித்து உயர் பதவியாக இருந்தபோதும் மீண்டும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து உரியவகையில் சேவைமூப்பை பெற்றுக்கொண்டேன்" எனக் குறிப்பிட்டார்.

நாடொன்று ஒரே இரவில் ஜனநாயக நாடாக மாறி விடுவதில்லை. அது மெதுவாகவே இடம்பெறும் எனச் சுட்டிக்காட்டிய அவர், சட்டமா அதிபர் நியமன விடயத்தில் நல்லாட்சியின் உண்மையான அடிப்படைகள் பாதுகாக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டார். தமிழில் தேசிய கீதம் பாடியமையை வரவேற்ற அவர் அது மிகவும் அழகான விடயம் எனக் குறிப்பிட்டதுடன், இது நல்லிணக் கத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமானது எனக் கூறினார்.

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், இந்த விடயமானது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தாம் சட்டமா அதிபராகத் தெரிவானால் அரசியல்கைதிகளின் விடுதலைக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படவுள்ளதாகவும் கூறினார்.

(த-சி)

# போக்குவரத்து ஒழுங்குகளை மீறும் பஸ் சாரதிகளின் லைசன்ஸ் நிறுத்தம்

## *யாழ். அரச அதிபர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 6

போக்குவரத்து விதிகளை மீறும் தனியார் பயணிகள் பேருந்து சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரமும், வாகன அனுமதிப் பத்திரமும் ரத்துச் செய்யப்படும். அத்துடன் தொடர்ச்சியாக வீதிகளில் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் எச்சரித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் வாகனங்கள் போட்டி போட்டுக் கொண்டு செல்வதால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டு வரும் நிலையிலேயே, அரச அதிபர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து விதிகளை மீறும் பஸ் சாரதிகளால் பெரிய விபத்துக்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே, இனிவரும் காலங்களில் போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக வாகனங்களைச் செலுத்துமாறு சாரதிகளைக் கேட்டுக் கொள்கின்றேன்.

அவ்வாறு விதிகளை மீறிச் செலுத்தும் சாரதிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ரத்து செய்வதுடன் வாகன அனுமதிப்பத்திரமும் எதிர்வரும் காலங்களில் ரத்து செய்யப்படும்.

எனவே யாழ் மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பேருந்துகளின் சாரதிகள் உரிய வீதிப் போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்துப் பயணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினருடன் இணைந்து வீதிகளில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

(த-5-ரி5)

# நல்லாட்சியை விரட்டியடிப்பதற்கு இறையாசி கோரும் மகிந்த அணி

கொழும்பு, பெப் 6

நல்லாட்சி அரசின் நயவஞ்சக செயற்பாடுகளைக் கண்டித்து ஒரு இலட்சம் தேங்காய்களை உடைத்து எதிர்ப்பை வெளியிடும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு சீனிகம ஆலயத்தில் (சீனிகம தெவொல் மகா தேவாலய) நடைபெறவுள்ளது என்று மகிந்த ஆதரவு அணி அறிவித்துள்ளது.

பொது எதிரணி என தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் ஏற்பாடுசெய்துள்ள இந்நிகழ்வில் பிக்கு அமைப்புகளும் பங்கேற்கவுள்ளன.

ஆட்சியை விரட்டியடிப்பதற்கு இறையாசி வேண்டும்' எனக் கோரி விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

எவ்.சி.ஐ.டி. ஊடாக அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், ஜனநாயக விரோதச் செயற்பாடுகளும் தலைதூக்கியுள்ளன. இந்நிலையிலேயே அரசை விரட்டியடிப்பதற்கு இறை ஆசி வேண்டி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று ஏற்பாட்டுக்குழு உறுப்பினர் ஒருவர் நேற்று உதயனி'டம் தெரிவித்தார்.

அதேவேளை, மஹிந்த அணியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றைய தினம் ஆர்ப்பாட்டமொன்று அப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை தேசப்பற்று அமைப்பால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை 8 மணிக்கு அம்பலாங்கொட நகரில் ஒன்றுகூடவுள்ள அவர்கள், பேரணியாக சீனிகம ஆலயத்துக்கு நடந்துசென்று, எதிரணியின் நடவடிக்கைக்கு எதிராக யாகம் வளர்க்கவுள்ளனர்.

(த-சி)

# அரசு கேட்டதை விடஅதிக மாதங்கள் பணி

## *வடக்கு ஆளுநர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 6

இலங்கை அரசு கேட்டுக் கொண்டதை விட அதிக மாதங்கள் பணியாற்றிவிட்டதாக வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ். பளிகக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராகக் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் பொறுப் பேற்றுக் கொண்ட பளிகக்கார, ஓய்வு பெறப்போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவித்திருந்தார். இவரது இடத்துக்கு றெஜினோல்ட் குரே நியமிக்கப்படவுள்ளார்.

தனது ஓய்வு குறித்த இந்திய ஊடகமான, 'த இந்து'வுக்கு கருத்துத் தெரிவித்துள்ள பளிகக்கார, இலங்கை அரசு கேட்டுக் கொண்ட காலத்தை விட அதிகமான காலம் ஆளுநராகப் பணியாற்றிவிட்டேன்.

நான் ஆளுநராகப் பதவியேற்ற காலப் பகுதியில் ஆறு மாதங்கள் மாத்திரமே பணியாற்றுவது என்ற புரிந்துணர்வு காணப்பட்டது. அதனை விட அதிக மாதங்கள் பணியாற்றி விட்டேன். ஆளுநர் பதவியை விட்டு விலகத்தவுள்ளேன் என்பது சரியானதல்ல. நான் எனது ஓய் [illegible] றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(த-5)

**வீடு வாடகைக்குத் தேவை**
நெல்லியடி, கரவெட்டி மற்றும் அதனை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
(68535)(14,19,20)
தொடர்பு: 076 902 1524

**காணி விற்பனைக்கு** 077 614 6434
யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி நல்லூர் வீதியில் 1 ¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**காணி விற்பனைக்குண்டு**
இல.13/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 530 0493 (68513)(11,19,20)

**தவறிவிட்டது**
மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த வரதராசா நிசோதயன் என்பவரின் மோட்டார் சைக்கிளின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் சாங்கத்தானைக்கும் ஐயா கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
077 271 8341 (68490)(11,19)

**வீடு வாடகைக்கு உண்டு**
இல.991, கே.கே.எஸ் வீதியில் அரசடிப் பிள்ளையார் கோயில் அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
(68682)(11,19) 077 545 5878, 071 173 4375

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ் மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 517 1347

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
077 614 6434 (68509)(11,19,20)

**அலுவலக சுத்திகரிப்பாளர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் நகை வியாபார நிறுவனம் ஒன்றுக்கு பெண் சுத்திகரிப்பாளர்கள் (Cleaning Service) தேவை.
075 999 2769

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தினைச் சேர்ந்த 1983 இல் பிறந்த (8 செவ்வாய், பூரம்) சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
(68514) (14,19,20)
தொடர்பு: 077 927 9382

**அறை வாடகைக்கு** 021 222 7801
பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகில் வேலை செய்யும் / படிக்கும் இரண்டு பெண்கள் தங்குவதற்கு அறை வாடகைக்கு உண்டு.
(68504)(11,19)

**கல்வி** 077 423 3845
யாழ்ப்பாணம், வவுனியா, கிளி நொச்சி ஆகிய இடங்களில் தனியாகவோ அல்லது குழுவாகவோ A\L, இணைந்த கணிதம், பௌதீகவியல் வகுப்புக்களுக்கு தொடர்பு கொள்ளவும்
(68490)(11,19,20)

**பணியாளர் தேவை** 077 025 6640
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை ஒன்றுக்கு தகைமையுள்ள பெண் ஒருவர் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**வேலை வாய்ப்பு**
இதோ ஒரு அரிய சந்தர்ப்பம், இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். புதிதாகத் திறக்கப்படவுள்ள தொழிற்சாலைக்கு ஆண், பெண் உடனடியாகத் தேவை. (ஜேம், பிஸ்கட், யோகட், டிபிடிபி, நூடில்ஸ்) ஆகிய பிரிவுகளுக்கு (பொதியிடல், லேபல்) கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். (1 Week 10,000 பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். (50 வெற்றிடம் மட்டும் உள்ளது) வயது 18-55.
076 672 2606, 076 656 5374

**மணமகள்கள் தேவை**
*1976இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 33 பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்குப் படித்த மணமகள் தேவை.
*1972இல் பிறந்த 3இல் சூரியனும் செவ்வாயும், 23 பாவமும் உடைய அரசநிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு வேலை அல்லது வேலை இல்லாத மணமகள் தேவை.
*1971 இல் பிறந்த 7இல் செவ்வாய் 45½ பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1974 இல் பிறந்த ஒன்றில் செவ்வாய் 80 பாவ முடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் பட்டதாரி மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1979இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும் 29 பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை
தொடர்பு
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, [illegible]
077 607 0862

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்திகரிப்புப் பணிக்கு சிற்றூழியர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சிற்றூழியர்கள் விடுதிகளைக் கூட்டிச் சுத்தம் செய்யுமாறு தமக்குப் பணிக்க வேண்டாம் என்று கோரி நேற்று ஒன்றுகூடினர்.

வைத்தியசாலைகளில் நோயாளர் விடுதிகளைக் கூட்டுவது சுத்திகரிப்புப் பணியாளர்கள் தான். தாம் அந்த வேலையைச் செய்ய வேண்டியதில்லை. 2006 ஆம் ஆண்டு அந்தப் பணி தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மூலமாகவே அதனைச் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தற்போது எந்தவொரு வைத்திய சாலையிலும் அந்த நடைமுறை இல்லை. ஆனால் தற்போது விடுதிகளைச் சிற்றூழியர்களே கூட்ட வேண்டும் என்று பணிப்பாளர் விடுதிகளின் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார் என்று தெரிவித்துள்ள சிற்றூழியர்கள், அது பற்றிக் கதைப்பதற்காக நேற்று ஒன்று கூடியிருந்ததாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியுடன் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்ததாவது:-

சிற்றூழியர்களுக்கான ஒழுக்கக் கோவையில் உள்ளதன்படி நோயாளர் விடுதிகளைக் கூட்ட வேண்டியது சிற்றூழியர்கள் தான். அவர்களுக்குரிய வேலைகளை அவர்கள்தான் செய்ய வேண்டும். பல சிற்றூழியர்கள் அங்கு சீராகப் பணி புரிந்தாலும் ஒருசிலர் அதனைக் குழப்புகின்றனர். அந்த ஒருசிலர் வைத்திய சாலையில் சொகுசாக இருந்து விட்டுச் செல்பவர்கள்.

நோயாளர் நலன் கருதி ஒதுக்கப்பட்ட கடமைகளை அவர்கள் கட்டாயம் செய்ய வேண்டும். அதனைச் செய்யாத ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். சிற்றூழியர்கள் பலர் கடமைகளைச் செய்யும் போதும் சிலர் அதனைக் குழப்புவதற்குத் தூண்டுதலாக இருக்கின்றனர். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடமைகளைச் செய்யாது நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பின்னர் அத்தகைய குறைபாடுகள் கண்டறியப்பட்டு சீர் செய்யப்பட்டு வருகின்றன.

அவர்கள் நேற்றுமுற்பகல் சந்திக்க வந்திருந்தனர். ஆனால் கூட்டம் ஒன்றுக்குச் சென்றதனால் அந்தநேரம் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. பிற்பகலே சந்திக்க முடிந்தது என்று தெரிவித்தார்.

(த-4)

# காலநிலை அவதான திணைக்கள களஞ்சியத்தில் பொருள்கள் திருட்டு

கொழும்பு,பெப்.6
சிங்கராஜவனத்தின் எல்லையில் கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரத்து 700 அடிகள் உயரமான கொங்கால மலையின் உச்சியில் காலநிலை அவதான திணைக்களத்தால் அமைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு கோடி ரூபா பெறுமதியான ஒரு தொகை உபகரணங்கள் காணாமற் போயுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயமொன்றினுள் அமைந்துள்ள இந்த நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த கணினிகள், கமராக்கள், அளவிடும் உபகரணங்கள், இலத்திரனியல் சாதனங்கள், நீர்ப்பம்பிகள் என்பவை அந்தக் களஞ்சியத்தில் இருந்து காணாமற் போயுள்ளதைக் காலநிலை அவதான திணைக்களத்தின் அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

கடந்த ஆண்டின் மே மாதம் வரையில் அங்கு கட்டடம் ஒன்றைக் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் பின்னர் அந்தக்களஞ்சியம் மூடப்பட்டிருந்ததாகவும், ராடர் தொகுதியோடு சம்பந்தப்பட்ட அந்த சாதனங்களிலும், உபகரணங்களிலும் காணப்பட்டிருந்த சில குறைபாடுகள் காரணமாக அவற்றைச் சீர்ப்படுத்துவது தொடர்பாக அவற்றை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்காகக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-22)

# கடந்த மாதம் டெங்கினால் 5 ஆயிரம் பேர் வரை பாதிப்பு

கொழும்பு,பெப்.6
இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் டெங்கு நுளம்புகளால் ஏற்படும் உயிர்கொல்லி நோய்க்குள்ளாகி 5ஆயிரம் பேர் வரை மருத்துவமனைகளில் சேர்க்கப் பட்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமான வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

மேலும் டெங்கு நோயினால் தாக்கப்பட்டு 8 பேர் இந்த மாதத்தில் சாவடைந்துள்ளதுடன், 2015 ஆம் ஆண்டில் டெங்கினால் 58 பேர் சாவடைந்துள்ளதோடு, 28 ஆயிரம் பேர் டெங்கு நோய்க்கு உள்ளாகியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அதிக மழை, டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்குக் காரணமாகியிருந்துள்ளதோடு சுற்றாடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் மிகக் குறைந்த கவனம் செலுத்தப்பட்டிருந்தமையும் இதற்கு மேலுமொரு காரணமாகியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-22)

# ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.6
காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் விசேட கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக மாவட்டம் தழுவிய அளவில் மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி நடைபெறவுள்ளது.

மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கில் கனடாவில் வாழும் சிவராசா பாலராஜாவின் அனுசரணையில் இந்த ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான சொற்தொகுதிகளை காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

(ஐ-ரி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
30
.
08
.
1931



உதிர்வு
18
.
01
.
2015

யாழ்.தொல்புரத்தை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது சுதுமலை தெற்கை வதிவிடமாகவும் கொண்டிருந்த

அமரர் திருமதி இராசம்மா இலட்சுமணர்
அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
திதி : 06.02.2016

எங்கள் ஆருயிர் தெய்வமே குலவிளக்கே அம்மா – நீங்கள்
எங்களை எல்லாம் விட்டுச் சென்று
ஆண்டு ஒன்று சென்றாலும் – நாங்கள்
உங்கள் பிரிவால் தினம் தினம்
வாடுகிறோம் அம்மா – வாடுகிறோம்
அம்மா நீங்கள் எங்களை எல்லாம் மறந்து
இந்த உலகை விட்டு நிலையான
உறக்கத்தில் நீங்கள் கரம் பிடித்த
கணவரிடம் சென்று விட்டீர்களோ – அம்மா
சென்று விட்டீர்களோ – நாங்கள் உங்களை காணாது
அம்மா அம்மா என்று கதறி அழும் ஓசை காற்றோடு கலந்து
உங்கள் காதுகளில் கேட்கவில்லையோ அம்மா கேட்கவில்லையோ
அம்மா பத்து மாதம் உங்கள் கருவறையை எங்களுக்கு வீடாக்கி
எங்களை எல்லாம் பெற்றெடுத்த அன்புத் தெய்வமே
எங்கே தான் ஓடி மறைந்தீர்கள்
அம்மா ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட
இருந்தாலும் அம்மா என்று சொல்வதற்கும்
அன்பு செலுத்துவதற்கும் எங்களுக்கு
இவ் அவனியில் நீங்கள் இல்லையே அம்மா நீங்கள் இல்லையே
அம்மா அம்மா என்று உங்களை காணாது புலம்பித் தவிக்கும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(68494)
(14,19,20)
அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு.



## மரண அறிவித்தல்

திருமதி கதிராசிப்பிள்ளை சுப்பிரமணியம்



ஆவரங்கால் மேற்கு சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிராசிப்பிள்ளை சுப்பிரமணியம் 04.02.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் கனகரட்ணம்(கொழும்பு), விக்கினேஸ்வரன் (கனடா), கையிலநாயகி, கோகிலநாயகி, லோகநாயகி(கனடா), மனோகரன், இந்துநாயகி(லண்டன்), கிருபானந்தன்(லண்டன்), தர்மசீலன் (ஜேர்மனி), தவபாலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விமலாதேவி (கொழும்பு), விஜயகுமாரி (கனடா), முருகமூர்த்தி, ஸ்ரீகுமரன், பாஸ்கரன்(கனடா), சாந்தினி, யோகசிவம் (லண்டன்), துளசி (லண்டன்), சுஜித்திரா (ஜேர்மனி), சிவபாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரணவன், மாதினி, ரகுபரன், துளசிகரன், சபிதா - ஜெயகிருஷ்ணா, ராகுலன், பார்த்தீபன், ஜெனு, ஜெனீசன், டினோஜா, வட்சிகா, கீர்த்திகன், பிரவீன், ப்ரித்வீன் பானுகா, சானுசன், வானுசன், விஸ்ணுஜன், அக்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு,
சிவன் வீதி.
(68506, 14,19)
தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 833 3905


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரமாகக் குடியமர்ந்தால் மட்டுமே அரை நிரந்தர வீடு

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முகவர் நிறுவனங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாகக் குடியமர்ந்தால் மட்டுமே அரை நிரந்தர வீடுகள் வழங்கப்படும் என பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரை நிரந்தர வீடுகளை வழங்கும் முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வலி.கிழக்கு, வலி.வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே குறித்த விடயம் தொடர்பில் பேசப்பட்டது.

வலி.கிழக்கு, வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த ஆண்டு மக்கள் மீள் குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

25 வருடங்களின் பின்னர் சொந்த இடங்களுக்கு விடுவிக்கப்பட்ட மக்களின் வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மக்களுக்கு முதலில் தற்காலிகக் கொட்டில்கள் பின்னர் அரை நிரந்தர வீடுகள், வீடுகள் என்பவை அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

> “ 25 வருடங்களின் பின்னர் சொந்த இடங்களுக்கு விடுவிக்கப்பட்ட மக்களின் வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன ”

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாக மீளக்குடியமர்ந்தால் மாத்திரமே, அரை நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்படும் என்று வீட்டுத் திட்டத்தை வழங்கும் யூ.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் தெரிவிப்பதாக, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மக்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் மிகுந்த பற்றைக் காடுகளாக இருக்கின்றன. அத்துடன் மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என்று குற்றம் சுமத்திய மக்கள், இவ்வாறானதொரு பிரதேசத்தில் பெண் பிள்ளைகளுடன் எவ்வாறு இரவு வேளைகளில் இருப்பது என்று கேள்வி எழுப்பினர்.

எனவே, நிரந்தரமாகக் குடியமர்ந்தால்தான் வீட்டுத் திட்டம் என்ற நிபந்தனையைத் தளர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கூட்டங்களில் கருத்துத் தெரிவித்த யூ.என். எச்.சி.ஆர். பிரதிநிதி, வளலாயில் 42 வீடுகள் தமது நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அதில் 16 வீடுகள் தற்போதும் வெறுமையாக இருக்கின்றன. அந்தக் காணிகள் பற்றை வளர்ந்த நிலையில் உள்ளன. எமக்கு நிதி வழங்கியவர்கள், களப் பயணம் மேற்கொண்டு வந்து பார்க்கும்போது இவ்வாறு ஏன் வீடுகளை வழங்கினீர்கள் என்று கேட்கின்றனர். இதனால் தான், மக்கள் வந்து குடியமர்ந்தால் அரை நிரந்தர வீடுகளை வழங்குகின்றோம் - என்று தெரிவித்தார்.

(து-ஜ-5-ரி5)



யாழ் மாநகர சபை மைதானத்துக்கு அருகே செல்லும் கழுவு நீர் வழிந்தோடும் வடிகால் தூர்ந்து பழுதடைந்த நிலையில் உள்ளது. அத்துடன் வடிகால் அருகே செல்லும் வீதியும் பலத்த சேதமடைந்து காணப்படுகின்றது. நகரில் உள்ள வடிகால்கள் ஊடாக வரும் கழிவுநீர் பின்னர் இந்த வடிகால் ஊடாகவே கடலுக்குள் செல்கிறது. (து-ஜ-17)

# டெங்கு, நுளம்பு ஒழிப்புக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள்



யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.மாநகராட்சி மன்றச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் மக்கள் மத்தியில் டெங்கு மற்றும் நுளம்பு ஒழிப்புக்கான புதுவித விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கிராமம் கிராமமாக மக்கள் மத்தியில் இதற்கான வீதி நாடகங்களை நடத்தி டெங்கு மற்றும் நுளம்புகளை ஒழிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பி.யசிதரனின் நெறியாள்கையில் இந்தத் தெரு நாடகம் பண்ணை மீனாட்சிபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

யாழ்.நகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆறுமுகதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த வீதி நாடகம், கொட்டடி நாவாந்துறை போன்ற கரையோரப் பிரதேசங்களில் இடம்பெற்றன.

டெங்கு மற்றும் நுளம்புக் கட்டுப்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் தொடர்ந்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த வீதி நாடகங்களின் ஆற்றுகை மாந கராட்சி மன்றத்துக்குட்பட்ட சகல இடங்களிலும் நடத்தப்படவுள்ளன.

(து-ஜ-17)

# கழிவகற்றலுக்கு 40 வாகனங்கள் யாழ்.மாநகர சபை துரித ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.மாநகரப் பகுதியில் திண்ம மற்றும்திரவக் கழிவகற்றலுக்காக 40 வரையிலான வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தற்போது மாநகரப் பகுதியில் திண்மக் கழிவகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மாநகரப் பிரதேசத்தின் சகல பிரதேசங்களிலும் தேங்கிக் காணப்படும் கழிவுப் பொருள்கள் மற்றும் வீட்டுச் சுற்றாடல்களில் மக்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் போன்றவற்றை அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

குறிப்பாக மாநகராட்சி மன்றத்தில் பழுதடைந்த கழிவகற்றும் வாகனங்கள் திருத்தியமைக்கப்பட்டுக் கழிவகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ளன.

அதனைவிட மேலதிகமாக சில உழவு இயந்திரங்களும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுக் கழிவகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கழிவகற்றும் திறந்த வாகனங்களில் கழிவுப் பொருள்களைக் கொண்டு செல்லும்போது அவை வலைகளால் மூடப்பட்டே எடுத்துச் செல்லப்படுகின்றன.

பறவைகள் கழிவுகளை இழுத்துச் செல்லாத முறையில் கழிவகற்றும் வாகனங்கள் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறையில் இந்தக் கழிவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

குறிப்பாக மக்கள் தமது வீட்டுச் சுற்றாடல்களில் சேகரிக்கும் திண்மக்கழிவுப் பொருள்களைத் தரம்பிரித்து வேறாக்கி அவற்றை விநியோகிப்பதே சிறந்தது.

தரம் பிரித்து விநியோகிப்பதன் மூலம் கழிவகற்றும் பணியை இலகுபடுத்த முடியும்.

இதேவேளை, யாழ்.நகரில் வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் போன்றவற்றில் உள்ள திண்மக் கழிவுகளை அகற்றும் பணிகள் தினமும் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கழிவகற்றும் துரிதமான சேவையால் தற்போது மாநகரப் பகுதியில் கழிவுகள் தேங்குவது குறைவடைந்துள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(து-ஜ-17)

# பொன்னாலை அபிவிருத்தி முன்மொழிவுகள் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

மீள்குடியேற்றப்பட்ட பொன்னாலை மக்களின் உட்கட்டுமான வசதிகள் தொடர்பாக முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு இணைத் தலைமையூடாக மத்திய அரசின் மீள்குடியேற்ற அமைச்சுக்கு பாரப்படுத்தப்படவுள்ளன.

வலி.மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி குணவதி சண்முகலிங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வலி. மேற்குப் பிரதேச சபை தலைமை மண்டபத்தில் பொன்னாலை மேற்கு மீள்குடியேற்றக் கிராமமட்ட சகல பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அலுவலர்களை மையப்படுத்தியதாக முன்வரைவுகள் பெறப்பட்டு தயாரிக்கப்படவுள்ளன.

இதில் மீள்குடியேற்ற வீதிகள், கிராம மட்ட மின்சார வசதியற்ற வீதிகள், மலசல கூட வசதி, குடி தண்ணீர்வசதி, வாய்க்கால்அமைத்தல், மதகு அமைத்தல், உள்ளிட்ட தலைப்புக்களில் விவரங்கள் கோரப்பட்டு முன் மொழிவுகள் தயாரிக்கப்படவுள் ளன.

இந்தக்கூட்டத்துக்குமீள்குடியேற்ற கிராமங்களின் பொது அமைப்புக்களின் நிர்வாகிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (து-ஜ-50)

# பொலிஸார் பிடியில் தனியாரின் காணி

## மீட்டுத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

கொடிகாமம் பொலிஸாரால் அபகரித்து வைக்கப்பட்டுள்ள எனது காணியை மீட்டுத்தாருங்கள் என மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிட்டும் பலன் கிட்டவில்லை என காணியின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸார் எனது வீட்டுடன் கூடிய காணியை கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் அபகரித்து வைத்துள்ளனர். குறித்த எனது காணியை மீட்டுத்தாருங்கள் என பொலிஸாரிடம் கோரியும் பயன் ஏதும் கிட்டவில்லை. எனது காணியில் பயன்தரும் 10 தென்னை மரங்கள் உள்ளன. இதன் மூலம் மட்டும் மாதம் ஒன்றுக்குச் சுமார் மூவாயிரம் ரூபா வருமானம் ஈட்ட முடியும்.

இந்த நிலையில் நீண்டகாலமாக அபகரித்து வைத்துள்ள காணிக்கு பொலிஸார் பெயருக்கு 650 ரூபா மட்டும் வாடகைப் பணம் வழங்குகின்றனர். ஆனால் நாம் குடியிருக்கும் வீட்டுக்கு மாதம் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபா செலுத்தவேண்டிய நிலையிலேயே தொடர்ந்தும் வாழ்கின்றோம்.

தற்போது மகளின் திருமணத்துக்கான ஆயத்தப் பணிக் காக எமது சொந்த வீட்டைப் பெற்றுத் தருமாறு மனித உரிமை ஆணைக் குழுவில் கடந்த ஆண்டு முறையிட்டோம். அந்த முறையீட்டுக்கும் சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

எனவே எனது காணியைக் கொடிகாமம் பொலிஸார் விடுவிக்க உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

(து-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர் இல்லாததால் வீடு திரும்பிய நோயாளர்கள்

## அக்கராயன் வைத்தியசாலையில்

கிளிநொச்சி.பெப்.6

கிளிநொச்சி அக்கராயன் வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் மருத்துவர் இல்லாததாலும், மருந்து மாத்திரைகள் வழங்கப்படாமையாலும் நோய்களுக்கான சிகிச்சை பெறாமல் திரும்பிச் சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

30 நிமிடங்களுக்கு மேல் வெளிநோயாளர் பிரிவில் எந்தவிதமான சிகிச்சைகளோ, மருந்து மாத்திரைகளோ வழங்கப்படவில்லை எனவும், தாம் நெடுந்தூரத்தில் இருந்து சிகிச்சைக்காகச்சென்ற போது வைத்தியசாலையில் குறித்த செயற்பாடுகள் நடைபெற மாட்டாது என்று அங்கு நின்ற வைத்தியசாலை ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து வீடு திரும்பியதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலையாகிய அக்கராயன் ஆதார வைத்தியசாலையில் நேற்றுக் காலையில் இருந்து நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காகக்காத்து நின்றனர். ஆனாலும் அரை மணித்தியாலங்களுக்கு மேல் அங்கு எந்த விதமான செயற்பாடுகளும் இடம்பெறாததால் அங்கு நின்ற ஊழியர்களிடம் இது தொடர்பாகக் கேட்டுள்ளனர்.

இதன்போது வைத்தியசாலையில் இன்று சிகிச்சைகள் இடம்பெறாது என்றும், தாதியர்கள், மருத்துவர் வரமாட்டார்கள் என்றும் கூறியதை அடுத்து அந்த மக்கள் நோய் களுக்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளாதுதிரும்பிச் சென்றுள்ளனர்.

காலையில் வேலைக்குச் செல்ல வேண்டும், அதற்கு முன்னர் வீட்டில் சமையல் வேலைகள் உட்பட பல வேலைகள்செய்யவேண்டும்.அதனாலே காலையில் வைத்தியசாலைக்குச் சென்றோம். ஆனால் வைத்தியசாலையில் மருத்துவச் செயற்பாடுகள் இடம்பெறமாட்டாது என்று தெரிவித்ததை அடுத்து அங்கு காத்திருக்க முடியாது வீட்டுக்கு வந்து விட்டோம் என நேற்றைய தினம் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறாது திரும்பி சென்ற பெண்களைத்தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பப் பெண்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலையின் குறித்த செயற்பாடு தொடர்பாகக் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நேற்று முன்தினம் இரவு மது போதையில் வைத்தியசாலைக்குள் நுழைந்த குழுவினர் அங்கு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அச்சமடைந்த வைத்தியசாலை ஊழியர்கள் தமக்குப் பொலிஸ் பாதுகாப்பு வேண்டும். அப்போது தான் பணிகளை ஆரம்பிப்போம் என்று கூறியிருந்தனர்.

இதனாலேயே குறித்த வைத்தியசாலையில் நேற்றுக் காலை 20 நிமிடங்கள் வைத்திய சேவைகள் இடம்பெறவில்லை. ஆனால் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தியதை அடுத்து வைத்தியசாலையில் வைத்திய சேவைகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மாலை 6.30 மணியளவில் அக்கராயன் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் படுகாயமடைந்த நிலையிலும், கால்கள் நசியுண்ட நிலையிலும் இருந்த மூவரை அங்கு நின்ற இளைஞர்கள் குறித்த வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

அதன்போது வைத்தியசாலையில் மருத்துவர் இருக்கவில்லை எனவும், அம்புலன்ஸ் வாகனம் நின்றபோதும் அதற்கான சாரதி இல்லை என்று தெரிவித்து படுகாயமடைந்தவர்கள் அரை அணி நேரத்துக்கு மேல் காக்க வைக்கப்பட்டதாகவும், இதனால் இளைஞர்கள் கோபமடைந்து வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் முரண்பட்டதாகவும் விபத்தில் படுகாயடைந்த மூவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற இளைஞர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-21-ரி3)



## முல்லைத்தீவில் 1259 வீதிகள் இன்னமும் குண்டும் குழியுமாக

முல்லைத்தீவு.பெப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு குண்டும் குழியுமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இன்னும் 1259 வீதிகள் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக 7 ஆயிரத்து 72 மில்லியன் ரூபா தேவைப் படுவதாகவும் அந்த புள்ளி விவரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த மாதம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தின் போது மாவட்ட செயலகத்தால் விடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் சார்ந்த புள்ளி விவரத்திலேயே இந்தத் தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட 429 கிலோமீற்றர் நீளமான 447வீதிகளும், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக் குட்பட்ட 590 கிலோ மீற்றர் நீளமான 430 வீதிகளும், மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட 155 கிலோ மீற்றர் நீளமான 156 வீதிகளும், துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட 139 கிலோ மீற்றர் நீளமான 226 வீதிகளுமாக மொத்தம் 1313 கிலோமீற்றர் நீளமான 1259 வீதிகள் இதுவரை திருத்தம் செய்யப்படாத வீதிகளாகக் காணப்படுகின்றன.

குறித்த வீதிகள் மாவட்டத்தின் 4 பிரதேச சபைகளுக்கும் சொந்தமானவை எனவும் மக்கள் அன்றாடம் போக்குவரத்துச் செய்யும் வீதிகளாகவும் காணப்படுவதாகவும், தற்போது மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத வகையில் காணப்படுவதாகவும் குறித்த புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த வீதிகளைப் புனரமைப்புச் செய்யவேண்டுமானால் 7ஆயிரத்து 72 மில்லியன் ரூபா நான்கு பிரதேச சபைகளுக்கும் தேவைப்படுவதாகவும் குறித்த புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-21)

## இ.போ.ச பஸ்ஸின் மீது வவுனியாவில் தாக்குதல்



வவுனியா.பெப்.6

கல்முனையிலிருந்து வவுனியா நோக்கி வந்த அரச பஸ்,வவுனியா மூன்று முறிப்பு பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் நேற்று முன் தினம் கல்வீச்சுத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இந்தத் தாக்குதலில் பஸ்ஸின் முன்பக்கக்கண்ணாடிகள் உடைந்தன. எனினும் பயணிகள் எவருக்கும் பாதிப்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா அரச பஸ் சாலை ஊடாக வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இலங்கையின் சுதந்திர தினம் நாடு பூராகவும் கொண்டாடப்பட்ட நிலையில் பஸ்களுக்குத் தேசியக் கொடிகளைக் கட்டிச் செல்ல வேண்டும் என்று அரசால் கூறப்பட்டுக் கொடிகளும் விநியோகிக்கப்பட்டன.

அந்தக் கொடியுடன் குறித்த பஸ் பயணித்திருந்தது. அத்தோடு இவ்வருடம் தைப்பொங்கல் தினத்தன்று வவுனியா அரச பஸ் சாலைக்குச் சொந்தமான பஸ் மீது மிகிந்தலைப் பகுதியில் வைத்துக் கல் வீசித் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு இரண்டு மாதங்களில் இரண்டு தடவைகள் வவுனியாவில் அரச பஸ்கள் மீது கல்வீச்சுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (த-ஜ-21)



முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடை நடைபெற்று வரும் இந்தக் காலப்பகுதியில் அறுவடை செய்த நெல்லை உலர்த்துவதில் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருவதுடன் அதற்குரிய இடங்கள் இன்மையால் வீதிகளில் நெல்லைக் கொட்டி உலர்த்தி வருகின்றனர். (த-ஜ-ரி7)

## அபிராமிப் பட்டர் விழா பூநகரியில்

கிளிநொச்சி,பெப்.6

பூநகரி முழங்காவில் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அபிராமிப்பட்டர் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் அம்பாளுக்கு விசேட அபிசேகம் இடம் பெற்று அபிராமி அந்தாதிப் பாடல்களும் ஆன்மிகச்சொற் பொழிவுகளும் இடம் பெறும்.

ஆன்மிகச் சொற்பொழிவுகளை சைவப் புலவர் கந்த. சத்தீசீலன், சைவப் புலவர் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர். மாணவர்களின் பஜனைகளும் இடம்பெறும். (த-ஜ-9)

# வவுனியாப் பாடசாலைகளில் தொடர்ந்து விவாதப் பயிலரங்கு

வவுனியா, பெப்.6

விவாதத் திறமையை வளர்த்தெடுக்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்களுக்கு இடையே விவாதப் பயிலரங்கு எனும் செயற்றிட்டம் வவுனியாவின் வடக்கு, தெற்கு வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் தொடர்ச்சியாக முன் னெடுக்கப்படவுள்ளன.

தமிழ் மாமன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் இந்தச் செயற்றிட்டத்தின் இந்த வருடத்துக்கான முதலாவது விவாதப் பயிலரங்கு கடந்த சனிக்கிழமை வவுனியா இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தப்பயிலரங்கில்கோமரசங்குளம் மகாவித்தியாலயம் மற்றும் வவுனியா இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த விவாத ரீதியில் ஆர்வமுள்ள மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தரமான விவாதிகளை உருவாக்கும் நோக்குடன் தமிழ் மாமன்றத்தால் மேற்கொள்ளப்படுகின்ற இந்தச் செயற்றிட்டம், வவுனியாவின் வடக்கு, தெற்கு வலயங்களைச் சேர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன.

வன்னியிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கான விவாத ரீதியிலான பயிலரங்குகளையும் விரைவில் நடத்துவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாவும் பயிலரங்கின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தச் செயற்றிட்டம் விவாதம் என்ற ரீதியில் மட்டுப்படுத்தப்படாமல், விரைவில், சித்திரப் பயிலரங்கு, கவிதைப் பயிலரங்கு போன்ற ஏனைய துறை சார்ந்த பயிலரங்குகளும், அந்தந்த துறைசார் வளவாளர்கள் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ் மாமன்றம் தெரிவித்துள்ளது. (த-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திகளைக் காக்க குளிரூட்டிய களஞ்சியம் தேவை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

அச்சுவேலி,பெப்.6

வலி.கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் திராட்சை மற்றும் உருளைக் கிழங்கு உள்ளிட்ட விவசாய உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துச் சந்தைப் படுத்துவதற்குப் பொருத்தமான குளிரூட்டப்பட்ட களஞ்சிய அறைகளைக் கட்டித்தரவேண்டும் என வலி.கிழக்கு விவசாயிகள் அமைப்புக்கள் ஒருமித்த நிலையில் பிர தேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத் துள்ளன.

விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது கோரிக் கை யைத் தொடர்ந்து வலியுறுத் தும்போது, யாழ்.மாவட்டத்தில் கூடியளவு பயிர்ச் செய்கை நடைபெறும் பிரதேசம் வலி.கிழக்கு. இங்கே உற்பத்தி செய்யப்படும் தக்காளி மற்றும் திராட்சைப் பழங்களையும், உருளைக்கிழங்கு போன்றவற்றையும் பொருத்தமான முறையில் களஞ்சியப்படுத்தி வைத்து சந்தைப்படுத்துவதன் மூலம் நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியும்.

பொருத்தமான களஞ்சியப் படுத்தல் வசதி இன்மையால் அறுவடை செய்து சில தினங்களில் விற்பனை செய்ய வேண்டி இருப்பதுடன்,சந்தைக்கு ஒரே தடவையில் அதிகமான பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதால் விலையும் குறைவடைகின்றது.

> “வெளிநாடுகளில் இருந்தும் வெளி மாவட்டத்தில் இருந்தும் யாழ். மாவட்டத்துக்கு ஏற்றி வரப்படும் அப்பிள், திராட்சை, தோடை உள்ளிட்ட பழ வகைகளைத் தனியார் வர்த் தகர்கள் குளிரூட்டல் அறை களில் களஞ்சியப்படுத்தி வைத்து விற்பனை செய்கின்றனர்.”

உருளைக் கிழங்கு அறுவடைக்குத் தயாராகியுள்ளது.எனினும் வெளிநாட்டு இறக்குமதிகள் மேற்கொள்ளப்படுவதால் உள்ளூர் உருளைக் கிழங்குகள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு இறக்குமதியைக் குறித்த போகங் களில் நிறுத்தல் வேண்டும். இல்லாதுவிடின் நட் டப்பட்டு விவசாயத்தைக் கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட லாம்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்தும் வெளி மாவட்டத்தில் இருந்தும் யாழ். மாவட்டத்துக்கு ஏற்றி வரப்படும் அப்பிள், திராட்சை, தோடை உள் ளிட்ட பழ வகைகளைத் தனியார் வர்த்தகர்கள் குளிரூட்டல் அறைகளில் களஞ்சியப் படுத்தி வைத்து விற்பனை செய்கின்றனர்.

இதுபோன்ற அமைப்பு எமக்கும் உருவாக்கித் தரப் படுதல் வேண்டும். இதன்மூலம் நியாயமான விலைக்கு எமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யமுடியும்.

எனவே இதற்கான தீர்வுகள் வேண்டும் என்றும், குளிரூட்டல் வசதியுடன் கூடிய களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்தித் தமது கோரிக்கையை வலியுறுத்தினர்.

இது குறித்துக்கருத்துத் தெரிவித்த வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், திராட்சைப் பயிர்களைத் தாக்கும் நோய்க்கு எந்தத்தடுப்பு முறையையும் கையாள முடியாது. ஒரே ஒரு திராட்சை இனமே குடாநாடு முழுவதும் காணப்படுகின்றது.

எனவே புதிய வகையான திராட்சை இணங்களை அறிமுகப்படுத்த வேண்டிய கடப்பாடு உருவாகியுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயப் பயிர்களுக்கு இறக்குமதி வரி அதிகரிக்கப்பட உள்ளது.

உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படும் காலத்தில் வெளிநாட்டு உருளைக்கிழங்கின் இறக்குமதியைத்தடை செய்வதற்கான செயற்பாடுகளும் மேற் கொள்ளப்படும். குளிரூட்டிகளுக்கான தேவைகளும் ஆராயப்படுவதுடன் கிளி நொச்சியில் அமையவுள்ள உழவர் சந்தையின் தேவைப்பாடும் ஆராயப்பட வேண்டியதாக உள்ளது. எனினும் விவசாயிகளின் தேவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை என்றார்.

(த-ஐ-ரி5,11)

# உள்ளூராட்சி அலுவலர்களுக்கு பயிற்சிப் பட்டறை 9ஆம் திகதி

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன் றங்களின் முன்னாள் தவிசாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர் வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்களுக்கும் இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெறும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சிப்பட்டறை இடம்பெறுமென யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.

(த-ஐ-9)

# சிகிச்சைக்கெனப் பணம் மோசடி; இளைஞன் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,பெப்.6

பாடசாலை மாணவனுக்கு சிறுநீரக சத்திர சிகிச்சை செய்வதற்குப்பண உதவி கோரி, தம்மைப் பல்கலைக்கழக மாணவர்களென அடையாளப் படுத்திப் பணம் சேகரித்த குற்றச்சாட்டில் ஒருவரைப் பொதுமக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சிறுப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மாணவன் ஒருவனுக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ளனவென்றும், அதற்குச் சத்திரசி கிச்சை செய்ய 15 லட்சம் ரூபா தேவை எனவும் கூறி இந்தப் பணச்சேகரிப்பு இடம் பெற்றுள்ளது. அவர்கள் தம்மை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் எனக்கூறியே பணச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

பிரதான வீதி யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்ட மாணவர் மருத்துவக் கழகம் என்ற தலைப்புக் கொண்ட கடிதத்தைக் காண்பித்தே அவ்வாறு பணம் சேகரிக்கப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்துவதாக மேலதிக அரச அதிபரதும், உதவி பிரதேச செயலரதும் கையொப்பம் பெறப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அவர்கள் மட்டுமன்றி மருத்துவர் ஒருவரது பெயரும் அதில் கூறப்பட்டுள் ளது.

வன்னிப் பகுதியில் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவனுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள ஒரு பிரதேச செயலகம் ஏன் உறுதிப்படுத்தி மருத்துவத் தேவைக்குப் பணம் பெறபரிந்துரை செய்யவேண்டும் என்று சந்தேகம் கொண்ட அந்தப் பகுதி இளைஞர்கள், அவர்களைப்பிடித்து நையப் புடைத்தனர்.

இதில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். அவர்கள் வைத்திருந்த ஆவணங்களும் பொய் என்பது தெரிய வந்ததாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பணம் சேகரிக்க வரும் போது, மோட்டார் சைக்கிளை வேறு ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு அங்கு சென்றுள்ளனர். அந்த நபரிடமிருந்து ஒரு தொகைப் பணத்தைப் பறித்த ஊர்மக்கள், மோட்டார் சைக்கிளையும் மீட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் தப்பிச் சென்றமற்றையவரைத்தேடிவருவதாகவும் பொலிஸார்மேலும் தெரிவித்தனர். (த-ஐ-4-107)



கச்சாய் அ.த.க.பாடசாலைக்குப் பழைய மாணவனும் புலர்பெயர் நாடொன்றில் வதிபவருமான சி.அமரசிங்கத்தினால் அமைத்து வழங்கப்பட்ட நுழைவாயில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு நுழைவாயிலைத்திறந்து வைத்தனர். (த-ஐ-9)

# வெளிநோயாளர் பிரிவு மேல்மாடியில் சிகிச்சை பெறச் செல்வதில் இடர்பாடு

யாழ்ப்பாணம், பெப்.6

ஊனமுற்ற மற்றும் நடக்க முடியாத நோயாளிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் பழைய வெளிநோயாளர் பிரிவின் மேல்மாடிக்குச் சிகிச்சை பெறச்செல்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கட்டடத் தொகுதியில் தள மேல் தூக்கி (லிப்ட்) இன்மையால் படிகள் வழியாகவே செல்ல வேண்டியுள்ளது. நடக்க முடியாது சக்கர நாற்காலி வண்டிகளில் வரும் நோயாளர்களை மேற்தளத்தில் உள்ள கிளினிக் பகுதிக்கு அழைத்துச் செல்ல ஊழியர்கள் நியமிக்கப்படாமையால் பொதுமக்களின் உதவியைக்கோரி சக்கர நாற்காலியுடன் தூக்கிச் செல்லும் நிலையே காணப்படுகின்றது.

சிலசமயங்களில் அந்தப்பகுதிக்கு வரும் சிற்றூழியர்களை உதவிக்கு அழைத்தாலும் அவர்கள் கண்டு கொள்ளாது சென்று விடுவதாக நடக்க முடியாத நோயாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் கவனமெடுத்து நோயாளிகள் கிளினிக் சேவை யைப் பெறமேல் தளத்துக்கு விரை வாக சென்று வரக் கூடிய உதவி தன்னை வழங்க வேண்டுமென நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்து வர் த.சத்தியமூர்த்தியுடன் தொடர்பு கொண்டபோது:

குறித்த மாடிக் கட்டடத்துக்கு லிப்ட் அமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அங்கு ஒரே நேரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்களும் அவர்களை விடப் பணியாளர்களும் இருப்பர். அங்கு போதிய இடவசதி இருக்கவேண்டும். ஆனால் அவை இன்னும் சீராகவில்லை. அங்கு லிப்ட் அமைக்க வேண்டிய தேவையுள்ளது. இந்த வருடத்துக்குள் லிப்ட் அமைக்கப்படும் விடும் அதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்படும். -என்றார்.

(த-ஐ-4,135)

# யாழ்.நகரில் வடிகால்களின் துப்புரவுப் பணி ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.நகரில் நிலத்தடி வடிகால்கள் துப்புரவு செய்யப்படும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது கே.கே.எஸ். வீதியில் சத்திரச் சந்தியில் இருந்து செல்லும் நிலத்தடி வடிகால் துப்புரவாக்கப்பட்டு அதற்குள் இருந்த சேறு மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

வீதி அகலிப்பின்போது அமைக்கப்பட்ட இந்த வடிகாலுக்கு பாதுகாப்புக்கான மூடிகள் வைக்கப்பட்டுள்ளன.

சீரான முறையில் இந்த வடிகால் அமைக்கப்படாததால் அதற்குள் மழை வெள்ளம் தேங்கிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

கால்வாயில் இருந்து துர்நாற்றமும் வீசியது. நுளம்புக்குடம்பிகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்பட்டன.

அதனை விடப் பொலித்தீன் மற்றும் கழிவுகளும் தேங்கியதால் இந்த வடிகால் மாநகர சுத்திகரிப்புப் பணியாளர்களால் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக நகரில் உள்ள சகல நிலத்தடி வடிகால்களும் இவ்வாறு சுத்திகரிக்கப்படவுள்ளன.

(த-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹூசேனுக்கு எதிராக இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## பொது எதிரணியினர் நடத்துவர்

கொழும்பு, பெப். 6
ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையாளர் செயித் அல்ஹூசேன் இலங்கை வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகிந்த ஆதரவு பொது எதிரணியினர் கொழும்பில் இன்று சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், இராஜதந்திர சமூகத்தினர் மற்றும் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவினர் ஆகிய தரப்புகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். விசேடமாக

> இராணுவச் சிப்பாய்களைப் பலிக்கடாக்களாக்க வரும் ஹூசேனுக்கு எதிராக வீதியில் இறங்குவோம் என்ற தொனிப் பொருளில் சிங்களமொழியிலான சுவரொட்டிகள் கொழும்பில் பரவலாக ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முப்படைத் தளபதிகளையும் இவர் தனது பயணத்தின்போது சந்திக்கவுள்ளார்.

இன்றும், நாளையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பயணம்மேற்கொள்ளவுள்ளஹூசைன் அங்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஷீர் அஹமட் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.அதுதவிர,போரினால் பாதிக்கப்பட்டவர்களை யும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை, மகிந்த ஆதரவு பொது எதிரணியினர்ஹூசேனைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு அரசிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர். எனினும்,அக்கோரிக்கைநிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில்ஹூசேன் இலங்கை விடயத்தில் மிதமிஞ்சிச் செயற்பட முடியாது எனத் தெரிவித்துள்ள மகிந்த ஆதரவு பொது எதிரணியினர், அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

கொழும்பு 07, நகர மண்டபம், லிப்டன் சுற்றுவட்டத்துக்கு முன்னால் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் மகிந்த ஆதரவு பொது எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ஸ,புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில,வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேடமாக முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினருமானமகிந்த ராஜபக்ச மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ச ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று மகிந்த ஆதரவு பொது எதிரணி தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவச்சிப்பாய்களைப்பலிக் கடாக்களாக்கவரும் ஹூசேனுக்கு எதிராக வீதியில் இறங்குவோம் என்றதொனிப்பொருளில் சிங்கள மொழியிலான சுவரொட்டிகள் கொழும்பில்பரவலாக ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

### வாஸின் மனைவி மீது புதிய குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.6
முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மனைவி சியாமளிபிரியதர்சனி பெரேரா மீது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதம் வைத்திருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த வழக்கு விசாரணைகளுக்காக எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மனைவி சியாமளி பிரியதர்சனி பெரேராவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அழைப்பாணையைச் சந்தேக நபரின் கையில் ஒப்படைக்குமாறும் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (து)

### மாத்தறை மின்சார சபையில் தீ

கொழும்பு, பெப்.6
மாத்தறையிலுள்ள இலங்கை மின்சார சபையின் வாடிக்கையாளர் சேவைப்பிரிவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாத்தறை நகர சபையின் தீயணைப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் விரைந்துள்ளதாகவும், மாத்தறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துக் காரணமாக, மின்சார சபையின் கட்டடம் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,இதனால் எவருக்கும் எவ்விதபாதிப்பும்ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (து)

### குமார் குணரட்ணத்தின் விளக்கமறியலில் நீடிப்பு

கொழும்பு, பெப்.6
முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் குழுத் தலைவர், குமார் குணரட்ணத்தின் விளக்கமறியல் மீண்டும் பெப்ரவரி 15 ஆம் திகதி வரைநீடிக்கப்பட்டுள்ளது.

இவர் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் கேகாலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவருக்கான விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கேகாலை அங்குருவெல்ல பகுதியில் வைத்து கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி இவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குடிவரவு, குடியகல்வுச் சட்டவிதிமுறைகளை மீறி இலங்கையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட இவர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.இதன்போது, கேகாலை நீதிமன்றம் அவருக்கான விளக்கமறியல் உத்தரவை நீடித்துள்ளது. (து)



காணாமற்போனோரைக் கண்டறியும் குழுவின் லலித், குகன் உட்படக் காணாமற்போனோர் விடயம், குமார் குணரட்ணத்துக்கு தீர்வு கிடைக்காமை ஆகியவற்றைக் கண்டித்து கொழும்பு கோட்டையில் நேற்று முன் தினம் நண்பகல் முன்னிலை சோசலிசக் கட்சி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது. (த-4)

### இலங்கை -பாக். -மாலைதீவு இணைந்து ராணுவப் பயிற்சி

கொழும்பு, பெப்.6
இலங்கை, பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் படையினர் இணைந்து பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டுள்ளனர்.

குறித்த இராணுவப் பயிற்சி பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் இரண்டுவாரங்கள் இடம்பெற்றதாகப் பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சி நடவடிக்கைக்கு ஈகல் டேஷ் 1 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதன்போது பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக அந் நாட்டு இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் மூலம் விசேட இராணுவ உறவை மேம்படுத்தக் கூடியதாக இருந்ததாக பாகிஸ்தானின் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த)

## லைலா, சுருக்கு வலைக்கு தடை நீக்கப்படமாட்டாது

### மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.6
லைலா மற்றும் சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை எந்தச்சந்தர்ப்பத்திலும் நீக்கப்படாது என மீன்பிடி வளத்துறை அமைச்சர் மகிந்தஅமரவீர தெரிவித்துள்ளார்.

மீனவப் பிரதிநிகளுக்கிடையில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி முறைமை தொடர்பிலான உத்தரவு எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் மீனவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்க உடன் நடை முறைக்கு வரும் வகையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி வளத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் தொடர்பில் மீனவர்களுக்கிடையில் தெளிவின்மை காணப்படுவதாகச் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், குறித்த விடயம் தொடர்பில் மீனவப் பிரதிநிகளுக்கு தற்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (து)

## வறட்சியான காலநிலையால் காட்டுத்தீ ஏற்படும் அபாயம்

கொழும்பு, பெப்.6
நாட்டின் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை காரணமாக பல்வேறு காட்டுப் பிரதேசங்களிலும் காட்டுத் தீ பரவியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை, நுவரெலியா, மொனராகலை, கண்டி போன்ற மாவட்டங்களில் காட்டுத்தீ பரவிய பல சம்ப வங்கள் கடந்த இரண்டு வாரங் களில் பதிவாகியுள்ளதாக அந்த நிலையத்தின் பிரதிப் பணிப் பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரி வித்தார்.

மேலும், சில விசமிகளாலும் திட்டமிட்டுத் தீ வைக்கப்பட்டுள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இவ்வாறு வனப் பிரதேசங்களுக்குத் தீ வைத்த ஐந்து சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதீப் கொடிப்பிலி தொடர்ந்து தெரிவித்தார்.

வனப் பிரதேசங்களுக்கு தீ வைப்பதனால் பிரச்சினைகள் பல ஏற்படுவதனால் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் தேசிய கீதத்தை பாடியமை பெரும் அநீதி


## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, பெப் 6

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமை யானது தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சியாகக் கருத்தப்படுகின்றது என்று பிவித்று ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் கொண் டாடப்பட்ட இலங்கையின் 68ஆவது சுதந்திரதின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமை யைச் சுட்டிக்காட்டியே அவர் குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள உதய கம்மன்பில,



தாய் நாட்டைப் பிரித்துக் கொள் வதில் மட்டும் இது வரையில் பிளவடைந்திருந்த இன சமூகங்கள், தற்போது தேசிய கீதம் தொடர்பிலும் பிளவடைந்துள்ளன. தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது அரசியல் அமைப்பின் 7ஆம் சரத்தை மீறும் செயலாகும்.

> சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் இசைத்ததன் மூலம் ஜனாதிபதி தமக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வரக்கூடிய பெரிய குற்ற மிழைத்துள்ளார்.

எனவே, சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் இசைத்ததன் மூலம் ஜனாதிபதி தமக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வரக்கூடிய பெரிய குற்ற மிழைத்துள்ளார்.

தேசிய கீதம் தேசியக் கொடி என்பன தேசிய ஒற்றுமையின் குறியீடுகளாகும்.

இவ்வாறான ஓர் காரியத்தைச் செய்ய முன்னர் 1721 மொழிகள் காணப்படும் அண்டை நாடான இந்தியாவை முன்னுதாரணமாகக் கொண்டிருக்க வேண்டும். இதுமட்டுமல்லாமல், 1721 மொழி பேசும் இந்தியாவில் பெங்காலி மொழியில் தேசிய கீதம் பாடப்படுகின்ற நிலையில், குறுகிய அரசியல் நோக்கில் தூரநோக்கின்றி எடுக்கப்பட்ட தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல-என்றார். (த)

## இலங்கையுடன் இணைந்து செயற்படச் சீனா விருப்பம்

கொழும்பு, பெப் 6

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவுடன் இணைந்து செயற்படுவதற்குச் சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 68 வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்திலேயே அவர் மேற்கண்டவாறு விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதுடன் வலுவான வளர்ச்சியையும் கொண்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு காரணமாக இரு நாட்டு மக்களும் அதிகளவான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சீனாவுக்கான பயணத்தை நினைவு கூர்ந்துள்ள சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங், புதிய சூழலில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த முடியும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (த)

## ஈழத் தமிழர்களுக்கு உரிமைகள் கிடைத்திட பொது வாக்கெடுப்பு

### *வலியுறுத்துகின்றார் வைகோ*



சென்னை, பெப் 6

ஈழத் தமிழர்களுக்கு இறையாண்மையுள்ள அரசியல் சுயநிர்ணய உரிமையை வழங்கிட, தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்துவது ஒன்றுதான் ஒரே தீர்வாகும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

கண்ணீராலும், இரத்தத்தாலும் எழுதப்பட்ட ஈழத்தமிழர்களின் சோக வரலாறு இன்னமும் எத்தனை ஆண்டு காலம் தொடருமோ! என்று உலகத் தமிழினம் பெரும் துயரம் அடைந்திருக்கிறது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் உயிர்ப் பலி ஆயினர். பேரில் லட்சக் கணக்கான தமிழ்மக்களைக்கொன்றொழித்த போது நவீன உலகம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த அவலமும் நிகழ்ந்தது.

இதற்குப் பிறகும், ஈழத் தமிழர்களை நிரந்தரக் கொத்தடிமைகளாக ஆக்குவோம் என்று சிங்கள இனவாத அரசு கொக்கரிக்கிறது. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பெப்ரவரி 2 ஆம் திகதி, இலங்கை சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போது, புதிதாக உருவாக்கப்படும் இலங்கை அரசமைப்புச் சட்டத்தில், சமஷ்டி அமைப்பு முறைக்கு இடம் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்திட காங்கிரஸ் கூட்டணி அரசு துணைபோனது. தற்போது, ஈழத் தமிழர்களை நிரந்தரமாகக் கொத்தடிமைகளாக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கு பா.ஜ.க. அரசு வெண் சாமரம் வீசுகிறது.

இலங்கையில் சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஈழத்தமிழர்களை அழிப்பதில் கைகோர்த்துக் கொண்டதைப் போல, இந்தியாவில் காங்கிரஸ் கட்சியும், பாரதீய ஜனதா கட்சியும் தமிழர்களுக்குத் துரோகம் இழைப்பதில் ஒற்றுமையாகச் செயற்படுகின்றன.

இந்திய அரசு கொடுத்த துணிச்சலால் தான், இலங்கை ஜனாதிபதி புதிய அரசியல்சட்டத்தில்சமஷ்டி முறை கிடையாது என்று திமிரோடு அறிவித்துள்ளார். இந்தப் புதிய அரசியல் சட்டம் தமிழர்களை வேரறுக்கும் கொலை வாள் என்பதை உலகத்தமிழர்கள் உணர வேண்டும்.

இலங்கைத் தமிழினப் படுகொலைக்குப் பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்ட விசாரணையால் தான் நீதி கிடைக்கும் என்று 10 நாள்களுக்கு முன்னர் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கூறியுள்ளார். இலங்கையில் தமிழ் மக்களை சட்டபூர்வ அடிமைகளாக்கும் திட்டத்தை ஐ.நா. மன்றமும், ஜனநாயக சமத்துவத்தை வலியுறுத்தும் நாடுகளும் வேடிக்கை பார்ப்பது தமிழர்களுக்கு இழைக்கப்படும் மன்னிக்க முடியாத இன்னொரு அநீதியாகும்-என்றுள்ளது. (த)

## 750 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கல்

கொழும்பு, பெப் 6

750 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பரிசீலித்த பின்னரே இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.என்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பித்தவர்களில் 3500 பேருக்கு இதுவரை இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கைகள், கடந்த மார்ச் மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## மைத்திரிபாலவுக்கு அச்சுறுத்தல்: புலனாய்வுப் பிரிவு விசாரணை

கொழும்பு, பெப் 6

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேஸ்புக் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

சில பெண்கள் உள்ளிட்டவர்கள் பேஸ்புக் உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடகங்களின் ஊடாக அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் கைதானதன் பின்னரே அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அச்சுறுத்தல்கள் குறித்து ஜனாதிபதி செயலகம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். (த)

## சிசிலி கொத்தலாவல வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, பெப் 6

கைது செய்யப்பட்டுள்ள சிசிலி கொத்தலாவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சிசிலி கொத்தலாவலயை, இரகசியப் பொலிஸ் தலைமையகத்துக்குக் கொண்டு செல்வதற்குத் தயாரான நிலையில் தான் சுகவீனமுற்றிருப்பதால் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அம்புலன்ஸ் வண்டியின் மூலம் தனியார் வைத்தியசாலை ஒன்றில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோல்டன் கீ நிறுவன மோசடி தொடர்பில் அவரைக் கைது செய்வதற்கு உயர் நீதிமன்றத்தினால். பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். (த)

## சிகா வைரஸ் குறித்து அச்சம் கொள்ளாதீர்

### *சுகாதார அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, பெப் 6

சிகா வைரஸ் குறித்து அச்சமடையத் தேவையில்லை எனச் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பிரேஸில் உள்ளிட்ட சிகா வைரஸ் பரவியுள்ள நாடுகளுக்கு எவரேனும் பயணம் மேற்கொள்வதாயின் இந்த வைரஸ் தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் எனவும் அந்தப் பிரிவின் பணிப்பாளரான விசேட வைத்திய நிபுணர் பபா பலிஹவடன கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை உட்பட பிராந்திய நாடுகளில் சிகா வைரஸினால் பாதிப்புக்குள்ளானவர்கள் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எது எவ்வாறாயினும், டெங்கு நுளம்புகளாலேயே சிகா வைரஸ் காவிச்செல்லப்படுவதால், பிரேஸில் போன்ற நாடுகளுக்கு செல்கின்றவர்கள் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்துக்கொள்வது சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்க அரசிடம் இருந்து ஒரு பதில் தேவை; கிடைக்குமா...?

நல்லாட்சி அரசினர், நாட்டின் சட்டத்தை மீறி, சுதந்திரதின வைபவத்தில், தேசிய கீதத்தை இசைத்துள்ளனர். இது மிக்கவும் நயவஞ்சகம் மிக்க செயற்பாடாகும். தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டதுக்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

மலையகத்தின் அம்பேகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களில் ஒருவரான எலப்பிரிய நந்தராஜ், ஹற்றன் கினிகத்தேன பஸ் நிலையத்திற்கு அருகே உள்ள மலசலகூடம்ஒன்றின் மீது ஏறி நின்று, தமது எதிர்ப்பை இவ்விதம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

தமிழில் தேசிய கீதம் இசைப்பதற்கு, ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்புத் தெரிவித்த, மகிந்த ஆதரவு அணியின் அங்கத்தவர்களும், அதனைப் பின்னின்று ஆட்டுவித்தவர்களும் இப்போது சன்னதம் ஆடுகிறார்கள்.

நாட்டின் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டுமே இசைக்க வேண்டும் என்பது பேரினவாதத் தரப்புகளினால் மிக வேகமாக, முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

சிங்களமும், தமிழும் இணைந்த வடிவத்திலேயே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான முன்னாள் தேசிய நல்லிணக்க அமைச்சரும், சமதர்ம வாதியுமான வாசுதேவ நாணயக்காரவினால் முன்மொழியப்பட்டிருந்ததும், பேரினவாதச் சக்திகளின் பக்கத்தில் இருந்து எழுந்த பலத்த எதிர்ப்பினால், சோர்ந்து, களைத்துப்போன நிலையில், அவர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார் என்பதும் இப்போது "சரித்திரம்" ஆகிவிட்டது!

ஓய்ந்து தளர்ந்து போன அந்த விவகாரம், கடாசி விடப்பட்ட பல ஆண்டுகளின் பின்னர், நல்லாட்சி அரசு இப்போது அதனைக் கையில் எடுத்து செயலாக்கியும் உள்ளது.

கடந்த நான்காம் திகதி வியாழக்கிழமை 68ஆவது சுதந்திர தினத்தன்று இனவாதம் பொலிந்த இந்தச் சிறிய தேசத்தில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் வரவேற்றிருந்தமை, ஒரு சிறப்பான பதிவு எனலாம்.

ஒரு சிறந்த கைங்கரியத்தை, நாட்டில் வாழும் இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை நட்டு, பிரசைகளிடையே பேதங்களை அகற்றி, உரிய சரியான பாதையில் ஒன்றிணைந்து தடம் பதித்து நடந்து முன்னேறுவதற்கு முகிழ்த்திருக்கும் மணம்வீசும் மலராக, உயர்ந்து வளர்வதற்கு வழிசெய்வதை விட்டு--

ஒரு சாரார் (தமிழர்கள்)தொடர்ந்தும் முள்ளின்மேல் நடக்க வேண்டும் என்ற நயவஞ்சகப் புத்தியை வளர்க்கும் தரப்பினரை-நல்லாட்சி அரசு எவ்வாறு கையாளப்போகின்றது என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட தனிச்சிங்களச் சட்டமும், தனிச் சிங்கள மொழியிலான தேசிய கீதமும் நல்லதையும் எரிக்கும் கொள்ளிக் கண்களாகத் தொடருமா என்ற வினாவுக்கு நல்லிணக்க அரசே பதில் சொல்ல வேண்டும். எதிர்பார்க்கலாமா, என்ன.....?

# அரசின் முன்னுள்ள சவால்கள்

**எம்.ஐ.முபாறக்**

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து மைத்திரி - ரணில் அரசு பல சவால்களைத் தாண்டி வந்துள்ள போதிலும் - பல சவால்களை வென்றுள்ள போதிலும் இன்னமும் பல சிக்கலான சவால்களை இந்த அரசு தாண்ட வேண்டியுள்ளது.

இதுவரை தாண்டி வந்த சவால்களை விடவும், இனித் தாண்டப் போகும் சவால்களில்தான் இந்த அரசின் ஆயுளே தங்கியுள்ளது. இந்த நாட்டில் வாழும் எல்லா இன மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அந்தச் சவால்களை அரசு வென்றெடுக்கா விட்டால் அரசின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். அது மகிந்த தரப்புக்கு வாய்ப்பாகப் போய்விடும்.

அவ்வாறு இந்த அரசு எதிர்நோக்க இருக்கும் சவால்களுள் மிக முக்கியமானவை அரசியல் தீர்வும், போர்க்குற்ற விசாரணையும்தான்.

இந்த இரண்டு விடயங்களும் இந்த நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுடன் நேரடியாக மோதுகின்ற விடயங்களாக இருப்பதால், இவற்றைப் பக்குவமாகவும் இராஜதந்திர ரீதியிலும் கையாள வேண்டிய கட்டாயத்துக்குள் இந்த அரசு இப்போது தள்ளப்பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களும் வடக்கு, கிழக்குத் தமிழருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் விடயங்களாக இருக்கின்றபோதிலும், அவை சிங்கள மக்களுடனும் மோதுகின்றமையே இந்தச் சிக்கல் நிலைக்குக் காரணம்.

இந்த அரசு தமிழர் சார்பில் இதுவரை தீர்த்துவைத்த சில பிரச்சினைகளை எடுத்துப் பார்த்தால், அவை எந்த வகையிலும், சிங்கள மக்களுடன் தொடர்புபட்டவையாகவோ அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவையாகவோ இருக்கவில்லை.

அவ்வாறு தீர்க்கப்பட்ட பிரச்சினைகளான காணி விடுவிப்பு மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுவிப்பு போன்றவை எந்த வகையிலும்,சிங்கள மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவையாக அமையவில்லை. இதனால்தான் அரசு எந்தவித தயக்கமும் இன்றி அவற்றை முடியுமானவரை விரைந்து தீர்த்து வைத்தது.

ஆனால், அரசியல் தீர்வு மற்றும் போர்க்குற்றச்சாட்டு போன்ற விடயங்கள் அப்படியானவை அல்ல. இந்த இரண்டும் சிங்கள மக்களுடன் பின்னிப் பிணைந்து நிற்கின்றன.

> அரசு சிங்கள மக்களுக்கோ இராணுவத்தினருக்கோ எதிரானது அல்ல என்று காட்டுவதற்காக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன போர்க் குற்றம் என்ற பதத்தை நீக்கி மனித உரிமை மீறல்கள் என்று இப் போது கூறி வருகின்றார். இதில் ஒரு இராஜதந்திரமும் இருக் கின்றது.

### அரசியல் தீர்வினால் தமிழருக்கு நன்மைகள்

அரசியல்தீர்வு என்பது தமிழருக்கான அதிகூடிய அதிகாரங்களைக் கொண்டதாக அமைந்து விட்டால், அதுதனித்தமிழீழத்தை உருவாக்கிவிடும் என்று சிங்களவர்கள் கருதுகின்றனர். அவ்வாறுதான் அவர்கள் மத்தியில் பேரினவாதிகள் பரப்புரை செய்கின்றனர்.

இதனால் இந்த விடயம் மிகவும் கவனமாகவும் வெளிப்படைத் தன்மை மிக்கதாகவும் கையாளப்பட வேண்டியுள்ளது. அதற்காகத்தான் அரசியல் தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசு மக்கள் கருத்துக்களைப் பெற்று வருகின்றது.

அடுத்தது, போர்க்குற்ற விசாரணை. இது அரசியல் தீர்வை நோக்கிய நகர்வை விடவும் மிகவும் சிக்கலானது.

போர்க்குற்ற விசாரணையின் போது இராணுவத்தினர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டால், அது இராணுவத்துக்கு இழைக்கப்பட்ட துரோகமாக - காட்டிக் கொடுப்பாக சிங்கள மக்கள் மத்தியிலும் இராணுவத்தினர் மத்தியிலும் நிச்சயம் பிரசாரம் செய்யப்படும்.

புலிகளிடம் இருந்து நாட்டை மீட்ட இராணுவத்தினர் புலிகளின் விருப்பத்திற்கு அமைய தண்டிக்கப்படவுள்ளார்கள் என இப்போது சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரைகள் தொடங்கப்பட்டுள்ளன.


இந்தப் பரப்புரைகளை முறியடித்து இந்த அரசு சிங்கள மக்களுக்கோ இராணுவத்தினருக்கோ எதிரானது அல்ல என்று காட்டுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க்குற்றம் என்ற பதத்தை நீக்கி மனித உரிமை மீறல்கள் என்று இப் போது கூறி வருகின்றார். இதில் ஓர் இராஜதந்திரமும் இருக்கின்றது.

பேரினவாதிகளின் பரப்புரையை முறியடித்து சிங்கள மக்களையும் இராணுவத்தையும் தன் பக்கம் வைத்துக்கொள்ள மைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழருக்கு நிவாரணங்கள் வழங்கப்படும்போது அந்த நிவாரணங்கள் போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் வழங்கப்பட வேண்டுமா அல்லது தண்டனையைத்தவிர்த்து வேறு நிவாரணங்கள் மூலம் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமா என்று அரசு இப்போது ஆராயத் தொடங்கியுள்ளது.

போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்காவிட்டால் சர்வதேசத்தினதும் தமிழ் மக்களினதும் நெருக்குதலில் இருந்து இந்த அரசால் தப்ப முடியாது. சர்வதேசத்துக்குப் பயந்து தண்டனை வழங்கினால் சிங்கள மக்களின் பக்கத்தில் இருந்து அரசு நெருக்குதலை எதிர்கொள்ள வேண்டி வரும். ஆகவே, இரண்டு தரப்பினரும் திருப்தியடையும் வகையில் தீர்வை முன்வைத்தால்தான் இந்த அரசு எல்லாத் தலையிடிகளிலும், பிரச்சினைகளிலும் இருந்து தப்ப முடியும். அதற்குப் போரில் நேரடியாக ஈடுபட்ட – அந்தப் போருக்குத் தலைமை தாங்கிய பொன்சேகாவின் உதவி அரசுக்கு நிச்சயம் தேவை. இதனால்தான் ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியலில் பொன்சேகாவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து அவருக்கு அமைச்சுப் பதவியும் வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்தார். மறுபுறம், நாடாளுமன்றில் மகிந்த தரப்பைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் பொன் சேகாவை ஐ.தே.க. எம்.பி.யாக்குகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றில் மகிந்த தரப்பால் ஏற்படுத்தப்படும் தலையிடியை விடவும் போர்க்குற்ற விசாரணையால் ஏற்படப் போகும் பாதிப்புத்தான் ஆபத்து நிறைந்தது. அந்த ஆபத்தைத் தடுப்பதற்குத்தான் பொன்சேகா அரசுக்குத் தேவைப் படுகின்றார் என்பதே உண்மை.

திரி இவ்வாறு முயன்றாலும் கூட இவ்வாறு செய்து சர்வதேசத்தைத் திசை திருப்ப முடியாது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக உள்ளகப் பொறி முறை ஒன்று அமைக்கப்பட்டு அது கண்டறியும் உண்மைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசு ஐ.நாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வாக்குறுதிகளை வழங்கியுள்ளதால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை சர்வதேசம் இந்த அரசைத் துரத்திக் கொண்டே இருக்கும்.

ஆகவே, போர்க்குற்றவாளிகள் கண்டறியப்பட்டால் அவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும், அந்தத் தண்டனைகள் சிங்கள மக்களையும் இராணுவத்தையும் அரசுக்கு எதிராகத் திருப்பி விடும் நிலையை ஏற்படுத்திவிடவும் கூடாது என்ற நிலைப் பாட்டில் அரசு உள்ளது.

**சரத் பொன்சேகாவின் தேவை**

இந்த இராஜதந்திர நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சரத பொன்சேகா போன்ற முக்கிய முன்னாள் இராணுவ அதிகாரிகளின் உதவிகள் அரசுக்குத் தேவைப்படுகின்றன. அதிலும், போருக்குத் தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவின் உதவி நிச்சயம் தேவை.

> “போர்க் களத்தில் என்ன நடந்தது என்று அப்போது இராணுவத் தளபதியாக இருந்த பொன்சேகாவுக்குத் தான் தெரியும். அவ்வாறு உண்மைத் தகவல் தெரிந்த ஒருவரைத் தன்னுடன் வைத்துக் கொண்டால் தான் இந்தப் பிரச்சினைக்கான சரியான தீர்வைப் பெற முடியும் என அரசு கருதுகின்றது.”

போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் நிலை ஏற்பட்டால் அது இராணுவத்துக்கு எதிரானது அல்ல; காட்டிக் கொடுப்பு அல்ல; குற்றம் செய்தவர்களே தண்டிக்கப்படுகின்றனர் என்று அரசால் சிங்கள மக்களுக்கு விளக்கமளிப்பதை விடவும் அந்தப் போரை நடத்திய இராணுவத் தளபதி விளக்கமளிப்பது பெறுமதி வாய்ந்ததாகும்.

இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபவில்லை. அவ்வாறு ஈடுபட்டிருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பொன்சேகா இருக்கின்றார்.

போர்க் களத்தில் என்ன நடந்தது என்று அப்போது இராணுவத் தளபதியாக இருந்த பொன்சேகாவுக்குத்தான் தெரியும். அவ்வாறு உண்மைத் தகவல் தெரிந்த ஒருவரைத் தன்னுடன் வைத்துக் கொண்டால்தான் இந்தப் பிரச்சினைக்கான சரியான தீர்வைப் பெற முடியும் என அரசு கருதுகின்றது.

# விடுவிக்கப்பட்ட காணிகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமராதது ஏன்?

அண்மையில் தங்கள் பத்திரிகையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீளக்குடியேறாதது ஏன் என்று இராணுவத் தளபதி கேள்வி எழுப்பியதாக செய்தி வெளிவந்துள்ளது. அனைவரது கவனத்துக்கும் பின்வரும் விடயங்களைக் கொண்டு வருகிறேன்.

1. 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வலி.வடக்கு மக்கள் தமது வாழ்விடத்தை விட்டு விருப்பத்துடனா வெளியேறினார்கள்?

2. ஓடு அல்லது சீற் வேய்ந்து, பாலை, முதிரை மரங்களால் கதவுகள், யன்னல்கள் அமைத்து, மின் உபகரணங்கள் பொருத்தி, சுற்றுமதில் அமைத்து கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழ்ந்த மக்கள் ஏன் வெளியேறினார்கள்?

3. துப்பாக்கிச் சூட்டுக்கும் ஷெல் அடிக்கும் மத்தியில்தானே தமது உயிரினும் மேலான வீடுகளையும், தோட்டங்களையும் விட்டு வெளியேறினார்கள்?

ஒரு நாட்டின் பிரசைகளின் பாதுகாப்புக்கு அந்த நாட்டின் பாதுகாப்புப் படைகள்தானே பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறானால் படையினர் மக்களை வெளியேற வேண்டாமென்று கேட்டிருக்கலாமே? இந்த நிலைக்கு என்ன காரணமென்று எல்லோருக்கும் தெரியும்.

இருபத்தைந்து வருடங்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை இவர்களுக்குத் தெரியாதா? இன்னும் சில வருடங்கள் போனால் மூத்த தலைமுறையினர் இறந்துவிட, தமது இடமே எதுவென்று 25 வருடம் முகாம் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்குத் தெரியாமல் போகும் என்று எதிர்பார்க்கிறார்களா?

இந்த மக்கள் வெளியேறும்போது வீடுகள் எப்படி இருந்தனவோ அப்படியே இப்போது அந்த வீடுகளை உருவாக்கிக் கொடுக்கட்டும். அத்தனை மக்களும் உடனடியாக அடுத்த நாளே வந்து குடியேறுவர்.

வீடுகள் தரைமட்டமாகி, கிணறு எங்கே தோட்டம் எங்கே என்று கண்டுபிடிக்க முடியாமல் மக்கள் தடுமாறுகிறார்கள். வீட்டைக் கட்டுவதென்றால் இன்று ஐம்பது லட்சத்துக்கு எங்கே போவார்கள். வீதிகள் பழையபடி உள்ளனவா? குடிப்பதற்கு தண்ணீர் உள்ளதா? மலங்கழிப்பதற்கு மலசலகூடமுள்ளதா? எவ் வாறு மக்கள் குடியேறுவார்கள்? இலங்கையிலே, ஏன் ஆசியாவிலே இந்தப் பகுதி மக்கள் 100 வீதமானோர் சுகாதார முறைப்படி அமைக்கப்பட்ட மலசலகூடங்களைப் பயன்படுத்தினார்கள் என்பது இவர்களுக்குத் தெரியுமா?

இவை அனைத்தையும் தங்கள் சொந்தச் செலவிலேயே நிர்மாணித்திருந்தார்கள் யாரிடமும் கையேந்தி இருக்கவில்லை. எத்தனை நூல் நிலையங்கள், எத்தனை சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள் இருந்த இடம் தெரியாமல் கற்குவியலாகக் கிடக்கின்றன. அடையாளம் காட்டினால் அந்தந்த இடங்களில் அவற்றை மீள அமைத்துக் கொடுப்பார்களா?

எல்லாவற்றுக்கும் போரைக் காரணங்காட்டி விட்டு சும்மா இருந்து விடமுடியுமா? வீட்டை விட்டு வெளியேறியது மக்களின் தவறு இல்லையே? உயிரைக் காக்கத்தானே அங்கிருந்து வெளியேறினார்கள்.

சேந்தாங்குளத்திலிருந்து பருத்தித்துறையிலுள்ள கடற்கரைப் பிரதேசம்வரை உலகிலேயே சிறந்த மீனினங்களைக் கொண்டது. இங்கு வாழ்ந்த மக்கள் தமது இடத்துக்கு மீளச் செல்லத்தானே வேண்டும்? மொத்தத்தில் தேசிய உணவு உற்பத்தியில் அவர்கள் பங்கேற்க வேண்டாமா? சகலரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில்,

1. அத்தனை வீதிகளும் முன்பு இருந்ததுபோல் அமைக்கப்பட்டால்–

2. அத்தனை கிணறுகளும் துப்புரவாக்கப்பட்டு அந்த நீர் குடிப்பதற்கு ஏற்றவாறு ஆக்கப்பட்டால்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அத்தனை வீடுகளும் முன்பு இருந்தவாறே கட்டிக் கொடுக்கப்பட்டால்–

4. இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் முன்பு இருந்ததுபோலே அமைத்துக் கொடுக்கப்பட்டால்–

5. பாடசாலைகள் கட்டிக்கொடுக்கப்பட்டால்–

மக்கள் அனைவரும் மறுநாளே அங்கு குடியேறுவர்.


இதனை விடுத்து வீட்டுத்திட்டம் வேண்டுமென்றால் அதற்கு ஆயிரம் நிபந்தனைகள் போடுகிறார்கள். தனி ஒருவர் அல்லது இருவர் என்றால் வீட்டுத்திட்டம் கிடையாதாம். அவர்கள் எங்கே செல்வது? இடம்பெயரமுன் இராஜா போல் தமது வீட்டில் வாழ்ந்தவர்கள் தானே அவர்கள்? முள்ளிவாய்க்கால்வரை ஓடித் தமது உறவுகளை இழந்ததும், இயற்கை மரணங்களால் குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை குறைந்ததும் அவர்கள் குற்றமில்லையே?

மாதச்சம்பளம் பெறுபவருக்கு, ஓய்வூதியம் பெறுபவருக்கு வீட்டுதிட்டம் இல்லையென்றால் அவர்கள் என்ன மீண்டும் அகதி முகாமுக்குப் போவதா? அதுமட்டுமல்ல இந்திய வீட்டுத்திட்டமென்றால் 550,000 ரூபா இலங்கை வீட்டுத்திட்டமென்றால் 2,100,000 ரூபா. ஏன் இந்தப் பாரபட்சம். இந்திய வீட்டுத்திட்டம் பெற்றவர்கள், அவசரப்பட்டு விட்டோமோ? என்று யோசிக்கிறார்கள். அடுத்த வீட்டுத்திட்டம் இன்னும் பெறுமதியானதாக வருமோ என்று மக்கள் யோசிக்கத் தொடங்கி விட்டார்கள். மீள்குடியேறாததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். மக்களே, அரசியல்வாதிகள் எப்பொழுதும் அரசியல்வாதிகள்தான். அது அவர்களது தொழில்.

எனவே அவர்களை நம்பாமல் கிராம அபிவிருத்திச் சங்கம், பிரசைகள் குழு, சனசமூக நிலையங்கள் மூலம் அரச நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுங்கள்.

பேஸ்புக் பார்த்து செல்போனில் கதைத்தது போக மீதி நேரம் ஒப்புக்கு வேலை செய்யும் நிலையை மாற்றுங்கள். கேள்வி கேளுங்கள்

கி.செல்லத்துரை



# திட்டமிட்டுக் கட்டாத நீர்க்கீழ் உணவு விடுதி;

## அதிரடியாக மூடிய அதிகாரிகள்

புதுடில்லி, பெப்.6

இந்தியாவின் முதல் நீர்க்கீழ் உணவு விடுதி ஆரம்பிக்கப்பட்ட சில தினங்களில் மாநகராட்சியினரால் மூடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அகமதாபாத் தெற்கு பூபாலில் திறக்கப்பட்ட இந்த விடுதி, உள்ளூராட்சி அதிகாரங்களுக்கும், சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டுக் கட்டப்பட வில்லை என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் அதிகாரிகளால் மூடப் பட்டுள்ளது. அடிப்படைத் திட்டங்களுக்கு முரணாக, பாதுகாப்பற்ற வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது என அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்த உணவு விடுதி 32 இருக்கைகளுடன், 1.50 லட்சம் லீற்றர் நீரின் மத்தி யில், 20 அடி ஆழத்தில் அமைந்துள்ளது. விசேட அங்கமாக 4 ஆயிரத்து 500 மீன் கள் நீரினுள் நீந்த விடப்பட்டுள்ளன. இந்த உணவகம் முழுக்கமுழுக்க சைவப் பிரியர்களுக்காக உருவாக்கப்பட்டதாகும். இதனைக் கட்டமைக்க 2 தொடக்கம் 2.5 கோடி இந்திய ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் பரப்பு 3 ஆயிரம் சதுர அடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதியின் உரிமையாளர் பாரத் பட், இதனைக் கட்ட சுகாதாரத்துறை, தீயணைப்புத்துறை மற்றும் மாநகராட்சி என்பவற்றில் அனுமதி பெற்றதாகத் தெரிவித்தார். ஆனால் அகமதாபாத் தீயணைப்புத் துறை யினர், அவருக்குத் தாம் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர். சரிவரத்திட்டமிடாத வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதால் வாடிக்கையாளரின் பாதுகாப்புக் கருதி உணவகத்தை மூடியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

# பக்தாத்தில் குண்டுவெடிப்பு

பக்தாத், பெப்.6

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பாது காப்புச் சுவர் அமைப்பது தொடர்பான அறிவித்தலை அடுத்து பிரதான வீதி யில் நேற்று முன்தினம் குண்டுவெடிப் பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் 9 பேர் கொல் லப்பட்டதுடன், 33 பேர் காயமடைந் துள்ளனர். போராளிகளின் செயற்பாடு களைக் கட்டுப்படுத்த நகரைச் சூழ மதில் அமைப்பது தொடர்பான ஈராக்கிய அதிகாரிகளது அறிவித் தலின் பின்பு இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

தலைநகரைச் சூழ எந்தவித பாது காப்பு அரணும் இல்லாததனால், 10 வருட காலமாகப் போராளிகள் இலகு வாகக் குண்டுவெடிப்புக்களை மேற் கொள்கின்றனர்.

பக்தாத்தில் உள்ள போராளிகளில் பலர் இஸ்லாமியத்தின் ஒரு பகுதியைச் சார்ந்தவர்களாவர். இவர்களின் தாக்கு தல்கள் பாதுகாப்புப் படையினரையும், சிவிலியன்களையும் குறிவைத்தே இடம்பெறுகின்றன எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (த-ரி4)

# ஐ.எஸ்ஸுக்கு எதிரா
# தரைப்படையை சவூ

## அமெரிக்கா சம்மதித்தால் நடவ

தமஸ்கு, பெப்.6

ஐ.எஸ்ஸுக்கு எதிரான கூட்டுப்படைக்குத் தலைமை வகிக்கும் அமெரிக்கா சம்மதித் தால், ஐ.எஸ். அமைப்பை ஒழிப்பதற்கு தங்கள் நாட்டுத் தரைப்படைகளை அனுப்பிவைக்கத் தயாராக இருப்பதாக, கூட்டுப்படையில் அங்கம் வகிக்கும் சவூதி அரேபியா அறிவித்துள்ளது.


ஏமனில் ஹவுத்திப் போராளிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்திவரும் சவூதி நாட்டு விமானப்படைக்குத் தலைமை வகிக்கும் ஜெனரல் அஹமத் அல் அஸ்ரி இந்த அறிவிப்பை வெளியிட்டுள் ளார்.

இந்த அறிவிப்பை அமெரிக்கா ஏற்றுக் கொண்டு சம்மதம் தெரிவித்தால், சிரியா வுக்குள் விரைவில் சவூதி தரைப்படை யினர் போரிடுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார். புருசல்ஸில் இடம் பெறவுள்ள பாதுகாப்புப் படையினரின் சந்திப்பில் இதற்கான பேச்சு இடம்பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

அமெரிக்கப் படைகளுடன் இணைந்து சவூதி அரேபியா 2014 ஆம் ஆண்டி லிருந்து ஏற்கனவே வான்வழித் தாக்கு தலில் ஈடுபட்டு வருகிறது.

இராணுவ அதிகாரி அஸ்ரி மேலும் தெரி விக்கையில், சவுதி அரேபிய அரசு ஐ.எஸ்க்கு எதிரான போரில் முனைப் புடன் செயல்பட விரும்புகிறது. வான் வழித் தாக்குதல் மட்டும் அதற்குத் தீர்வாகாது, மாறாக வேறு வழியிலும் செயற்படுவதே சிறந்ததாகும். தரை மற்றும் வான் ஆகிய இரு வழிகளில் தாக்குதல் நடத்தவேண்டும் எனத் தெரிவித்தார். ஆனால் படையினரின் எண்ணிக்கை குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

சிரியாவில் அதிபர் பர் அல் ஆசாதின் ஆட்சிக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச் சியாளர்களுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து போராயுதங் களையும் வழங்கிவரும் சவூதி அரே



"ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதி களை கைப்பற்றி அங்கு அட்டூழியம் செய்துவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெ ரிக்கா தலைமையிலான 65 நாடுகள் அடங்கிய கூட்டுப்படை யினர் அங்கு வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்."

பியா, அண்
நாடான ஏமனில்
பர் அப்த்ரப்போமன்
ஹாதியின் ஆட்சி
ஆதரித்து வருகி
றது. அங்கு அதிப
ஆட்சிக்கு எதிராக
தப் போராட்டத்தில்
பட்டு வருபவர்களு
சிரியாவின் எ
நாடான ஈரான் வெ
படையாக ஆதரவு
வித்து வருகின்றது.



தற்போது சிகா வைரஸ் உலகத்தைப் பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த வைரஸ் தொற்றுக்கான தடுப்பு மருந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தத் தொற்று, நுளம்புகள் மூலமே ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில் ஹெண்டூரஸ் நாட்டுத் தலைநகா தெகு சிகலபாவில் புகையூட்டல் மூலம் நுளம்புகளை அழிக் கும் நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டுள்ளது. (ற)

# இஸ்லாமிய இறை
# மர்மக் கும்பல் சூ

## பிரான்ஸ் பிரதமர் கடும் க

பாரிஸ், பெப்.6

பிரான்ஸ் நாட்டில் இஸ்லாமியர்கள் நடத்தி வந்த இறைச்சிக் கூடத்தை மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தித் தாக்கி அழித்துள்ள சம்பவத் துக்கு அந்தநாட்டு பிரதமர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் தீவுகளில் ஒன்றான கொர்சிகாவில் உள்ள பொப்ரியானோ என்ற நகரில் தான் இந்த அதிர்ச்சிச் சம்பவம் நடந் துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நேரத்தில் அந்த நகரப் பொலிஸாருக்குப் பரபரப்புத் தகவலொன்று கிடைத்தது.

நகரின் மையத்தில் அமைந்துள்ள இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான இறைச்சிக் கூடத்தை மர்ம நபர்கள் சிலர் மிகுந்த சேதாரம் ஏற்படுத்தும் வகை யில் தாக்கியுள்ளதாகக் தகவல் கிடைத் துள்ளது. உடனடியாக சம்பவ இடத் துக்குச் சென்று ஆய்வு செய்தபோது, இறைச்சிக் கூடத்தின் முகப்புப் பகுதி யில் 30 துப்பாக்கிக் குண்டுகள் துளைத்ததற்கான அடையாளங்கள் இருந்துள்ளன. இறைச்சிக் கூடத்தின்



உரிமையாளர்களிட
செய்தபோது அவர்க
மான குற்றங்களும்
தெரியவந்தது.
எனினும் இந்தத் தா
னணியில் யார் இரு
பது தெரியாமல் இரு
சம்பவம் தொடர்பா
குரிய 6 பேர் மீது பொ
தொடர்ந்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாகப் போராட
# ூதி அனுப்பும்

## வடிக்கை



அண்டை
னில் அதி
பாமன்சூர்
ஆட்சியை
வருகின்
அதிபரின்
திராக ஆயு
டத்தில் ஈடு
வர்களுக்கு
ன் எதிரி
ன் வெளிப்
ஆதரவு தெரி
ன்றது.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளை கைப்பற்றி அங்கு அட்டூழியம் செய்துவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா தலைமையிலான 65 நாடுகள் அடங்கிய கூட்டுப்படையினர் அங்கு வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த இராணுவ நடவடிக்கையால் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்கும் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளதாக கூறப்படும் நிலையில் மக்களோடு மக்களாய் ஊடுருவி அப்பாவிப் பொதுமக்களில் பலரை பிணைக்கைதிகளாகவும், இளம்பெண்களை பாலியல் அடிமைகளாகவும் பயன்படுத்திவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை முழுமையாக முற்றுகையிட்டு அழிக்க இயலாத சூழல் நிலவி வருகின்றது. (து-ரி4)

# றைச்சிக் கூடத்தில்
# சூட்டுத் தாக்குதல்

## கண்டனம்



ர்களிடம் விசாரணை
அவர்கள் மீது எந்தவித
களும் இல்லை என்பது

த்த் தாக்குதலின் பின்
ர் இருக்கிறார்கள் என்
ல் இருந்தாலும், இந்தச்
டர்பாக சந்தேகத்திற்
மீது பொலிசார் வழக்குத்
ளனர். இஸ்லாமியர்

களின் இறைச்சிக் கூடம் மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டமை சகித்துக்கொள்ள முடியாத காட்டுமிராண்டித்தனம் எனப் பிரான்ஸ் பிரதமரான மனுவல் வால்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். தாக்குதலுக்குக் காரணமான நபர்களை விரைவில் கைது செய்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் உறுதியளித்துள்ளார். (து-ரி4)



# ஐரோப்பாவின் முதல் நிலக்கீழ் அருங்காட்சியகம் ஸ்பெயினில்





பாரிஸ், பெப்.6

ஐரோப்பாவின் முதல் நிலக்கீழ் அருங்காட்சியகம் ஸ்பெயினில் திறக்கப்பட்டுள்ளது. கடல்வாழ்க்கையைவிரும்புவோர், நீர் மூழ்குபவர்களுக்கு உகந்த இடமாக ஸ்பானியத் தீவான லன்சரோட்டில் அமைந்துள்ள அருங்காட்சியகம் திகழ்கின்றது. நிலக்கீழ் அருங்காட்சியகத்துக்குச் சிலைகளை அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இவற்றுக்கான சிலைகளை சர்வதேச கலைஞரான ஜேசன டிகைரீஸ் ரெய்லர் வடிவமைத்துள்ளார். இவர் மெக்சிக்கோ மற்றும் அன்ரிலீஸ் இல் கடல் கீழ் அருங்காட்சியகங்களுக்கும் சிலை வடித்துள்ளார்.


ஒவ்வொரு சிலைகளும் சூழலுக்கு உகந்த கொங்கிறீற்றால் ஆனவையாகும். 12 இலிருந்து 15 மீற்றர் ஆழத்தில் வடிவமைக்கப்படும் சிலைகள் அமைவிடப் படுத்தப்படுகின்றன. இது அப்பகுதியில் வாழும் உயிரினங்களுக்கு இனச் சேர்க்கையின் போதும், முட்டைகளைப் பாதுகாக்கவும் உதவும். சூழல் பல்வகைமையைப் பேணுவதற்கு இது உதவும். மனித செயற்பாடுகளால் கடலில் ஏற்படும் பிரச்சினைகளை உணர்த்தும் விதத்தில் இந்தச் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. (து-ரி4)

# சிம்பாப்வேயில் கடும் வறட்சி

சிம்பாப்வேயில் நிலவிவரும் வறட்சி காரணமாக அங்கு பேரிடர் நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு சிம்பாப்வே ஜனாதிபதியான றொபேட் முகாபேயால் நேற்று வெளியிடப்பட்டது. கடந்த வருடம் நாட்டில் வழமைக்கு மாறாக மழை வீழ்ச்சி மிகக் குறைவாக இருந்தது. 2.5 மில்லியன் மக்கள் உணவு இன்றி அவதிப் படுகின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்தப் பிரகடனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் உலகளவில் உதவிகள் எட்டும் என சிம்பாப்வே அரசு எதிர்பார்க்கின்றது. (து-ரி4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.விஜயநாதன்
பிரம்பயடி, கொக்குவில்

# மலசலகூடம் உரிய வகையில் பேணப்படாததால் பயணிகள் பாடு திண்டாட்டம்

நான் ஜேர்மனியில் பதின்மூன்று வருடங்களும், தற்போது லண்டனில் கடந்த பதினெட்டு வருடங்களாகவும் வாழ்ந்து வருகின்றேன். முதலில் நான் ஜேர்மனியில் என் செவிகளில் விழுந்த ஒரு செய்தியை உங்களுடன் பகிர விரும்புவதில் தவறேதும் இல்லை என்றே நம்புகின்றேன். குளியல் அறை, மலசலகூடம், சமையலறை போன்றவற்றை எந்த இனம் சுத்தமாகவும்-அழகாகவும்-ஆரோக்கியமாகவும் அமைத்துக் பேணிப் பாதுகாக்கின்றார்களோ, அந்த இனம் நாகரிகத்தில் சிறந்த-உன்னதமான ஓர் இனமாக அடையாளப் படுத்தப்படுகிறது என்றும், இதில் ஜேர்மனியர்கள் முதலிடம் வகிக்கிறார்கள் என்றும் கூறுவார்கள். குறிப்பாக ஜேர்மனி, லண்டன், நெதர்லாந்து, பிரான்ஸ் போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் குளியல் அறை, மலசலகூடங்கள், சமையலறை போன்றவற்றை மிக மிக அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பார்கள். இதை நான் கண்ணால் பார்த்திருக்கின்றேன். இனி விடயத்துக்கு வருகின்றேன்.

1984இல் இலங்கையை விட்டு ஜேர்மனிக்குச்சென்று, பின்னர் 1997இல் இருந்து இன்றுவரை லண்டனில் வாழ்ந்து வரும் நான், பல முறை யாழ்ப்பாணம் (கொக்குவில். எனது ஊர்) வந்து திரும்பியுள்ளேன். நான் ஒரு இலங்கைத் தமிழ் மகனாதலால் எனது இனத்தின் குறை-நிறைகளையும் பெருமை சிறுமைகளையும் நன்றாகவே அறிந்தவன்-உணர்ந்தவன்.

ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக ஜேர்மனி, லண்டன், நெதர்லாந்து போன்ற நாடுகளில் வீடுகள், அரச கட்டடங்கள் பொதுமக்களுக்கான தொடர்மாடி வீடுகள் போன்றவற்றைக் கட்டும் போதெல்லாம் சமையலறை, மலசல கூடங்கள் போன்றவற்றுக்கு முதலிடம்-முக்கியத்துவம் கொடுத்தே மிகவும் அழகாகவும்-சகல வசதிகளோடும் கட்டுவார்கள். இதை விடவும், மேட்டார் வாகன சாலைகளில், புகையிரத நிலையங்களில் பொது மக்கள் பாவனைக்காக அமைக்கப்படும் மலசல கூடங்களை மிகவும் வசதியாக, துப்புரவாக, ஆரோக்கியமாகப் பராமரித்து 24மணி நேரமும் அழகாகவும் சுகாதாரமாகவும் பேணிப் பாதுகாப்பார்கள். ஐரோப்பியரின் பொதுநல சிந்தனைக்கு இதை ஓர் எடுத்துக் காட்டாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

தமிழினமும் நினைத்தால் இந்த விடயத்தில் ஏன் முன்னேற்றம் காண முடியாது? நிச்சயம் தமிழன் நினைத்தால் செய்ய முடியாது என்ற விடயம், காரியம் எதுவும் இருக்க முடியாது. இது என் திடமான நம்பிக்கை. தமிழர்கள் இந்த விடயத்தில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. உதாரணத்துக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்தலாம். நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேரப் பிரகாரம் ஒரு செக்கன் கூட பிந்தாமல் பூசைகள் திருவிழாக்களைக் கொண்டாடும் ஓர் இனத்துக்கு பொதுசன பாவனைக்காக மலசலகூடங்கள், சாப்பாட்டுக்கடைகள், சமையலறைகளை ஏன் மிகவும் துப்புரவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க முடியாது? ஏன் இந்த அலட்சியப்போக்கு? இந்த விடயத்தை 90 வீதமான தமிழர்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்வதில்லை என்பதே முற்றிலும் உண்மை, யதார்த்தம். முடியும் என்றால் எல்லாம் முடியும் தமிழினத்துக்கு. ஏதோ சமையலறை என்றால் உணவு தயாரிப்பதற்கு மட்டும் இருந்தால் போதும், மலசல கூடம் என்றால் ஏதோ தேவை ஏற்படும் போது மட்டும் பாவிப்பதற்கு ஒரு மறைவிடம் இருந்தால் போதும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் வரை நாம் இந்த விடயத்தில் முன்னேற்றம் காண முடியாது என்பது தான் முற்றிலும் உண்மை.

சமையலறை, கழிவறைகள் ஒரு மனிதனுக்கு, ஒரு சமுதாயத்தின் ஆரோக்கியமான வாழ்வுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதை நம் தமிழினம் உணர வேண்டும். அந்த விடயத்தை இனிமேலும் தமிழினம் தட்டிக்கழிக்கக் கூடாது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். நல்ல சிந்தனைகளோடு மக்கள் வாழ முயற்சிக்காதபோது-முன்வராதபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பொறுப்பான அரச திணைக்களங்கள் மக்களுக்கு எடுத்துரைப்பது அந்தத்தரப்புக்களின் தார்மீகக்கடமையும், தட்டிக்கழிக்கக்கூடாத ஒரு விடயமுமாகும் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

சுத்தத்துக்கு முதலிடம் கொடுக்கும் யாழ்-கொழும்பு வாகனப்போக்குவரத்துப் பயணிகள், சுத்தமானதொரு மலசல கூடம், கழுவும்அறை தேவை என்றால் அநுராதபுரம்வரை போய் சிங்கள முதலாளிமார் நடத்தும் சாப்பாட்டு விடுதிகளுக்கு போனால்தான் நல்ல சுத்தமான மலசல கூடங்களைக் காணலாம்; பாவிக்கலாம் என்ற அளவுக்கு தமிழ் பகுதிகளில் தரமானதொரு மலசலகூடம் காணப்படாதது தமிழினம் வெட்கித் தலைகுனிய வேண்டிய-கவலைக்குரிய ஒரு விடயமாகவே பல பொதுநலம் விரும்பும் தமிழர்களால் பார்க்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதற்கு ஒரு நல்ல மாற்றம் தேவை என்பதை மேலை நாடுகளில் வாழும் பல லட்சம் தமிழினத்தவர்களின் சார்பில் உங்கள் கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளேன்.

பிரத்தியேக கவனத்துக்கு,
யாழ்-கொழும்பு, கொழும்பு-யாழ் என்று நாளாந்தம் பல ஆயிரக் கணக்கான பயணிகள்-நோயாளி கள்-வயோதிபர்கள் உட்பட்ட பலர் மோட்டார் வாகனங்களிலும்-புகையிரதங்களிலும் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். யாழில் வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகள் பஸ் வண்டிகளுக்காகக் காத்து நிற்கும் நேரங்களில் தேவை ஏற்படும்போது பாவிப்பதற்கு ஒரு தரமான-சுத்தமான மலசல கூடம் பஸ்தரிப்பு நிலையங்களுக்கு அண்மையில் இல்லாமையால் பயணிகள் மிகவும் சிரமங்களுக்குள்ளாவதாகத் தகவல்கள் உள்ளன. யாழில் இருந்து கொழும்பு செல்லும் இடைவெளியில் வவுனியாசென்றடையுமுன்னர்முறிகண்டியில் ஒன்று உட்பட குறைந்தது மூன்று தரமான மிகவும் சுத்தமான நிலையில் மலசல கூடங்கள், கழுவும் அறைகள் தேவைப்படுவதாக அறிகின்றேன்-உணர்கின்றேன்.




## மகரம்

எவ்வளவு சிக்கல்கள் இருந்தாலும் தன்னுடைய லட்சியங்களைத் தவறாமல் நிறைவேற்றக்கூடிய ஆற்றல்கொண்ட, மகரராசி நேயர்களே. இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ராசியாதிபதி சனி பகவான் லாப ஸ்தானமான 11-ல் சஞ்சரிக்க இருப்பது அற்புதமான அமைப்பாகும். இதனால் பொருளாதாரரீதியாக மேன்மை, எடுக்கும் முயற்சிகளில் வெற்றி, செய்யும் தொழில், வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டுத்தொடர்பு ஆகியவற்றாலும் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிட்டும். பயணங்களால் அனுகூலப் பலனை அடையமுடியும். உத்தியோகம் செய்பவர்களும் எதிர்பார்த்துக் காத்திருந்த உயர்வுகளைப் பெறமுடியும். உயரதிகாரிகளின் ஆதரவுகள் சிறப்பாக இருக்கும் என்றாலும் 08-01-2016 முதல் கேது 2-லும், ராகு 8-லும் சஞ்சாரம் செய்யவிருப்பதால் உடன் பணிபுரிபவர்களை அனுசரித்துச் செல்வது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. இதுமட்டுமின்றி 02-08-2016 வரை பொன்னவனான குரு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் பணவிடயங்களில் ஆண்டின் தொடக்கத்தில் கவனத்துடன் செயல்படுவது நல்லது. கொடுக்கல்- வாங்கலில் பிறரை நம்பி உத்தரவாதம் கொடுப்பது, வாக்குறுதி கொடுப்பது போன்றவற்றைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம். 02-08-2016 முதல் குரு பாக்கிய ஸ்தானமான 9-ஆம் வீட்டிற்கு மாற விருப்பதால் தடைப்பட்ட சுப காரியங்களும் தடைகளும் விலகிமுயற்சிகள் கைகூடும். ஆரோக்கியரீதியாக சிறுசிறு உடல் பாதிப் புகள் ஏற்பட்டாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயற்பட முடியும். நெருங்கியவர்களின் ஆதரவுகளால் மனமகிழ்ச்சியும், குடும்பத்தில் சுபிட்சமும் உண்டாகும். சிலருக்கு அசையும்- அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகமும் ஏற்படும்.

### உடல் ஆரோக்கியம்

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கிரக நிலைகளின் சாதகமற்ற சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்பட்டு அடிக்கடி மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வாழ்க்கைத்துணைக்கும் அனுகூலமற்ற பலன்களே உண்டாகும். ஓகஸ்ட் மாதம் முதல் குடும்பத்தில் படிப்படியாக முன்னேற்றங்கள் உண்டாகும். நெருங்கியவர்களிடம் ஏற்படக்கூடிய தேவையற்ற பிரச்சினைகளால் மனச் சஞ்சலங்கள் ஏற்படும்.

### குடும்பம், பொருளாதார நிலை

ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதார நிலையில் நெருக்கடிகள் ஏற்பட்டாலும், சனி லாப ஸ்தானத்திலிருப்பதாலும், ஓகஸ்ட் மாதம் முதல், குரு 9-ல் சஞ்சரிக்க இருப்பதாலும், பணவரவுகளுக்குப் பஞ்சமிருக்காது. தடைப்பட்ட சுப காரியங்களும் கைகூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகளைப் பெறுவீர்கள். உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடந்து கொண்டால் நற் பலன்களைப் பெறமுடியும்.

### உத்தியோகம்

உத்தியோகஸ்தர்கள் பணியில் நிம்மதியும் எதிர்பாராத பதவி உயர்வுகளையும் இடமாற்றங்களையும் பெற முடியும் என்றாலும் ஓகஸ்ட் மாதம்வரை எதிலும் சற்றுச் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. உங்கள் ராசியாதிபதி சனி 11-ல் சாதகமாகச்சஞ்சரிப்பதால் வெளியூர், வெளி நாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்பு பவர்களின் விருப்பம் நிறைவேறும். உயரதிகாரிகளிடம் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்துப்பொறுப்புடன் பதிலளிப்பது நல்லது.

### தொழில், வியாபாரம்

தொழில், வியாபாரம் செய்பவர்கள் ஆண்டின் தொடக்கத்தில் பெரிய முதலீடுகளை மேற்கெண்டு செய்ய நினைக்கும் காரிங்களில் சிந்தித்துச் செயற்பட்டால் ஓகஸ்ட் மாதம் முதல் சிறப்பான முன்னேற்றங்கள் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கூட் டுத் தொழில் செய்பவர்கள் தொழிலாளர்களைச்சற்று அனுசரித்துச் செல்வதால் எதிர் பார்த்த லாபங்களைப் பெறமுடியும். பயணங்களால் அனுகூலம் உண்டாகும்.

### கொடுக்கல்- வாங்கல்

தரகு, முகவர் , ஒப்பந்தம் ஆகிய துறைகளில் உள்ளவர்கள் ஆண்டின் தொடக்கத்தில் எதிலும் நிதானத்தைக் கடைப்பிடித்தால் ஓகஸ்ட் மாதம் முதல் நல்ல லாபகரமான நிலையைப் பெறுவீர்கள். கொடுக்கல்-வாங்கல் சரளமான நிலையில் நடைபெறும். எதிர் கொள்ளும்வழக்குகள் சற்றே இழுபறி நிலையில் இருந்தாலும் தீர்ப்புச்சாதகமாகவே இருக்கும்.

### அரசியல்

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைத் தக்க சமயத்தில் நிறைவேற்றுவதால் மக்களின் ஆதரவு உங்களுக்குச் சிறப்பாகவே இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் கட்சிப் பணிகளுக்காக நிறையச் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலைகள் உண்டாகும். என்றாலும் ஓகஸ்ட் மாதம் முதல் சில திருப்புமுனைகள் ஏற்படும். எடுக்கும் காரியங்களில் வெற்றியும், பொருளாதார ரீதியாக மேன்மைகளும் உண்டாகும். பணவரவுகள் சிறப்பாக அமையும். மாண்புமிகு பதவிகளும் தேடிவரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத்திலும் துன்பத்திலும் சிரித்திடு மகளே



கே.எஸ்.சிவஞானராஜா

“எதற்கும் ஒரு காலம் உண்டு பொறுத்திடு மகளே. இன்பத்திலும் துன்பத்திலும் சிரித்திடு மகளே” என்ற பாடல் வரிகளுக்கு உயிர் கொடுத்தவர் எம்.எஸ். விஸ்வநாதனாவார். கவிஞருக்கு இந்தப் பாடலில் உயிராகக் கோடிடுவது பெண்கள் படுகின்ற துன்பமே ஆகும். உலகத்தில் துன்பம் 100 வீதம் என்று கொள்ளப்படுமாயின் 80 வீதமான துன்பங்களைப் பெண்களே சுமக்கின்றார்கள். இதன் நிமித்தமே அவர்களுக்காய்ப் பரிந்து தானாக ஒரு தர்ம வார்த்தைக்குத் தந்தையாகின்றார். அவர்கள் படுகின்ற துன்பங்களில் தானும் ஒரு பங்காளியாகி தக்கவோர் உளவியல் சிகிச்சையை அளித்து விடுகிறார். சினிமாவுக்குள் இருந்து சொல்லப்படுகின்ற செய்திக்கும் சமூகம் செவி சாய்ப்பதை வானொலி, தொலைக்காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன. இதனால் மேலும் ஆன்மிகம், அரசியல், சினிமா, விளையாட்டு யாவற்றிலும் வென்று விடுகின்றன.

**இன்பமயம்**

திருமணத்துக்கு முன்பு ஏற்படுகின்ற சந்தோசம், கனவு, கற்பனை, சிநேகிதம், சுதந்திரம், பயமின்மை, பக்தி, பாசம், உதவிகள், உணர்வுகள், உணர்ச்சிகள், உறவுகள், உணவுகள், உடை நடை பாவனைகள், அளவில்லாத எல்லாமே இன்பம் பயப்பனவாக நிலைத்து நிற்கும். இளங்கன்று பயமறியாது. ஆதலால் எல்லோரையும் தன் வயப்படுத்தும். துன்பம் என்றால் விளங்காது. அது எப்படி இருக்கும் என்று புரியாது. அப்படி ஒரு துன்பம் வந்தாலும் அது பெரிதாகத் தெரிவதில்லை. வயது அப்படி. துவள மாட்டாள். சமாளிப்பாள் அதையும் தாங்கிச் சிரித்துவிடுவாள். பெரிய பெரிய விடயங்களை எல்லாம் தாங்கிச் சமாளிப்பாள். பணம் ஒரு பெரிய சுமையாக அவளை வாட்டுவதில்லை. அப்பா, அம்மா, அண்ணன்மார் இருக்கும்போது எதற்காக அவள் வருந்தவேண்டும். எல்லோருமே எச்சரிக்கையாக இருக்கும்போது வீட்டுக்குள்ளே துன்பம் வருவதற்கு எந்த நியாயமும் இருக்காது. அவளது சிரிப்புக்கு எந்தவித தடங்கலுமே இருக்காது, இலக்குமிகரமாய், இலட்சணமாய் இப்போது பெண்பிள்ளைகள் இருப்பதனால் திருமணப் பாதைகள் வடிவாக செப்பனிடப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், கல்வியில் அதிக அக்கறையைப் பெண்கள் காட்டுவதால், பெண்கள் தனித்துவமான ஆளுமைச் சிரிப்பினில் உதித்துவிடுவார்கள். இந்த ஆளுமைச் சிரிப்பினில் பலர் அகப்பட்டு விடுகிறார்கள். ஆனால் இந்தச் சிரிப்பின் மகத்துவத்தைப் புரியாதவர்கள் சிக்குப்படும்போதுதான் துன்பத்தின் அத்தியாயம் தொடங்குகின்றது. ஒரு 'பெண்ணுக்கு வெளியில் இருந்து ஊடுருவும் எந்தவொரு பார்வைக்கும் சரியான பதிலடி கொடுக்க அவளால் முடியும். இனிவரும் காலம் எதற்கும், எவற்றுக்கும் சமாளிக்கவல்லதான ஒரு பாடம், பாடாந்தரமாக ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைய வேண்டியது காலத்தின் தூண்டுதலாகும். சிரிப்பதைக் கைப்பற்றுவது துன்பத்திலேயே முடிவது கண்கூடு. பாத்திரம் அறிந்துதான் சிரிப்பையும் முதலீடு செய்ய வேண்டும். பாத்திரம் எல்லாம் நல்ல பாத்திரம் என்று சொல்ல முடிவதில்லை. ஓட்டையும் இருக்கும், நெளிவும் இருக்கும். ஆனால் வடிவாக இருக்கும். வடிவானவை என்பது நடையுடை பாவனைக்கு அப்பால் உள்ளே இருக்கும் சித்தத்துள் தித்திக்கும் தேனாக இருத்தலே அவசியம் வேண்டப்படுகிறது.

**துணை**

இளமைக்கு எப்போதுமே பாதுகாப்பான துணை வேண்டும் என உடலும் உள்ளமும் தேடுகின்றது. இளமையின் தாகமே அதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்திலே தான் இளமையும், சிரிப்பும் ஊஞ்சலாடுகின்றன. இந்தக் கட்டத்தில் நல்லதோர் குரு கிடைத்துவிட்டால் ஒருபெண் அவள் யாராக இருந்தாலும் சரி வெல்லப்படுகிறாள். அந்தக் குருவானவர்கள் யார்? யார்? யோகிகள், ஞானிகள், சித்தர்கள். யோகி எனப்படுபவரைப் பார்த்த மாத்திரத்திலேயே பக்குவம் அடையலாம். இவர்கள் ஐம்புலன்களையும் வென்றவர்கள். ஐம்புலன்களை அடக்குவது வேறு. வெல்வது வேறு. அடக்கினால் ஏதோவொரு வகை யில் மீளவும் பீறிடும். வென்றால் எந்தச் சந் தர்ப்பத்திலும் யோகிகள் தோற்க மாட்டார் கள். யோகிகளை “இலங்கை” தேடிக் கொண்டு இருக்கிறது. கிடைக்கவில்லையே?.

ஞானிகள் எனப்படுவோர், நூல்களை நன்கு ஆராய்ந்து, தெளிந்து, ஐயந்திரிபற முப்பொருள்களையும் எடுத்தியம்ப வல்லவர்கள். நிலையாமையை அழுத்திச் சொல்லவல்ல தீர்க்கதரிசிகள். எந்த வினாக்களுக்கும் விடை சொல்லக் கூடியவர்கள். ஆசைகளை எல்லைப்படுத்துவதற்கு இல்லற தர்மமே சிறந்தது என்பதை உணர்த்தி, துறவற மகிமைக்கு வழிகாட்டுபவர்கள். இன்பதுன்பங்களிலும் சமனாக உள்ளத்தை வைப்பிலிடுவதற்கு, ஆன்மிக வாயிலாக ஆனந்தமதை அள்ளித்தருபவர்கள். இன்பத்திலும், துன்பத்திலும் சிரித்துச் செப்பனிட்டு எம்மைச் சமாதானப்படுத்துபவர் ஞானிகளே ஆவர். இதன் தார்ப்பரியத்திலே தான் கண்ணதாசன் ஆன மகாகவிஞர், மொழிந்த அழியாத கூற்று, இன்பத்திலும் துன்பத்திலும் சிரித்திடு மகளே! சிரித்திடு மகனே! மெஞ்ஞானிகள் ஆனவர்கள், இல்லறத்துக்குள் நுழைந்து தப்பி வெளிவந்தவர்கள் என்றில்லாமல், இல்லறத்துக்குள் புகுந்து போதும் போதும் என்று அனுபவித்தும், போதுமாறு அனுபவிக்கச் செய்தவர்களுமாவர். எனவேதான் தாம்பட்ட துன்பத்தையும், வேதனைகளையும், வலிகளையும் கூடவே பெண்பட்ட ஆறாத் துயர்களையும் கவனத்திலெடுத்து பெண்ணைச் சமாதானப்படுத்துகின்றனர் ஞானிகள். ஈற்றில் வெற்றி கிடைக்கும் என்ற தோறணையில்தான்

*இன்பத்திலும் துன்பத்திலும்*
*சிரித்திடு மகளே!*
*இன்பத்திலும் துன்பத்திலும்*
*பொறுத்திடு மகளே!*
*சிரித்திடு மகனே! பொறுத்திடு மகனே!*

மகளுக்கும், மகனுக்கும் இந்தக் கருத்துப் பொருந்துவதாகும்.

சித்தர்கள், எனப்படுபவர்கள் விருப்பு வெறுப்பு அற்றவர்கள். வீடு, வாசல், ஆசை, மனைவி, பட்டம், பதவி, உண்டி, உறையுள் என்று எதிலுமே ஆசையைத் துறந்தவர்களாவர். இவர்கள் சிரிப்பார், களிப்பார், தேனிப்பார், நடிப்பார், படுப்பார், அழப்பார், பேசுவார், ஆடுவார், பாடுவார், ஓடுவார். இவ்வாறு இந்த உலகையே ஒரு பொருட்டாக எண்ணாத சித்தர்களை எந்தவித ஆசையும் பீடிப்பதில்லை. இவர்கள் இறைவனோடு மட்டும் எப்போதும் கதைத்துக் கொள்வார்கள். இந்தமூன்று வகையினரும் உலாவிய இந்த மண்ணிலே வாழ்ந்து வருகின்றோம். இந்த மூவரில் ஒருவராவது ஒரு பெண்ணுக்கோ, ஆணுக்கோ உரிய பருவத்தில் கிடைப்பார்களாக இருந்தால் யாதொரு துன்பமும் வந்த வழியே திரும்பிப் போய்விடும்.

பிறந்தது முதல், பூப்பு, திருமணம், சீதனம், பிரசவம், குழந்தைப் பராமரிப்பு, கணவனது கடமை, வேலைப்பளு, வீட்டுப் பராமரிப்பு, சமையல், படுக்கையறை, பெற்றோரது கடமை, விரதங்கள் எல்லாமே அவளைப் போட்டு வாட்டி வதைக்கின்றன.

**'சிரிக்கவே முடிவதில்லை'**

இப்பொழுது இந்த மண்ணுக்குத் தேவையானது நல்ல வழிகாட்டிகளே. இந்த வழிகாட்டிகளுக்காகவே இந்த மண் தவம் செய்கிறது. இணுவில் தவம் செய்து கொண்டு இருப்பதனால், அந்த மண்ணில் இப்போதும் அருளாளர்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் ஒருவரே பெரியண்ணராவார். அங்குதான் ஆறுதல் உண்டு.

> இனிவ்ரும் காலம் எதற்கும், எவற்றுக்கும் சமாளிக்க வல்லதான ஒரு பாடம், பாடாந்தரமாக ஆணுக்கும் பெண் ணுக்கும் அமைய வேண்டியது காலத்தின் தூண்டுதலாகும். சிரிப்பதைக் கைப்பற்றுவது துன்பத்திலேயே முடிவது கண் கூடு. பாத்திரம் அறிந்துதான் சிரிப்பையும் முதலீடு செய்ய வேண்டும். பாத்திரம் எல்லாம் நல்ல பாத்திரம் என்று சால்ல முடிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம்...



## வரலாற்றில் இன்றைய தினம்

1685 - இரண்டாம் சார்ள்ஸ் மரணமானதையடுத்து இரண்டாம் ஜேம்ஸ் இங்கிலாந்தின் அரசரானார்.

1806 - சான்டெமிங்கோ போரில் பிரான்ஸ்ஸை பிரிட்டிஸ் கடற்படை வெற்றி கொண்டது.

1820 - லைபீரியாவில் குடியமர 86 ஆபிரிக்க அமெரிக்கார்கள் அமெரிக்க குடியேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் புலம் பெயர்ந்தனர்.

1900 - கேஹ்கில் சர்வதேச நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

1918 - 30 அகவைக்கு மேற்பட்ட பிரித்தானியப் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டனர்.

1951 - கொரியப் போரில் கனடியன் படை பிரவேசம்.

1951 - அமெரிக்க வரலாற்றில் மிக மோசமான பென்சில்வேனிய ரயில் விபத்தில் 85பேர் சாவு. 500 பேர் வரை காயம்.

1952 - இரண்டாம் எலிசபெத் மகாராணி தனது தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் காலமானதைத் தொடர்ந்து பிரித்தானிய மற்றும் பொதுநலவாய நாடுகளின் அரசியானார்.

1958 - மியூனிச் விமான விபத்தில் மான்செஸ்டர் யுனைற்றட் கால்பந்தாட்டச் சங்க வீரர்களும் மற்றும் 15 பயணிகளும் சாவடைந்தனர்.

1975 - தீர்க்கமான இடைத் தேர்தல் காங்கேசன் துறைத் தொகுதியில் இடம்பெற்றது.

1987 - முதலாவது உயர்நீதிமன்ற பெண் நீதிபதியாக மேரி கவுட்றோன் ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்டார்.

1989 - கிழக்கு ஐரோப்பாவில் கொம்யூனிஸ்ட் ஆட்சியை வீழ்த்தத் தொடங்கும் வட்ட மேசை மாநாடு போலந்தில் இடம்பெற்றது. 1998 - கொம்பனித்தெருவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 5 படையினர் உட்பட 9 பேர் சாவு 20 பேருக்குப் படுகாயம்.

1995 - தொண்டமான் தலைமையிலான தமிழர் ஐக்கிய மன்றத்தில் சேர்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி மறுத்ததுடன் கூட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை.

1995 - விடுதலைப் புலிகள் வசம் நவீன விமான எதிர்ப்பு ஆயுதங்கள் உள்ளதாகவும் பாதுகாப்புப்பிரிவு உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிப்பு.

## கொய்யாப்பழம்



கொல்லையிலே கொய்யா மரம்
காய்த்துத் தொங்கும் கொய்யாப்பழம்
எட்டிப் பறிக்க முடியவில்லை!
எனக்கு உதவ வாருங்களேன்!

பழம் இருக்கு மரத்திலே
பயம் இருக்கு மனத்திலே
யாரும் இல்லை வீட்டிலே
வாரும் மரத்தில் ஏறவே

பழங்கள் பறித்துப் போடலாம்
பங்கு போட்டுத் தின்னலாம்
ஆஹா நாமும் மகிழலாம்
அப்பா வந்தால் ஓடலாம்

# நயவஞ்சக நரி



ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. ஒரு முறை நிறைய உணவை ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று அது விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது.

மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப் போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தில் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாமே என்றெண்ணிற்று நரி.

அதன் எண்ணம் வீண் போகவில்லை. ஒரு கழுகு ஜோடி ஒரு நாள் அந்த மரத்தடிக்கு வந்தன. மரப் பொந்தில் மிகவும் சாது மாதிரி படுத்துக் கிடக்கும் நரியைப் பார்த்தன.

"நரியாரே! நீர் இந்த மரப் பொந்தில் எவ்வளவு காலமாக இருக்கிறீர்" என்று கேட்டது ஆண் கழுகு.

"இந்த மரப் பொந்தில் பல வருடங்களாக இருக்கிறேன்...! ஏன் கேட்கிறீர்?" என்று கேட்டது நரி.

"என் மனைவிக்கு முட்டையிடும் காலம் நெருங்குகிறது. இந்த மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாமா என்று ஓர் ஆசை" என்றது ஆண் கழுகு.

"ரொம்ப ராசியான மரம் இது... முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது!" என்றது நரி.

"ஆபத்து ஏதாவது உண்டாகுமா?" என்று கவலையோடு கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன். இந்தப் பொந்தே கதி என்று கிடக்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!" என்றது நரி.

பிறகு மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி, "அங்கு கூடு கட்டிக் கொள்ளுங்கள். மிகவும் வசதியாக இருக்கும்!" என்றது.

ஆண் கழுகும், பெண் கழுகும் அந்த இடத்தில் கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடிச் செல்லும் பொழுது, "என் மனைவி மட்டும் கூட்டிலிருக்கிறாள். அவளால் பறக்க முடியவில்லை... இன்றோ, நாளையோ முட்டை இடப்போகிறாள்... கொஞ்சம் பார்த்துக் கொள்ளும் நரியாரே!" என்றது.

கவலைப்படாமல் போய் வாரும் நண் பரே! நான் இங்கிருக் கும் வரை எந்த ஆபத்தும் அண்டாது! என்றது நரி.

எமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணி இரை தேடப் பறந்து சென்றது ஆண் கழுகு.

பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்து அவை சுமாராகப் பெரிதானதும், எல்லாவற்றையும் சாப்பிட்டு விட வேண்டுமென்று நரி எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, மரத்தடியில் புதிதாக வந்த பன்றியொன்றும், அதன் கொழு கொழு குட்டிகளும் அதன் பார்வையில் பட்டன.

பன்றிக் குட்டிகளைச் சாப்பிட்டுப் பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே என்றெண்ணிற்று நரி.

"நரியாரே இந்த மரத்தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா?" என்று கேட்டது தாய்ப் பன்றி.

நன்றாகவே தங்கலாம்!" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிகளுக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரி யாரே?" என்று கவலையோடு கேட்டது தாய்ப் பன்றி.

"நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே... கவலையே படாதே...! நான் வயதானவன். இந்தப் பொந்தே கதி என்று கிடப்பவன்...! எதிரிகள் எவரையும் மரத்தருகில் அண்டவே விடமாட்டேன்...! நானிருக்கப் பயமேன்?" என்றது நரி.

பன்றி தனது குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக் கொண்டது. நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக் குட்டிகளும் கர், கர் என்று உறுமியபடி உலாவிக் கொண்டிருந்தன.

வந்ததற்கு இப்போது பன்றிக் குட்டிகள் மிகவும் பருத்திருந்தன. தாய்ப் பன்றியும் தான். அவைகளை எப்படிச் சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண் கழுகையும், பெண் கழுகையும் அழைத்தது.

"இதோ பாருங்கள்...! மரத்தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம்... உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது!"என்றது. இரண்டு கழுகுகளும் இரை தேடக் கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளைக் காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போகப் பயந்தன.

மேலே ஒருமுறை பார்த்துவிட்டு குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

பன்றியே...! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன!என்றது நரி. பன்றி ஒரேயடியாக பயந்து போய் விட்டது. குட்டிகளைக் எல்லாம் தன் காலின் கீழ் அழைத்துக் கொண்டது. மரத்தடியிலேயே இருக்க வேண்டும். குட்டிகளை தனியாக விட்டு விட்டு போய் விடக்கூடாது. கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண் போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது தாய்ப் பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், தாய்ப் பன்றியும், பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து, துவண்டு ஒரு நாள் எல்லாமே இறந்து போயின. நரியின் தந்திரத்தால் அது விரும்பியதுபோல் நிறையச் சாப்பிட கழுகுகளும், பன்றிகளும் கிடைத்துவிட்டன.

எவரெவரிடம் நட்புக் கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும், பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா? நல்லவர்களோடு மட்டுமே நட்புக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கஞ்சாத் தொழிலில் மோகம் ஏன்?

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

கந்த புராணக் கலாசாரமாக விளங்கிய யாழ். நகர் கஞ்சாக் கலாசாரத்தின் தலைநகராகியது ஏன்?

நாவலர் காலத்திலிருந்து கந்த புராணக் கலாசாரம் மிகுந்த சிறப்புமிகு இடமாக விளங்கிய எமது யாழ்.நகரம், இன்று திடீரெனக் கஞ்சாத் தொழிலில் மோகம் கொண்டுள்ளது மிகவும் மனவருத் தமான ஒரு விடயமாகும். பல நன் மனிதர்கள் தோன்றி நல்ல திருநகராக விளங்கிய யாழ். நகரம் மிகவும் சீரழிந்து எமது கலாசாரத்தை மீறிச்செல்வது இது தான் முதல் தடவை.

> மாறிவரும் தொழிநுட்ப உலகில் எம் யாழ்.நகரம் மிகவும் கீழ்த்தரமாக இருக்க இதுவும் ஒரு காரணந் தான். இதற்கு முன்னும் பல முறை கஞ்சாத் தொழிலில் எம் யாழ்.நகர் ஈடுபடுவதை நாம் அறிவோம்.

மாறிவரும் தொழிநுட்ப உலகில் எமது யாழ். நகரம் மிகவும் கீழ்த்தரமாக இருக்க இதுவும் ஒரு காரணந்தான். இதற்கு முன்னும் பல முறை கஞ்சாத் தொழிலில் எமது யாழ்.நகர் ஈடுபட்டதை நாம் அறிவோம். தற்போது மனிதர்கள் காலைவேளையில் சிறுபசிக்காக உண்ணும் பாணில் கூட கஞ்சாவை மறைத்துக்கடத்தியது மிகக் கீழ்த்தரமான விடயம் ஆகும். காலம் காலமாக நற் பழக்கவழக்கக் கலாசாரத்துடன் கூடிய எமது யாழ்.நகரம் மிகவும் தீயபழக்கம் கொண்ட கலா சாரத்துடன் கூடிய நடத்தை கொண்டு காணப்படுகிறது. இலங்கையின் 25 மாவட் டங்களில் சிறந்த மாவட்டமாக விளங்கிய எமது யாழ். மாவட்டம் ஆங்காங்கே கஞ் சாத் தொழிலில் சிக்கிச் சின்னாபின்னமாகி உள்ளது. இது,யாழ். மக் களான எமக்குத் தாங்கமுடியாத மன வருத்தத்தை அளிக்கிறது. கஞ்சா ஒரு போதைப்பொருள். இன்னமும் சிறிது காலத்திலே யாழ். மக்கள் இந்தப் போதைக்குள் மூழ்கிவிடுவார்கள் என அச்சமாகவும் உள்ளது. இலங்கையில் தற்போது பாடசாலை மாணவர்களிடமே பாகுபாடின்றி இந்தக்கஞ்சாவைத் திணிப்பதனால், எமது மாணவ சமுதாயம் கஞ்சாவினால் கல்வியை இழக்கும் தறுவாயில் உள்ளது. அதிகமான புள்ளிகள் மூலம் எமது மாணவர்கள் நன்றாகப் படிப்பது ஒரு சிலருக்குப் பொறாமையாக உள்ளதால், அவர்களின் கல்வியை அழிக்கவும் இக்கஞ்சாவை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர்.

கஞ்சா மூலமாகவே பல்வேறு குடும்ப வன்முறைகளும் ஏற்படுகின்றன. கஞ்சா எமது உடலில் சேர்வதால் உடலில் ஒருசில மாற்றம் தென்பட்டு, அதன் மூலமாக அழிவையும் ஏற்படுத்த கஞ்சா ஒரு கபட மருந்தாகவும் பயன்படுகிறது. கஞ்சாவினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பாடசாலை மாணவர்களே! கஞ்சாவினால் பெண்கள் மீதான வன் கொடுமை, பள்ளிசெல்லும் மாணவர் மீதான வன் கொடுமை எனப் பலவகைச்செயற்பாடுகள் எம்மைச் சுற்றியுள்ள சூழலில் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. கடந்த வருடம் இடம்பெற்ற வித்தியா, சேயா போன்ற சிறு பெண்களின் படுகொலைகளுக்கும் கஞ்சா ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இன்று பல்வேறு கொலைகளுடன் இந்தக் கஞ்சா தொடர்புபடுகின்றது. வன்மையான நகரமாக யாழ். நகர் திடீரென மூழ்குவதற்கு இதுவே அத்திபாரமிட்டுக் கொண்டு இருக்கிறது. இலங்கையின் தலையென வர்ணிக்கப்படும் எமது யாழ்.நகர் கஞ்சாவின் மத்திய நிலையமாக தற் போது காட்சியளிப்பதால், எம் மூதாதையரும் மாணவர் சமுதாயமும் மிகவும் அச்சம் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தவகையில்முற்று முழுதாக கஞ்சாவை ஒழிப்பதில் நாம் கவனம்செலுத்தவேண்டும். கலாசாரத்தை மதிப்போம் கஞ்சாவை ஒழிப்போம்.

ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.



# தேசிய கீதமும் நல்லிணக்கமும்

நடைபெற்று முடிந்த சுதந்திர தின தேசிய வைபவத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப் பட்டுள்ளது. தேசிய நிகழ்வின் இறுதியில் பாடப் பட்டிருந்தாலும், சுதந்திர தினத்தில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட்ட ஒரு பதிவு உருவாகியுள்ளது.

தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் சலசலப்பை உருவாக்கியுள்ளது. நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்காகத் தமிழில் பாடப்பட்டிருந்தாலும், அதன் நோக்கம் சரியாக இருந்தாலும் இனவாதிகளினால் அது சிதைக்கப் பட்டுள்ளது. சிங்கள இனவாதிகள் மாத்திரமல்ல தமிழ் இனவாதிகளுமே இதனைத் தவறான நோக்கத்துக்கு உரியதாக்கியுள்ளனர்.

தேசிய கீதம் சுதந்திர தினத்தில் தமிழில் பாடப் பட்டால் என்ன, பாடப்படாவிட்டால் என்ன தமிழ் மக்களுக்கு அதனால் என்ன வரப் போகின்றது என்று கேட்பவர்களும் இருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு ஏராளம் பிரச்சினைகள் இருக் கின்றன. மீள்குடியேற்றம், காணாமற்போனோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்று அடுக்கடுக்கான பிரச்சினைகள் இன்னமும் முழுமையாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. தேசிய கீதத்தைத் தமிழில் பாடி இவை அனைத்தையும்,சமாளிக்கப் பார்க்கின்றது இந்த அரசு என்பது தமிழர் சிலரின் கருத்தாக இருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் இந்தத் தருணத்தில், தமிழ் மக்களுக்கான நல் லிணக்கச் சமிக்ஞையாக இதனைச் செய்து முடித்துள்ளோம் என்று இலங்கை அரசு இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் தமிழர் சிலர் குறிப்பிடுகின்றனர்.

மறுபுறம் சிங்கள இனவாதிகள், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதன் மூலம், தமிழ் மக்களுக்குத் தனிநாடே கொடுக்கப்பட்டுவிட்டது என்ற "லெவலுக்கு" தங்கள் பரப்புரைகளைத் தொடங்கியிருக்கின்றனர். பல மொழிகள் கொண்ட இந்தியாவிலேயே தேசிய கீதம் ஒவ்வொரு மொழியிலும் பாடப்படுவதில்லை என்று சொல்லி சிங்கள இனவாதத்தீயை மேலும் எண்ணெய் ஊற்றி வளர்க்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த.

தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதை வைத்தே, ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராகக் கடும் பரப்புரைகளைத் தொடக்கியிருக்கின்றனர் சிங்கள இனவாதிகள். இந்த எதிர்ப்புக்கள் யாவும் தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப் படு கின்றது என்றவுடனேயே தொடங்கியதுதான்.




எந்த எதிர்ப்புக்கள் வந்தாலும், தமிழில் தேசிய கீதம் பாட வைப்பது என்பதில் உறுதியாக இருந்து அதனை நிறைவேற்றியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரி.

தமிழ் - சிங்கள நல்லிணக்கத்துக்காக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், அது சரியான பலனை உடனடியாகத் தரவில்லை. ஆனாலும், இது ஓர் ஆரம்பமாக இருக்கட்டும்.

எதிர்ப்புக்களைச் சமாளித்து இந்த விடயத்தில் முன்னகர்ந்த ஜனாதிபதி மைத்திரி, ஏனைய விடயங்களிலும் குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகள் - காணாமற் போனோர் விவகாரம் - மீள்குடியேற்றம் என்பவற்றிலும் சிங்கள இனவாதிகளின் கூச்சல்களைப் புறந்தள்ளி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அறிமுகம் இல்லாதவர்களுடன் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவை விட நிர்வாகச் செலவு கூடும். ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**இடபம்:** அன்றாடப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**மிதுனம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி நிலை உருவாகும். வருமானம் அதிகரிக்கும். உறவினர் கூடுதல் அன்பு பாராட்டுவர்.

**கடகம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். செயல்களில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த நிலுவைப் பணி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** செயல்களில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, கடின உழைப்புத் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர நாட்டத்துடன் செயற்படுவர்.

**கன்னி:** வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை அவசியம்.

**துலாம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். குடும்பத்தினருக்காக சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள். வாகனப் பயணம் இனிமை சேர்க்கும்.

**விருச்சிகம்:** அவப்பெயர் வராத அளவில் செயற்படவும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பெண்கள், குடும்பச் செலவுக்காகக் கடன் வாங்குவர். தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும்.

**தனுசு:** நண்பரிடம் சுவாரசியமாகப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தேக்க நிலைவரலாம். சுமாரான இலாபம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்:** பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணத் தேவை அதிகரிக்கும். இலாபம் சுமார். உறவினர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர்.

**கும்பம்:** செயல்களில் எளிமை நிறைந்திருக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**மீனம்:** ஆதாய நோக்கில் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.



செந்தில்: அண்ணே எனக்கு ஒரு சந்தேகம்
கவுடமணி: சொல்லுடா கப்ளிங் தலையா
செந்தில்: மொளகா பொடி எதுல இருந்து வருது
கவுடமணி: மொளகாயிலிருந்து..
செந்தில்: மஞ்சள் பொடிண்ணே
கவுடமணி: மஞ்சள்ள இருந்து..
செந்தில்: அப்போ பல்பொடிண்ணே
கவுடமணி:?.........

தனக்கு கிடைக்காதது
யாருக்கும் கிடைக்கக்கூடாது
என்று சிந்திக்கிறவன்
சமூக விரோதியாகிறான்..!

தனக்கு கிடைக்காதது
மற்றவர்களுக்காவது கிடைக்கட்டும்
என்று கருதுபவன்
சமூக சீர்திருத்தவாதியாகிறான்..!



## வெளியீட்டுக்குத் தயாராகும்
# இது நம்ம ஆளு

அண்மைக்காலமாக சிம்பு நடிப்பில் உருவான படங்கள் அனைத்தும் வெளிவருவதில் பெரும் பிரச்சினைகள் எழுந்த வண்ணம் உள்ளன. இதனால், சிம்புவின் படம் எப்போது வெளியாகும் என்று இரசிகர்கள் கேள்விக்குறியுடனே எதிர் பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

இப்படித்தான், சிம்பு நடித்த "வாலு" படம் பல்வேறு வெளியீட்டுத் திகதிகள் அறிவிக்கப்பட்டு, கடைசியில் தடைகளை எல்லாம் முறியடித்து வெளிவந்தது. அதேபோல், சிம்பு தற்போது நடித்துள்ள "இது நம்ம ஆளு" படத்துக்கும் தற்போது நல்ல காலம் பிறந்துள்ளது.

தயாரிக்கப்பட்டு நீண்டநாள் கிடப்பில் கிடந்த இந்தப் படத்தின் வெளியீட்டுத் திகதியைத் தற்போது அறிவித்துள்ளார்கள். படத்தை மார்ச் மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்போவதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

பாண்டிராஜ் இயக்கிய இந்தப் படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக நயன்தாரா, ஆண்ட்ரியா ஆகியோர் நடித்துள்ளனர். சிம்புவின் தம்பி குறளரசன் இசையமைப்பாளராக அறிமுகமாகியிருக்கும் இந்தப்படத்தை பசங்க புரொடக் ஷன்ஸ் நிறுவனமும், சிம்பு சினி ஆர்ட்ஸ் நிறுவனமும் சேர்ந்து தயாரித்துள்ளன. தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் படத்தை வெளியிடவுள்ளது.

## உன்னுடைய ஆசை என்ன?

ஆசிரியர்:- பெருசா ஆனதும் நீ என்ன செய்யப் போற?
மாணவன்:- கல்யாணம் செஞ்சிக்குவேன் சார்..
ஆசிரியர்:- அத கேட்கலடா..நீ என்னவா ஆகா போறே?
மாணவன்:- மாப்பிள்ளையா ஆவேன் சார்..
ஆசிரியர்:- அதில்லைடா..பெருசா ஆனா பிறகு நீ எதை அடைய போற?
மாணவன்:- ஒரு பொண்ணை அடைவேன் சார்..
ஆசிரியர்:- இல்ல கண்ணா...பெருசா ஆனா பிறகு உங்க அப்பா அம்மாவுக்காக என்ன செய்வ..
மாணவன்:- வீட்டுக்கு ஒரு நல்ல மருமகளைக் கொண்டு வருவேன் சார்..

படித்ததில் பிடித்தது

மௌனம் நல்லது தான்,
ஆனால் எல்லா இடங்களிலும் மௌனமாகக் கடந்து செல்லாதீர்கள்,
பேச வேண்டிய இடங்களில் பேசி விடுங்கள்...

வாழ்க்கையில் நாம் அவசரத்தில்
எடுக்கும் ஒவ்வொரு முடிவும், பின்னால்
எம்மைப் பெரிய ஆபத்தில் கொண்டு போய்
விடுகின்றன.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | 3 | | | |
| | | | | | | | | |
| | 6 | | | | 2 | | | 9 |
| | | | | | | | 1 | |
| | | | | 1 | | 4 | | 6 |
| 8 | 1 | 3 | 7 | | | 5 | | |
| 4 | 9 | | | 3 | | 6 | | 5 |
| | | 8 | | | 5 | | | |
| | | | | | 6 | 7 | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 9 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 9 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பாரமற்ற காதணிகள்

பாரமற்ற இலேசான காதணிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உருவில் பெரியனவாகவும், அழகான வடிவங்களிலும், பலவித வர்ணங்களிலும் இவை கிடைக்கின்றன. இவற்றின் விலை 200ரூபா முதல் 250 ரூபா வரை ஆகும்.

## வீட்டுக்குறிப்புகள்

**கார்பெட் கறைகளை நீக்க**

கார்பெட்டில் ஏதாவது கொட்டி விட்டால், உடனடியாக அதன்மேல் உப்பைத் தடவுங்கள். உப்பு ஈரத்தை உறிஞ்சிவிடும். கறையும் கார்பெட்டை விட்டு நீங்கும். காய்ந்த கறைகளை நீக்க டிட்டர்ஜெண்ட் பயன்படுத்தலாம்.

**கண்ணாடிப் பாத்திரங்கள் பளிச்சிட:**

கண்ணாடிப் பாத்திரங்களை கால் மணி நேரம் வெதுவெதுப்பான தண்ணீரில் ஊற வையுங்கள். அதன்பிறகு நைலோன் அல்லது பிளாஸ்ரிக் தேய்ப்பானால் நன்றாகத் தேய்த்துக் கழுவுங்கள். பாத்திரங்கள் பளிச்சிடும்.

அதற்குமேலும் கறைகள் இருந்தால், அவை தேய்த்ததால் ஏற்பட்ட கறையாக இருக்கக்கூடும். கண்ணாடிப்பாத்திரங்களைக் கைகளால் கழுவுவது சிறந்தது.

**பெயிண்ட் கறைகளை நீக்க:**

கறை பட்டவுடன் தண்ணீரால் கறையைக் கழுவுங்கள். கறை காய்ந்துவிட்டால் அதை நீக்க முடி யாது என்பதை நினைவில் வையுங்கள். அல்லது ஒரு வெள்ளைத் துணியை கறையின் மேல் வைத்து துணியின் பின்பக்கத்தில் தடவித் தேய்த்தால் கறை நீங்கும்.

**துணிக்கறைகளை நீக்க:**

கிளிஷரின் மற்றும் வெது வெதுப்பான நீரை சமமான அளவில் கலந்து அதில் கறை பட்ட துணியை ஊற வைக்கவும். கறை நீங்கவில்லை என்றால் துணியை உலர வைக்காதீர்கள், அது கறையை நீக்க முடியாமல் செய்துவிடும். அதனால் மீண்டும் ஒரு முறை மேலே கூறியதைப் போல் ஊற வைத்துத் துவைக்கலாம்.

## நாளை

தை-24
ஞாயிற்றுக்கிழமை 07.02.2016
திதி: சதுர்த்தசி மு.இ.10.42
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ.06.43
ராகுகாலம்: 05.05-06.35 வரை
சுபநேரம்: 09.35-11.05 வரை

## கருவாட்டுக் குழம்பு



**தேவையான பொருள்கள்:**

புளி-1 எலுமிச்சை அளவு
100 கிராம் பச்சைப் பயறு
கத்தரிக்காய்-5
வெங்காயம்-100 கிராம்
தக்காளி-100 கிராம்
கருவாடு-100 கிராம்
மிளகாய்த்தூள் - 4 கரண்டி
கடுகு-2 கரண்டி
உளுத்தம் பருப்பு-2 கரண்டி
காய்ந்த மிளகாய்-6
வெந்தயம்- அரைக்கரண்டி
பெருங்காயம்-1 கரண்டி
எண்ணெய்- அரைக் கப்

**செய்முறை:**

ஒரு கனமான சட்டியில் எண்ணெயைக் காய வைக்கவும். எண்ணெய் காய்ந்ததும், தாளிப்புச் சாமான்களை ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டுத் தாளிக்கவும்.

பின்னர் வெங்காயம், தக்காளி ஆகியவற்றை நன்றாக வதக்கிய பின்னர், கத்தரிக்காய், பச்சைப் பயறு போட்டு வதக்கவும். பின்னர், புளியையும் கரைத்து விட்டு, உப்பு, குழம்புப் பொடி போட்டுக் கொதிக்க விடவும்.

தளதளவென்று கொதி வந்தவுடன் நன்றாகக் கழுவிய கருவாட்டையும் போட்டுக் கொதிக்கவிட்டுப் பின் நன்றாக ஒரு சேரக் கொதித்தவுடன் ருசியாகப் பரிமாறவும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | பருத்தித்துறை | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 650 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 600 | 600 | 700 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 700 | 600 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 750 | 600 | 650 | 550 |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 450 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 500 | 400 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 450 | – | – |
| ஓரா | 400 | 400 | – | 300 | 300 | – | – |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 200 | 300 | 300 |
| நகரை | 200 | 300 | – | 300 | 300 | 300 | 350 |
| சூடை | 70 | 200 | 100 | 200 | 200 | 150 | 80 |
| ஒட்டி | 200 | 300 | 150 | 300 | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 300 | 200 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 370 | 250 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 400 | 200 |

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 30 | 60 | 40 | 40 |
| கத்தரி | 120 | 120 | 130 | 120 | 80 | 120 | 110 | 60 |
| கரட் | 200 | 180 | 200 | 180 | 200 | 200 | 170 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 90 | 100 | 100 | 80 | 120 | 80 | 120 |
| பாகல் | 120 | 100 | 100 | 100 | 100 | 160 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 80 | 60 | 70 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 60 | 70 | 70 | 70 | 80 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 100 | 120 | 80 | 80 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 45 | 30 |
| தக்காளி | 60 | 70 | 60 | 60 | 80 | 100 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 80 | 50 | 40 |
| கீரை | 20 | 20 | 40 | 10 | 20–30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | – | 30 | 40 | 20–30 | 20 | 20 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 250 | 250 | 250 | 200 | 300 | 330 | 300 |
| புடோல் | 80 | 90 | 80 | 70 | 60 | 120 | 50 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 | 70 |
| வெண்டி | 100 | 120 | 100 | 80 | 100 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 120 | 90 | 100 | 100 | 80 | 140 | 70 | 140 |
| லீக்ஸ் | 100 | 150 | 100 | 100 | 120 | 120 | 80 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40-50 | 50–60 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 | 60–70 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 60 | 80 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 200 | 280 | 240 | 200 | 150 | 250 |
| இராசவள்ளி | 120 | 120 | 150 | 120 | 160 | 150 | 100 | 90 |
| முருங்கைக்காய் | – | – | 700 | 1000 | 600 | 800 | – | 500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள்

வதற்கான மக்கள் கருத்தறியும் உத்தியோகபூர்வ குழுவின் வடக்குக்கான முதல் அமர்வு நேற்று ஆரம்பமான நிலையில் அரசியல் அவதானிகள் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளனர். நேற்றைய அமர்வில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் 15 பேர் மட்டுமே தமது கருத்துக்களை முன் வைத்திருந்தனர். இதனால் அமர்வு மதியத்துடன் நிறைவுக்கு வந்தது.

அதிகாரப் பகிர்வு மற்றும் சமஷ்டி பற்றி வடக்கில் அதிகம் பேசப்பட்டு வரும் நிலையில், மிகப் பெரும் எண்ணிக்கையான மக்களிடம் இருந்து இந்தக் குழுவுக்குக் கருத்துக்கள் குவியும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நேற்றைய அமர்வு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

புதிய அரசமைப்புக்காக மக்கள் கருத்தறியும் உத்தியோகபூர்வ குழு தனது முதல் அமர்வை ஜனவரி 18ஆம் திகதி கொழும்பில் நடத்தியது. அடுத்த அமர்வு கண்டியில் நடத்தப்பட்டிருந்தது. தொடர்ந்து வடக்கின் முதல் அமர்வு நேற்று வவுனியாவில் ஆரம்பமானது. இன்றும் அது தொடர்ந்து இடம் பெறும்.

இதுவரை நடைபெற்ற அமர்வுகளில் எண்ணிக்கையில் சிறிய அளவினரான தமிழர்களே தமது கருத்துக் களை முன்வைத்துள்ளனர். இந்த நிலையில் வடக்கில் நடத்தப்படும் அமர்விலும் தமிழர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே பங்கெடுத்திருப்பது ஏமாற்றத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

'மக்களிடம் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் குழுவின் முன்பாகக் கருத்துத் தெரிவிக்க ஊக்குவித்திருக்க வேண்டும். அந்தப் பணியை அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் மேற்கொண்டிருக்க வேண்டும். சிவில் அமைப்புகள் தமது பிரதிநிதிகளை அனுப்பி மக்களின் கருத்துக்களைப் பதிவு செய்தும் இருக்கலாம். ஆனால் இது எவையும் நடக்கவில்லை. தீர்வை யார் முன்வைப்பது என்கிற பிடுங்குப்பாட்டிலேயே இந்த அரசியல் கட்சிகளும் அரசியல் நோக்கமுள்ளவர்களும் செயற்படுகிறார்களே தவிர, இதில் உண்மையான அக்கறை அவர்களுக்கு இல்லை' என்று காரசாரமாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள் அரசியல் அவதானிகள்.

சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிட்டு பின்னர் வருந்துவதில் பயனில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். 'சரியோ தவறோ, இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் அரசமைப்பு உருவாக்கத்துக்காக தமிழ் மக்களின் கருத்துக்களையும் கேட்பதற்கு இந்த அரசு முன்வந்திருக்கிறது. இதனைத் தமிழர்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசியல் தீர்வுத் திட்டம் என்பதற்கு ஊடாக என்ன விடயங்களை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்கள் பதிவு செய்யவேண்டும். வாய்ப்பைத் தவற விட்டுவிட்டுப் பின்னர் தமிழர்களின் விருப்பத்தைக் கேட்காமல் அரசமைப்பை உருவாக்கி விட்டார்கள் என்று வருந்துவதில் பயனில்லை' என்கிறார் அவதானிகள். (உ-5)

## வாழ்வாதார

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து அவ்வாறு சுமார் 50 குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை, அவ்வாறு திரும்பியவர்களும் எந்தவித உதவியுமின்றித் தவித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர், செம்பாடு பகுதியைச் சேர்ந்த பரஞ்சோதி உருத்திரமூர்த்தி (வயது - 58) என்பவரே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். அவருக்கு மனைவியும் ஒரு மகளும் உள்ளனர்.

2006 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் போர் காரணமாக அந்தக் குடும்பத்தினர் இடம்பெயர்ந்து திருகோணமலைக்குச் சென்றுள்ளனர். பின்னர் 2006 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் மீளவும் காரைநகருக்குத் திரும்பியபோது அவர்களது வீடு உட்பட அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டிருந்தன. இதனால் அவர்கள் இருக்க வழியின்றி அகதியாக இந்தியாவுக்குச் சென்றதாக இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் நல்லாட்சி அரசு ஆட்சியமைத்தது. அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் தனது உரையில், இந்தியா உள்ளிட்ட வெளி நாடுகளிலுள்ள இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்குத் திரும்பவேண்டும் என்று அறிவித்திருந்தார். அதனை நம்பியே குறித்த குடும்பஸ்தர் இலங்கை வரத் தீர்மானித்து யாழ்ப்பாணம் வந்திருந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இங்கு வந்த பின்னர் வீட்டுத் திட்டம் தரப்படும் என்றும், உலர் உணவு நிவாரணம் தரப்படும் என்றும், தொழில் முயற்சிக்கான பணம் வழங்கப்படும் என்றும் கூறியிருந்தனர். இந்தியாவிலிருந்து வந்து 3 மாதங்களாகிவிட்டன. இன்றுவரை இவருக்கு எந்தவொரு உதவியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அது அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தாகவும் விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டது.

காரைநகரிலுள்ள குறித்த குடும்பஸ்தரின் காணி தொடர்பில் காரைநகர் பிரதேச செயலகத்திலும், யாழ். மாவட்ட அரச அதிபர், வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர் ஆகியோரிடமும் முறையிடப்பட்டும் எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை. இதனால் அவர் நேற்றுமுன்தினம் நஞ்சருந்தியுள்ளார் என்று அவரது இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரை வலந்தலை வைத்தியசாலையில் சேர்த்து பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நீதிமன்றின் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டிருந்தனர். (த-4)

## சுரேஷ் அணியில்

உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்வு, தமிழரசுக் கட்சியின் தலைமையகமாக மார்டின் வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் பிறந்த நாளான நேற்று இந்த இணைவு இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பில் க. சிவமோகன் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அதன் பின்னர் அந்தக் கட்சியின் மத்திய குழுவிலும் இணைந்திருந்தார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது, வன்னித் தேர்தல் மாவட்டத்தில் சிவமோகன் போட்டியிட்டிருந்தார். இதன் போது ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் சார்பிலேயே அவர் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், நேற்றைய தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உத்தியோகபூர்வமாக அவர் இணைந்து கொண்டுள்ளார். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைவதற்கான விண்ணப்பத்தை நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவமோகன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவிடம் கையளித்தார். அதனைப் பரிசீலித்த அவர், கட்சியின் அங்கத்துவத்தை வழங்கினார்.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். எக்ஸ். குலநாயகம் ஆகியோருடன் கட்சி அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-5-101)

## கூட்டமைப்பை

சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகியோரும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையின் புதிய அரசமைப்பு, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் உள்ளிட்ட முக்கிய விட்யங்கள் இதன்போது பேசப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய - இலங்கை கூட்டு ஆணைக் குழுவின் 9ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறவுள்ள நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்றுக் காலை கொழும்பு வந்துள்ளார். இவர் வடக்குக்கும் பயணம் மேற்கொண்டு அங்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்துப் பேசுவார் என முதலில் தெரிவிக்கப்பட்டிருந்து.

எனினும், சுஷ்மாவின் வடக்குக்கான பயணம் இறுதியில் ரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## நாக விகாரையில்

இதன்போது, விகாரையை நிர்வகித்து வரும் பிக்குமாரின் நலன் விசாரித்த பின்னர், பி.பி.சி சிங்கள சேவைக்கு கருத்து வெளியிட்டுள்ள முதலமைச்சர்,

இந்த முறை தேசிய சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை நல்லிணக்கத்திற்காக செய்த சிறிய காரியம் என்றாலும் அது பாராட்டத்தக்கது.

அத்துடன், இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் அதிகரித்துக் கொள்ளவதற்கான சிறந்த பின்புலம் உருவாகியுள்ளது. எனவே, சிங்கள மக்கள், தமிழ் மக்களுடன் இணைந்து ஒரு அடி முன்னோக்கி வைப்பார்களேயானால், அதற்காக 10 அடி முன்னோக்கி வைக்க தமிழ் மக்கள் தயார் இருக்கின்றனர்-என்றார்.

(வ-101)

## தமிழ்மொழி

இரு இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இனவாதத்தையும், குரோதத்தையுமே தூண்டிவிடும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது இனவாதமன்று. நாம் இந்தியாவைப் பார்ப்போம். இந்தியாவில் பல்வேறு மொழிகள் இருக்கையில் தேசிய கீதம் ஒரு பாஷையில் தான் இசைக்கப்படுகின்றது. உலகில் பெரும்பாலான நாடுகளில் தேசிய கீதம் ஒரே மொழியில் தான் பாடப்படுகின்றது.

சிங்களம் தெரியாதவர்கள் அந்த கீதத்தை உச்சரிப்புக்காக வேறு மொழியில் எழுதிக் கொள்வது பிரச்சினையாகாது. அப்போதும், பாடும்போது கருத்துப் பிழைக்கக் கூடாது. இதன் போது தான் அனைவருக்கும் இலங்கையர்கள் என்ற உணர்வு ஏற்படுகின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

# நுட்பம்

## புதிய அம்சங்களுடன் ஐபாட் எயார் 3

அப்பிள் ஐபாட் எயார் 3யின் அமைப்பு எப்படியிருக்கும் என்பது குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

பயன்பாட்டாளர்கள் மத்தியில் அப்பிள் நிறுவனத்தின் முந்தைய பதிப்பான அப்பிள் எயார் 2 அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து ஐபாட் எயார் 3 ஐ உருவாக்கியுள்ள அப்பிள் நிறுவனம் அதில் புதிய பல அம்சங்களை இணைத்துள்ளது.

புதிய கீபோட், மற்றும் அப்பிள் பென்சில் என்பற்றை இதில் உபயோகப்படுத்த முடியும். 0.05 மில்லிமீற்றர் தடிப்பு கொண்டதான இந்த ஐபேட் அதிக சேமிப்பு வசதி கொண்டதாகவும்,மேம்படுத்தப்பட்ட கமரா வசதி கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கடலுக்கடியில் நிறுவப்படும் தரவு சேமிப்பு மையங்கள்



கணினி உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வரும் மைக்ரோசொப்ட் நிறுவனம் தற்போது நீருக்கடியில் தரவு சேமிப்பு மையம் (டேட்டா சென்ரர்) ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் இதுகுறித்து தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தரவு சேமிப்பு மையங்கள் தொடர்ச்சியாக செயற்படுவதால் வெளியாகும் வெப்பத்தின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தரவு சேமிப்பு மையங்கள் கடல் மட்டத்தில் இருந்து 100 அடி ஆழத்தில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இவற்றுக்கான மின்சாரத்தை நீர் மேற்பரப்பில் உண்டாகும் அலைகளைக் கொண்டு பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## சிகா வைரஸை உற்பத்தி செய்கின்றது டாடா!

இந்தியாவின் மிகப் பெரிய கார் உற்பத்தி நிறுவனமான டாடா நிறுவனம் சிப்பி கார் இன் பெயரை சிகா வைரஸ் என்று மாற்ற முடிவு செய்துள்ளது.டாடா நிறுவனம் சிப்பி காரை சந்தையில் அறிமுகப்படுத்த எண்ணியிருந்த போதிலும் சில காரணங்களால் அது தள்ளிப் போயிருந்தது.

இந்தநிலையில் சிகா வைரஸ் குறித்து சர்வதேச சுகாதார நிறுவனம் அவசர கால நிலைமையைப் பிறப்பித்துள்ள நிலையில் டாடா நிறுவனம் தனது புதிய காருக்கு சிகா வைரஸ் என்று பெயரிடத் தீர்மானித்துள்ளது. எனினும் கார் குறித்த தகவல்கள் எதனையும் அந்த நிறுவனம் வெளியிடவில்லை.

பிரேஸிலில் ஸீகா வைரஸ் காரணமாக, கருவில் இருக்கும் சிசுக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்கிற அச்சுறுத்தல் அதிகரித்துவரும் சூழலில், பாதிக்கப்பட்டவர்களுக்கான தமது அனுதாபத்தை பகிர்ந்து கொள்ளும் நோக்கில், தமது புதிய காருக்கு குறித்த பெயரை வைக்க டாடா தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் மீது

ளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, எஞ்சிய விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்களை விடுதலை செய்வதற்கு முன்னர், இந்தக் கண் காணிப்புப் பொறிமுறையை வலுப் படுத்த வேண்டும் என்று அவர் வலியு றுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவப் புலனாய்வு அமைப்புக ளின் கண்காணிப்பு வலுப்படுத்தப் படாமல், விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளர்கள் விடுவிக் கப்படுவதால், நாட்டின் பாதுகாப்புக் கும், அமைதிக்கும் பாரிய அச்சுறுத் தல் ஏற்படும்.

2009 மே மாதம் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், நாட்டின் பல் வேறு பகுதிகளிலும், 5 ஆயிரம் விடுத லைப் புலிகள், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். போர் முடி வுக்கு வந்த பின்னர், அவர்களின் பின் னணி குறித்தும், விடுதலைப் புலிக ளுடனான தொடர்புகள் குறித்தும் நாம் விசாரணை நடத்தினோம்.

அவர்களில், குறைந்தளவு தொடர்பு களை வைத்திருந்தவர்கள், தெரிவு செய்யப்பட்டு, புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப்பட்டனர்.

2015 ஜனவரியில் இந்த அரசு பத விக்கு வந்தபோது, விடுதலைப் புலிக ளின் 273 தீவிர செயற்பாட்டாளர்கள் சிறைகளில் இருந்தனர். அவர்களில், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப் பினர்களும், கொழும்பில் பல்வேறு தாக்குதல்களுக்குச் சூத்திரதாரிகளாக இருந்தவர்களும் அடங்குவர். இவர் களை விடுவிப்பது பாதுகாப்புக்கு மோச மான அச்சுறுத்தலாகும்.

இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவ டிக்கை எடுக்கப்படவேண்டும். இவர் கள் அரசியல் கைதிகள் அல்ல, தீவிர வாதிகள்.

இவர்களைக் கைது செய்வதற்கு இராணுவம் மிகப் பெரிய தியாகங் களைச் செய்துள்ளது. இவர்களை எப்படிக் கைது செய்தோம் என்று தெரி யாமல், இவர்களை விடுவிக்கவேண் டும் என்று சிலர் இலகுவாகக் கூறு கின்றனர்.

ஆனால் அரசு பாதுகாப்பை உறுதிப் படுத்தவேண்டும். விடுவிக்கப்பட்ட பின்னர், இவர்களைக் கண்காணிப் பதற்கான பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியம். இவர்கள் பற்றிய இராணு வப் புலனாய்வு அமைப்புகளின் சரி யான தகவல்களைப் பெற்று, ஆபத் துக்களை அரசு ஆராயவேண்டும்.

இல்லாவிட்டால், இது ஒரு ஆபத்தான முடிவாக இருக்கும். நாட்டின் பாது காப்பே அரசின் மிக உயர்ந்த முன் னுரிமையான விடயமாக இருக்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு நாம், விடுதலைப் புலிகளை முற்று முழுதாக தோற்கடித்தோம். அந்த அமைப்பின் 12 ஆயிரம் போராளி கள், இலங்கையின் அமைதியான குடி மக்களாக இருக்கின்றனர்.

ஆனால் சில தமிழ் அரசியல்வாதி கள், விடுதலைப் புலிகளின் கொள் கையை பரப்புகின்றனர். அதனை இன்னமும் உயிர்ப்புடன் வைத்திருப் பதற்கு, சிலபுலம்பெயர்பிரிவுகள்விரும் புகின்றன. எனவே, விடுதலைப் புலி கள் மீள ஒருங்கிணைவதற்கு வாய்ப் புகள் உள்ளன-என்றார். (த-வ-5)

## அரசியல்

முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கை - இந்திய கூட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இர ண்டு நாள் பயணமாகக் கொழும்பு வந்துள்ள, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், நேற்றுப் பிற்பகல் பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பை வந்தடைந்த சற்று நேரத்தில் இந்தப் பேச்சு, அலரிமாளி கையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு சுமார் 50 நிமிடங்கள் வரை நீடித்ததாகவும், பயனுள்ள வகையில் அமைந்திருந்ததாகவும், இந்தியத் தரப்பு தகவல் வெளியிட் டுள்ளது.

திருகோணமலையில் முன்மொழி யப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார வலயத்தில், இந்திய முதலீடுகளை மேற்கொள்ள, இந்தச் சந்திப்பின் போது அழைப்பு விடுத்துள்ளார் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், இலங்கையின் தற் போதைய அரசியல் நிலைமைகள், முன்னேற்றங்கள் குறித்தும், அவர் இந்திய வெளிவிவகார அமைச்ச ருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

பிரதமருடன், அமைச்சர் சாகல ரத் நாயக்க, வெளிவிவகாரச் செயலர் சித்திராங்கனி வகீஸ்வரா உள்ளிட் டோரும், இந்தியவெளிவிவகாரஅமைச் சருடன், வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர், இலங் கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.(த-வ)

## அதி உச்ச


துக்களை முன்வைத்தவர்கள் இதனை வலியுறுத்தினர்.

நடைபெற்று வரும் இந்த அமர்வில் நேற்றைய தினம் 15 பேர் தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர். பல தரப்பட்ட நிலைகளில் இருந்தவர் களும் இவர்களில் அடங்கியிருந்தனர். பெரும்பாலானவர்கள் சமஷ்டி முறை யிலான தீர்வு ஒன்றே பொருத்த மானது என்று தெரிவித்தனர். பெயர் என்ன வாக இருந்தபோதும் புதிய அரச மைப்புக்கு ஊடாக ஆகக்கூடுதலாக எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அதிகாரங்கள் தமிழர்களுடன் பகிரப் படவேண்டும் என்று வலியுறுத் தினர். அமர்வு இன்றைய தினமும் வவுனி யாவில் இடம்பெற உள்ளது. அதன் பின்னர் இந்த மாதத்தில் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நடை பெற உள்ளது. (உ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானமுத்து இராஜநாதன்

(Bibi Retired teacher - J/Chavakachcheri - Ladies college)



**பிறப்பு: 08.11.1930** **இறப்பு: 03.02.2016**

யாழ்.சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டன் Pinner ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து இராஜநாதன் 03.02.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - முத்தாச்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராஜநாதனின் அன்பு மனைவியும் விக்னராஜா, ஜெயராஜா, அமிர்தா காலஞ் சென்றவர்களான தேவராஜா, ரூபராஜா, கிருபராஜா ஆகியோ ரின் அன்புத் தாயாரும் அன்னமுத்து, கிருஸ்ணமுத்து காலஞ்சென்ற சொர்ணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி, சுகிர்தா, கலைமதி, சிவானந்தம், சிவசக்தி காலஞ்சென்ற நிர்மலா தேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜித், நெரா, ஜெரா, நளினி, நவீனன், இந்து, ரூபினி, நிருபா, கிருஸ்ணி, விதுஜா, பைரவி, மைதிலி, கீதன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் சுஸ்மியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 07.02.2016 ஞாயிற்றுக் கிழமை Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London NW7 1NB, United Kingdom இல் பிற்பகல் 3மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ஏழாலை வடக்கு,
ஏழாலை. (68515. 14,19,20)

தகவல்:
ந.பாலசுப்பிரமணியம்.

விஜித் 00447982623257, ராணி (UK) 00447982623257
அமிர்தா - 0044 757 066 9533 (UK)

## மரண அறிவித்தல்

# வீரகத்திப்பிள்ளை வேலுப்பிள்ளை



**தோற்றம்: 15.03.1905** **மறைவு: 05.02.2016**

ஊர்காவற்றுறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை வேலுப்பிள்ளை 05.02.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்க ளான வேலுப் பிள்ளை (சான்டோ) - சுபத்திரை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சந்திரசேகரம்பிள்ளை, பொன்னம்மா, பூபாலசிங்கம், மயில்வாகனம், நடராஜா, யூகராஜா, குகநேசன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலலக்சுமி, மருதலிங்கம், காலஞ்சென்ற விஜயலக்சுமி மற்றும் பத்மினி, ஞானகௌரி, சாந்தினி, வனஜா, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்னேந்திரா, குகனேந்திரா, ஜேந்திரா, யோகேந்திரா, தனேந்திரா, தர்மேந்திரா, சிந்து, அங்கனி, வைகை, சத்தியேந்திரா, யுகேந்திரா, சனேந்திரா, கஜேந்திரா, நிரோஜி, திர்ஷா, போஷா, நிர்ஷா, கிர்ஷா, தாமரா, வானதி, திரிவேணி, குணா, றமணா, வீமா, டினேஷ், ராகுலன், திருக்குமரன், ஜீவிதா ஆகியோரின் அன்புப் பேரனும், ராகுல், ஆனந், இலக்கியன், ஷயன்,கவின், காவியா, அனிக்கா,சந்தோஷ், பிரணீதா, ஆருந்திரா, தியன், தியா, ஹஷ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.
021 321 5051

தகவல்:
பிள்ளைகள்
(சேகர் பிறதர்ஸ், சேவ்ரி ரவல்ஸ், சேகர் மோட்டோஸ்)

(68522)(11,19,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரநேசனுக்கு

ச்சர் பொ.ஐங்கரநேசன் உள்ளிட்ட 5 பேரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று அறிவித்தல் அனுப்பியுள்ளது.

கழிவு ஒயில் பிரச்சினையை முன்னரே கண்டுபிடித்தபோதும் உரிய நடவடிக்கை எடுக்காத அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இதன்போது நீதிமன்று தெரிவித்தது.

மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஜுட்சன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான சட்டத்தரணிகள் நேற்று முன்னிலையாகியிருந்தனர். எதிர்த் தரப்பிலும் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த வழக்கில், சுன்னாகம் உள்ளிட்ட தண்ணீரில் கழிவு ஒயில் கலந்துள்ள இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டு வந்த குடிதண்ணீர் தற்போது வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் அது பற்றிய விளக்கமும் கடந்த தவணையும் கூறப்பட்டிருந்தது.

மழை காலத்தில் தண்ணீரில் கழிவு ஒயிலின் கலப்புக் குறைவாக இருந்த நிலையில் பின்னர் கலப்பு அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இது பற்றிய விடயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அந்தத்தண்ணீரைக்குடிக்கலாமா இல்லையா என்பதற்கான பதில் இன்னும் இல்லை.

வடக்கு மாகாண சபை உள்ளிட்ட சில தரப்பினர் அது பற்றிய ஆய்வை மேற்கொண்டிருந்தனர். ஆனால் அந்த அறிக்கைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக முரண்பாடாக உள்ளன. அதனால் அது பற்றிய தெளிவான நிலை இல்லை.

இந்நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர், சம்பந்தப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இடர் முகாமைத்துவப் பிரிவினர், அதன் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி மற்றும் நீர்வளச் சபையினர் ஆகியோருக்கு நீதிமன்றத்தினால் இந்த அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலை முன்னரே இனங்காணப்பட்டபோதும் உரிய அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அங்கு நீதிமன்று தெரிவித்தது. நீர்வளச் சபையினர், சுற்றுச்சூழல் அதிகார சபையினர் உள்ளிட்டவர்கள் இது வரைத் தாம் செய்த நடவடிக்கைகளையும் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்று நேற்றுச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணித்துள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## இன்று

பதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், இராஜதந்திர சமூகத்தினர் மற்றும் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவினர் ஆகிய தரப்புகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதன்போது, இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அவர் குறித்த தரப்புகளுடன் முக்கிய பேச்சு நடத்தவுள்ளார். விசேடமாக முப்படைத் தளபதிகளையும் ஆணையாளர்அல் ஹுசேன் தனது வருகையின்போது சந்திக்கவுள்ளார்.

அத்துடன், நாளை ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாணத்துக்கும், நாளை மறுதினம் திங்கட்கிழமை கிழக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், அங்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஷீர் அஹமட் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று அந்தப் பகுதிகளிலுள்ள மக்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன் பின்னர் எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கொழும்பில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் மற்றும் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து அல் ஹுசேன் பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசேன், இலங்கை வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகிந்த ஆதரவு பொது எதிரணியினர் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர். கொழும்பு 07, நகர மண்டபம், லிப்டன் சுற்றுவட்டத்துக்கு முன்னால் பிற்பகல் 3.00 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகவுள்ளது என்று மகிந்த ஆதரவு பொது எதிரணியினரின் முக்கியஸ்தர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

(த-வ-5)


## அலுவலக வதிவிடத்துக்கான வாடகைக் கட்டடத்தினைப் பெறுவதற்கான கோரிக்கை

**வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்தின் அலுவலக செயற்பாடுகளுக்காகப் பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டடத்துடனான காணி வாடகைக்கு வழங்க விரும்புபவர்களிடத்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

1. கட்டடம் 6000 தொடக்கம் 7000 சதுர அடிகளைக் கொண்ட கட்டடமும், மூன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் தரிக்கக் கூடிய வாகனத் தரிப்பிடத்துக்கான நிலப்பரப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.
2. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை மையமாகக் கொண்ட 1.5 கிலோ மீற்றர் (1.5 km) எல்லைக்குள் அமைந்த கட்டடங்கள் விரும்பத்தக்கது.
3. மின்சார வசதி (3Phase), நீர் வசதி கொண்டிருத்தல் வேண்டும்.
4. முற்பணம் வழங்கப்படமாட்டாது.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் வீட்டு உரிமையாளரின் முழுப் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தொடர்பு, முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகைத்தொகை ஆகிய விவரங்கள் உள்ளடங்கலான ஏனைய தகவல்களையும் குறிப்பிட்டு, "பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகம், வட மாகாணம், இல.695, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 2016.02.15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கைமூலமாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எவ்வாறாயினும் இதில் குறிப்பிடப்படாததும், அலுவலக சட்ட வரையறைக்குள் உட்பட்டதுமான ஏனைய நிபந்தனைகள் எமது தீர்மானத்தின் அடிப்படையிலேயே அமையும் என்பதுடன் பொருத்தமான வாடகைக் கட்டடத்தைத் தெரிவு செய்யும் அதிகாரம் பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அவர்களுக்கு மட்டுமே உரியதாகவும் அமையும்.

ச.மோகநாதன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்,
வடமாகாணம். 021 320 2571

(8/29024)(11,19,20)

## வேலைவாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு

ஆசியாவில் மிகப்பெரிய காப்புறுதி நிறுவனமான AIA குழுமத்தின் இலங்கை நிறுவனமான AIA Insurance Lanka PLC நிறுவனம் உங்களின் எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டும் வகையில் வேலை வாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

வயது எல்லை : 25 – 60 வயது

(NGO இல் பணிபுரிந்த அனுபவம் உடையவர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னராக எமது யாழ்ப்பாண காரியாலயத்திற்கு வந்து பதிவினை மேற்கொண்டு வரவினை உறுதிப்படுத்துங்கள்.

* அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பெறுமதியான வாய்ப்பினை பயன்படுத்தி உங்களின் எதிர்கால வெற்றிக்குத்தேவையான தைரியத்தையும், தன்னம்பிக்கையும் பெற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு : AIA Insurance Lanka PLC
62/6, Stanley Road, Jaffna.
021 222 1216, 076 5289 947


## 31ஆம் நாள் நினைவுதினம்

அமரர்
**கணபதி கந்தவனம்**

பிறப்பு 15.05.1927 இறப்பு 07.01.2016



திதி: மார்கழி அபரபக்க திரயோதசி

கணங்கள் நிமிடமாகி
நிமிடங்கள் மணியாகி
மணிகள் நாளாகி
நாள்கள் முப்பத்தொன்றாகி
ஐயா உம் நினைவலைகள்
நெஞ்சில் வந்து மோதுதையா!
பிள்ளைகள் எங்களுக்காய்
சிறப்பார்ந்த வாழ்வு தந்தே
பார்போற்றும் உத்தமனாய்
இறைபதம் சேர்ந்தீரோ தெய்வமே

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...


என்றும் உங்கள் நினைவுடன்
வாழும்
குடும்பத்தினர்.

"சுபாகினி இல்லம்"
அக்கத்தனை,
நவிண்டில்.

(C29025)(10)

## மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை பரமலிங்கம்



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பரமலிங்கம் அவர்கள் 04.02.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் விஜயலக்சுமியின் அன்புக்கணவரும் சண்முகலிங்கம் காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் கமலாம்பிகை (ஜேர்மன்), ஆனந்தலட்சுமி (யாழ்ப்பாணம்), கேதீஸ்வரன் (ஜேர்மன்), தனலட்சுமி (ஜேர்மன்), யோகேஸ்வரி (ஜேர்மன்) தியாகராஜா கமலாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரரும் காண்டீபன் (ஜேர்மன்), விதுஷினி (கனடா) ஆகியோரின் தந்தையும் ரஜீவன் (கனடா) அவர்களின் பாசமிகு மாமனாரும் சுரேஸ்குமார், சிவகுமார் (ஜேர்மன்), பிரியதர்சினி (ஜேர்மன்), சதீஸ்குமார், லக்சிகா (ஜேர்மன்), ஜெயவதனி, ஜெயகௌரி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன் ஆகியோரின் சித்தப்பாவும் காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், சகுந்தலாதேவி மற்றும் திலகவதி, வதனி (ஜேர்மன்), தவேந்திரன் (ஜேர்மன்), கணேசலிங்கம், சிரோன்மணி, மகேஸ்வரி,சிவராசா, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ரஜிதா (ஜேர்மன்), விஜயகௌரி, ஶ்ரீதர்சினி, கணேசலிங்கம் ஆகியோரின் மாமாவும் ஆச்சிமுத்துவின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 9457

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை முகாம்

அச்சுவேலி, பெப்.6

அச்சுவேலி உகரம் அறக் கட்டளையின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உயிர்த் துளி குருதிக்கொடை முகாம் பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



உயிர்த்துளி குருதிக் கொடை முகாமில் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்யுமாறு உகரம் அறக் கட்டளையினர் அறிவித்துள்ளனர். (வ-1)

---

## ஹுசேனைச்

உறவினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்திப்பதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அத்துடன், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் காரியாலயத்திலும் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் விவரங்களை அரசு வெளியிடவேண்டுமென்றும், அதற்கான அழுத்தங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கையளிக்கவுள்ள மனுவில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (த-106)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா விஸ்வலிங்கம்

மலர்வு: 06.10.1927 உதிர்வு: 05.02.2016



அளவெட்டி கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் காயத்திரு வீதி உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா விஸ்வலிங்கம் நேற்று (05.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கன் சின்னப்பு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் பாசமிகு மனைவியும், சரஸ்வதி, ரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், சந்திரசேகரத்தின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சோதிமதியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 07.02.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் வவுனியா தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வளர்ப்பு மகள் இ.காஞ்சனா
(கமநல உத்தியோகத்தர்-வவுனியா)
0770830388

### திருமதி வள்ளிநாயகி நடராசா



பிறப்பு 1944 . 03 . 12

இறப்பு 2016 . 02 . 05

மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், காளிகோயிலடி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாயகி நடராசா நேற்று (05.02.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசாரி வேலுப்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆசாரி ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆசாரி ஆறுமுகம் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், ஆசாரி நடராசா, ஆசாரி பாலகிருஷ்ணன் மற்றும் ஆசாரி அப்புத்துரை, ஆசாரி சின்னராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அன்னலட்சுமி, இந்திராணி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ரவீந்திரன் (பிரான்ஸ்), சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜிதா (பிரான்ஸ்), விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் தாருஜன் (பிரான்ஸ்), அபினயா (பிரான்ஸ்), யதுசன் (பிரான்ஸ்), சாருகேசன், துளக்சிகா, லக்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, வட்டுக்கோட்டை. நி.மு பிராயடி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறை.

தகவல் - மகன்
ந.சுரேந்திரன் (சுரேன்)
T.P: 077 5017 103

(68548)

## மரண அறிவித்தல்கள்

### வன்னிக்குட்டி இராசதுரை



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னிக்குட்டி இராசதுரை நேற்று (05.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னிக்குட்டி - சிவகாமி தம்பதியரின் இளையமகனும் வல்லிபுரம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசாத்தியின் அன்புக்கணவரும் இராசலட்சுமி, இராசேஸ்வரன், இராசகுமார், காந்தராசா ஆகியோரின் அன்புத்தந்தையும் யோகேஸ்வரன், லோகேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி கிழக்கு பிரதேச சபை - புத்தூர்), ஜவநந்தினி (முன்பள்ளி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனும் கணபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, ஆறுப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும் மதிவதனி, குபேந்தினி, சுதர்சன், சுதர்சினி, ஜீவிதன், தாருஜன், மகிசா, நிலக்ஷனா, அபிசா, டார்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கோண்டாவில் கிழக்கு.

T.P: 077 5877 093

தகவல் குடும்பத்தினர்.

(68545)

### நாகமுத்து கனகரத்தினம் (சங்கானை)



(ஓய்வுபெற்ற ஆசிரியர், நிற்சாமம் சங்கானை விக்னேஸ்வரா வித்தியாசாலை)

சங்கானை அராலி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட நாகமுத்து கனகரத்தினம் நேற்று (05.02.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-நாகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், திருப்பதிதேவியின் அருமைக் கணவரும், பூவர்ணமலர், றெஜினா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (இருபாலை), பரமசாமி (சங்கானை) மற்றும் சீவரத்தினம் (இருபாலை), தவமணி (சங்கானை), தம்பிஜயா (ஓய்வுநிலை உத்தியோகத்தர்), சோதிலிங்கம் (ஓய்வுநிலை அலுவலர் -சங்கானை), தியாகராசா (வர்த்தகர், சங்கானை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வரத்தினம் (வர்த்தகர் சங்குசுக்கரம், சங்கானை) இருபாலையைச் சேர்ந்த சுகந்தன் (வர்த்தகர், சண் அழகுநிலையம், சங்கானை) ஆகியோரின் அருமை மாமனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா (இருபாலை), கனகம்மா (சங்கானை), கனகமணி (இருபாலை), கந்தசாமி (சங்கானை) மற்றும் இராஜேஸ்வரி, ஜெகதேவி, லோகேஸ்வரி, திருவிளங்கம் (ஓய்வுநிலை வரி உத்தியோகத்தர்), துரைசிங்கம் (காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை), சரோஜினிதேவி, கணேஸ்வரன் (அருள்-ஆனந்தா புடைவை நிலையம், சங்கானை) ஆகியோரின் மைத்துனரும் அகிபனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அராலி வீதி, சங்கானை.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சோதிலிங்கம்

(ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்)



பெரியாவுடையைப் பிறப்பிடமாகவும் போத்தலை, மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சோதிலிங்கம் நேற்று (05.02.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியத்தின் மூத்த மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ருத்திரகுமரன் (Ceylinco Life Jaffna), சுதாகரன் (C.E.B Jaffna) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சரோஜினிதேவி மற்றும் சீதாதேவி, சற்குணலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போத்தலை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

T.P: 021 205 9255

தகவல் குடும்பத்தினர்.



### சிவராசா சிவபாக்கியநாதன்

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா சிவபாக்கியநாதன் 25.01.2016 திங்கட்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசா மற்றும் பாக்கியலட்சுமி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகனும், முருகேசு-சரஸ்வதி (பிரான்ஸ்) தம்பதியரின் மூத்தபேரனும், சோமசுந்தரம்- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தீபாவின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும், அஸ்வினியின் அன்புத்தந்தையும், சிவமலர் (உமா-கனடா), வசந்தமலர் (பாமா-பிரான்ஸ்), அற்புதவேல் (சுதன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணானந்தன் (ஆனந்தன்-கனடா), அருந்தவராசா (ராசா-பிரான்ஸ்), சுதர்சினி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், பொன்ராஸ், ஜீவராஸ், கீர்த்தனா (கனடா) அனுசன், அனித்தா, தர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சுபிதாவின் (இலங்கை) பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2016) சனிக்கிழமை பிரான்ஸில் இலங்கை நேரப்படி பி.ப 2.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: செல்வராஜா நாகேஸ்வரி (சிறியதாய்) குடும்பத்தினர்.

0033758820249 (அற்புதவேல்)
077030 3782 (சுஜ்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அணியில் யார்? ஐ.பி.எல். ஏலம் இன்று

நடப்பு வருடத்தின் ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் தொடருக்கான ஏலம் இன்று நடைபெறவுள்ளது. மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், சன்ரைசர்ஸ் ஐதராபாத், புதிய அணிகளான ரைசிங்புனே சூப்பர் ஜெயின்ட்ஸ், குஜராத் லயன்ஸ் (ராஜ்கோட்) ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. 2 ஆண்டுகள் தடை காரணமாக சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் பங்கேற்கவில்லை.

சென்னை, ராஜஸ்தான் அணிகளில் இருந்து டோனி, அஸ்வின், பிளாசிஸ், சிமித், ரகானே ஆகியோர் புனே அணிக்கும், ரெய்னா, ஜடேயா, மக்கலம், பிராவோ, பல்க்னெர் ஆகியோர் ராஜ்கோட் அணிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புனே, ராஜ்கோட் அணிகளைத் தவிர மற்ற 6 அணிகளும் மொத்தமாக 91 வீரர்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. நடப்பு வருடத்தின் ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் நாளை பெங்களூரில் நடக்கிறது. 351 வீரர்கள் ஏலம் விடப்படுகிறார்கள். இதில் 230 இந்திய வீரர்கள் உள்ளனர்.

ஒவ்வொரு அணியும் தலா ரூ.66 கோடியை (இந்திய மதிப்பில்) வீரர்களுக்காக செலவு செய்ய வேண்டும். தக்க வைக்கப்பட்ட வீரர்களுக்காக வழங்கப்பட்ட தொகையை கழித்து விட்டு மீதமுள்ள தொகையில் வீரர்களை ஏலம் எடுக்க வேண்டும். இதில் டெல்லி அதிகபட்சமாக ரூ.37.15 கோடி (இந்திய மதிப்பில்) இருப்பு வைத்து உள்ளது. ஐதராபாத் ரூ.30.15 கோடி (இந்திய மதிப்பில்), பஞ்சாப் ரூ.23 கோடி (இந்திய மதிப்பில்), கொல்கத்தா ரூ.17.95 கோடி (இந்திய மதிப்பில்), மும்பை ரூ.14.40 கோடி (இந்திய மதிப்பில்), பெங்களூர் ரூ.21.62 கோடியும் (இந்திய மதிப்பில்) இருப்பு வைத்துள்ளன. புனே, ராஜ்கோட் அணிகளிடம்




தலா ரூ.27 கோடி இருப்பு உள்ளது. கடந்த தொடரில் விளையாடிய 61 வீரர்கள் கழற்றி விடப்பட்டுள்ளனர். இதில் முக்கியமானவர் யுவராஜ் சிங். அவரைக் கடந்த ஆண்டு டெல்லி அணி ரூ.16 (இந்திய மதிப்பில்) கோடிக்கு எடுத்தது. ஆனால் யுவராஜ் சிங்கை தக்க வைக்கவில்லை. நடப்பு வருடத்தில் அவரது அடிப்படைத் தொகை இந்திய மதிப்பில் ரூ.2 கோடியாகும். யுவராஜிற்கு அடுத்த படியாக நெக்ரா, பீற்றர்சன், டினேஸ் கார்த்திக், சாம்சன், வற்சன், இசாந் சர்மா, குல்கர்னி, பின்னி, மைக் கசி, ரிச்சாட்சன், மிச்செல் மார் ஆகியோர் மீதும் எதிர்பார்ப்புக்கள் உள்ளன. (ம)

# மன்னார், முல்லை. லீக் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 6

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் மன்னார் லீக், முல்லைத்தீவு லீக் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் லீக் அணியை எதிர்த்து வலிகாமம் லீக் அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் லீக் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

உதயதாரகை மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு லீக் அணி மோதிக்கொண்டது. இதில் முல்லைத்தீவு லீக் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

## ஜொலிஸ்ராரின் இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன. மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ்



அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு விருந்தினர்களாக மருத்துவர் கோபிசங்கர், யாழ். இந்துக்கல்லூரியின் அதிபர் தயானந்தராஜா, ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் தலைவர் பூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-23)

# பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

**சாந்தநாயகி வித்தியாலயம்**

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி விமலாஸ் இரும்பக உரிமையாளர் த.ஜெயந்தனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய வரணி ஆசிரிய மத்திய நிலைய வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் தி.அபராஜிதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

**வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை**

பளை இத்தாவில் வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் கலந்துகொள்ளவுள்ளார்.

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் எஸ்.திரிகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப்பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா கலந்து கொள்கின்றார்.

**வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை**

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் கலந்துகொள்ளவுள்ளார்.

**காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி**

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

**மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலயம்**

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி செவ்வாய்க்கிழமை பி.பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் இடம் பெறவுள்ளன. அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

**மிருசுவில் கெற்பேலி அ.த.க.பாடசாலை**

மிருசுவில் கெற்பேலி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய க்ணக்காளர் திருமதி சி.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

**வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை**

யாழ்ப்பாணம் வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் ப.சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சு.சுகிர்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

**தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி.**

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் கு.திருச்செல்வத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொள்ளவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்**

யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் ஜெ.கிறிஸ்ரபெலின் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுஒக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப் பினர் பரஞ்சோதி கலந்துகொள்ளவுள்ளார்.

**வரணி வடக்கு அ.த.க. பாடசாலை**

வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் எதிர்வரும் எட்டாம் திகதி பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. அதிபர் ந.வசந்தரூபனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி கலந்துகொள்ளவுள்ளார்.

**வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி**

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று கல்லூரியின் மைதானத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளன. அதிபர் பு.பஞ்சாட்சரத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு, பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

**தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.**

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் இரா.சிறிநடராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக நெல்லியடி சம்பத் வங்கியின் முகாமையாளர் மாக்சன் விஜேந்திரா கலந்துகொள்ளவுள்ளார்.

**கைதடி நவீல்ட் பாடசாலை**

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு, பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனோல்ட் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-9-11-250-122-422-108-23)

# கிண்ணம் வித்தியா வி.கழகத்திடம் முல்லைத் துடுப்பாட்டத் தொடரில்




யாழ்ப்பாணம், பெப். 6
முல்லைத்தீவு மாவட்ட கிரிக்கெட் சங்கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் சம்பியனானது வித்தியா அணி.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் அணியை எதிர்த்து முள்ளிவளை வித்தியா அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய முள்ளிவளை வித்தியா அணி சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அருணா 42 ஓட்டங்களையும், தயாளன் 16 ஓட்டங்களையும், வினோசன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முல்லைத்தீவு சென்.யூட் அணி சார்பில் ஜெயராஜ் 4 இலக்குகளையும், குகதாஸ், மிராஜ், சுரேந்திரன் மூவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு சென்.யூட் அணி 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 94 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக தபேந்திரன் 25 ஓட்டங்களையும், சுரேந்திரன் 16 ஓட்டங்களையும், வசந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முள்ளிவளை வித்தியா அணி சார்பில் விஜிதன் 4 இலக்குகளையும், வினோசன் 2 இலக்குகளையும், அஞ்சேயன், அருணா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக முள்ளிவளை வித்தியா அணியின் அருணா, சிறந்த பந்து வீச்சாளராக சென். யூட் அணியின் குகதாஸ், சிறந்த துடுப்பாட்ட வீரனாக முள்ளியவளை வித்தியா அணியின் மித்ராஜ் ஆகியோர் தெரிவானார்கள். நிகழ்வுக்கு விருந்தினர்களாக வன்னி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோகாராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான து.இரவிகரன், எம்.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ம-102-23)

## கொக்குவில் சனசமூக நிலையம், யாழ். பல்கலை அணிகளுக்கு
### விக்ரம், ராஜன், கங்கு தொடரில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 6
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும், யாழ். பல்கலைக் கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் - ஜொலிஸ்ரார்**
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மதுசன் 44 ஓட்டங்களையும், சஜீவன் 32 ஓட்டங்களையும், பாமனன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி சார்பில் சிலோசன், ஜெயறூபன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், சாம்பவன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 25.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ஜெயறூபன் 74 ஓட்டங்களையும், ராகுலன் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பில் பகீதரன், மதுசன் இருவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினார்கள்.

**பல்கலை - ஹாட்லிஸ்**
மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஹாட்லிஸ் அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிஸ் அணி 26 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சேயோண் 23 ஓட்டங்களையும், தீபன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். பல்கலைக்கழக அணி சார்பில் அனுராஜ் 3 இலக்குகளையும், ஜெயந்திரன், குருகுலசூரி இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு களமிறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி 15.1 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக லோகேஸ்வரன் 21 ஓட்டங்களையும், குருகுலசூரி ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், தாரக 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹாட்லிஸ் சார்பாக சாகித்யன், நிரஞ்சன் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-23)

## வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், பெப். 6
வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலர் உதயராசா தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் கலந்து கொண்டார். இந்த கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், மஸ்தான் மற்றும் வடமாகாண கல்வி, கலைகலாசார, பண்பாட்டலுவல்கள், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா, வவுனியா வடக்கு-கிழக்கு கல்வி வலய பிரதி விளையாட்டுத்துறை பணிப்பாளர்கள், வவுனியா மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-23)

## சாரணர்களது ஒன்று கூடல்

கிளிநொச்சி, பெப். 6
கிளிநொச்சி மாவட்ட சாரணர்களது வருடாந்த ஒன்றுகூடல் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறவுள்ளது. மாவட்ட ஆணையாளர் கி.விக்னராஜா தலைமையில் இடம்பெற்றுவரும் குறித்த ஒன்றுகூடலில் 20 பாடசாலைகளுக்கு மேற்பட்ட 250 சாரணர்கள் கலந்துகொள்கின்றனர். (ம-21)

## இன்றைய மோதல்கள்

**குமரையா ஞாபகார்த்த தொடர்**
கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக லீக். முறையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்த தொடர்**
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாரதி அணி மோதவுள்ளது.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் தொடர்**
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹாட்லிஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதவுள்ளது. மதியம் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாயப்படுத்தலாலேயே ஓய்வுபெற்றதாக தெரிவிக்கிறார் தீவுகளின் சந்தர்போல்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையின் மறைமுக நிர்ப்பந்தத் தின் பேரிலேயே கிரிக்கெட்டில் இரு நது ஓய்வுபெற்றதாக தீவுகளின் முன்னாள் வீரர் சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வீரர்கள் பலரும் கலந்து கொண்டு விளையாடிவரும் மாஸ்டர்ஸ் சம்பியன் லீக் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகிறது. இதில் கலந்துகொள்ள சந்தர்போலுக் கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஓய்வு பெற்றால் மட்டுமே அவருக்கு அனும திச் சான்றிதழ் வழங்கப்படும் என மேற் கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை தெரிவித்தது. இந்த நிர்பந்தத்தாலேயே தான் ஓய்வுபெற்றதாக சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மாஸ் டர்ஸ் தொடரில் கலந்துகொள்ள வேண் டுமாயின் என்னை ஓய்வுபெறுமாறு வற்புறுத்தினார்கள். ஓய்வுபெறாமல் முன்னணி வீரர்களுடன் விளையாட முடியாது என்பது கட்டுப்பாட்டுச்சபை யின்வலியுறுத்தலாக அமைந்தது. மேற் கிந்தியத் தீவுகளுக்காக நீண்ட காலம் விளையாடியிருக்கும் என்னை, இதை விட நன்றாக நடத்தியிருக்க வேண்டும் என்பதே எனது உணர்வு. என்னை போன்ற ஒரு வீரரையே இது போன்று நடத்துகிறார்கள் என்றால், எதிர்கால இளம் வீரர்களை எப்படி நடத்துவார்கள் என்பதை யோசித்து பாருங்கள்? இது மோசமான அறிகுறி அல்லவா? அந்த வகையில் நோக்கப்போனால் எனது ஓய்வு ஒருவிதகட்டாயத்தின் அடிப்படையி லேயே அமைந்தது என்றார். (ம)

# ரி-20 உலகக்கிண்ணம் இந்திய அணி அறிவிப்பு

இந்தியாவில் இந்த வருடம் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் களமிறங்கிய அதே அணி சிறு மாற்றத் துடன் களமிறங்குகிறது. அதாவது மொகிற் சர்மா நீக்கப்பட்டு நெகி அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி விபரம் - டோனி (தலைவர்), ரோகித் சர்மா, சிகர் தவான், வீராட் கோக்லி, ரகானே, ரெய்னா, யுவராஜ் சிங், பாண்டியா, ஜடேயா, அஸ்வின், பும்ரா, நெக்ரா, ஹர்பஜன் சிங், முகமது சமி, பவன் நெகி. (ம)



# நெய்மருக்கு மேலும் சிக்கல்

மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், பிரேசிலின் தேசிய கால்பந்தாட்ட அணியின் தலைவரும் பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரருமான நெய்மர் மீண்டும் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பார்சிலோனா அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டபொழுது அணி நிர்வாகம் கொடுத்த தொகையை குறைத்துக் காட்டி வரி ஏய்ப்புச் செய்தமைக்காக அவருக்கு பெரும் தொகை பணம் அண்மையில் அபராதமாக விதிக்கப்பட்டிருந்தது. மட்டுமல்லாமல் நெய்மருக்குச் சொந்தமான நிறுவனங்களின் மூலமாகவும் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக மேலும் சில குற்றச்சாட்டுக்கள் அவர்மீது முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த புதிய குற்றச் சாட்டுக்களின் அடிப்படையில் நெய்மர் மீண்டும் பிரேசில் அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம)

# ஆஸ்திரேலிய வீராங்கனைக்குத் தடை



சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஆஸ்தி ரேலிய வீராங்கனை டைபா கிளியரிக்கு ஆறு மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியா - நியூசிலாந்து (ஆண்கள் அணிகள்) மோதிய டெஸ்ட் தொடர் நடந்தது. இந்தத் தொடரில் குறித்த வீராங்கனை சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது. அதாவது ஆட்டத்தின் முடிவு இவ்வாறு அமையும் என அவர் பணத்துக்கு பந்தயம் செய்ததாக தெரி விக்கப்பட்டது. வீராங்கனையும் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை யடுத்து ஆறு மாதம் சிறைத்தண்டனை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 18 மாத ங்கள் சூதாட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங் கேற்க வேண்டும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம)

# ரி-20 உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷ் அணி அறிவிப்பு

இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண் ணத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. உலகக்கிண்ணத் தொடருக்கான நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் பங்க ளாதேஷ் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணி விவரம்: மோர் ரசா (தலைவர்), சகிப் அல் கசன், தமிம் இக்பால், முகமது மிதுன், முகமதுல்லா, ரகிம், சவுமியா சர்கர், ரகுமான், கொசைன், மு.ரகு மான், அல் அமீன் கொசைன், தஸ்கின் அகமது, அரபாத் சன்னி, அபு கைதர், நுருல் கசன். (ம)

Personal and Group Classes
உயர்தர மாணவர்களுக்கான (A/L)
இணைந்த கணிதம்
தொடர்பு: 077 211 2291

கார் விற்பனைக்கு
ஒக்ஸ்போட் 8ஸ்ரீ - XXXX
பெற்றோல் கார்
விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :- 0777946713

மொழி வகுப்புகள்
Deutsch
Dutch
French
Italian
விவேகானந்த அக்கடமி
221/1, ...
021 321 6928, 077 484 2464

PEARSON edexcel
BTEC HND
CIVIL ENGINEERING
(Construction & the Built Environment)
071 777 5666
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

மாணவர்களின் உள்ளத்திலிருந்து

எனது உயர்கல்விக்கு Civil Engineering துறையை IIS இல் தேர்வு செய்தமையானது என்னுடைய வாழ்வில் ஓர் மறக்க முடியாத மைல்கல்லாக அமைகின்றது. தொழில் சார் நிபுணர்களின் தனிப்பட்ட கவனிப்பும் ... எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளரா... IIS நிறுவனம் ...

A/L PERSONAL CLASS
Biology
Chemistry
Theory & 37 வருட Pastpapers கற்பிக்கப்படும்.
T.P No: 076 654 1292

PERSONAL CLASS
இரசாயனவியல்
சி.அங்கதன் B.Sc (Chem.sp)
37 வருட வினாத்தாள்கள் கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு: 077 618 9610

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.